சித்த மருத்துவ சிந்தாமணி

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)



இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை
சென்னை - 600 106

தமிழ் மருத்துவ நூல் வரிசை - 12

சித்த மருத்துவ சிந்தாமணி

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு :

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

2008

பதிப்புத் தகவல்

நூல் பெயர் : சித்த மருத்துவ சிந்தாமணி
(தமிழ் மருத்துவ நூல் வரிசை - 12)
ஓலைச்சுவடித் தொகுப்பு நூல்

பதிப்பு : சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 106

பதிப்புரிமை : தமிழ் நாட்டரசு

பொருள் : சித்த மருத்துவம்

பதிப்பாண்டு : முதற்பதிப்பு 2008

பக்கங்கள் : xii + 152 = 164

படிகள் : 1000

தாள் அளவு : 1 × 8 டெம்மி

அச்சுப் புள்ளி : 12 புள்ளி

கட்டமைப்பு : சாதாரண அட்டைக்கட்டு

விலை : ரூ. 70.00

அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : 044 - 24661807, 24987562

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை,
சென்னை - 600 106.

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்
முனைவர் மரு. ஆனைவாரி ஆனந்தன், பிஎச்.டி.
சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு)

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர்
மரு. எஸ். இராமலட்சுமி அம்மாள், பி.ஐ.எம். (சி)

உதவி பதிப்பாசியர்கள்
திரு. த. அழகப்பராசு, M.A., M.A., M.L.I.S., M.Phil., B.Ed.
திருமதி. செ.இரா. பிரசன்னா, M.A., M.Phil., B.Ed.,

சுவடி நகலெடுப்போர்
திரு. வெ. சாரங்கபாணி
திருமதி. த. லெட்சுமி
திருமதி. நா. பாக்கியசுந்தரி, B.A.

ஜி.ஏ. ராஜ்குமார், இ.ஆ.ப.,
முதன்மை செயலர் மற்றும்
இயக்குநர்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்குநரகம், சென்னை - 600 106.

வாழ்த்துரை

அரும்பெரும் பெட்டகங்களாகத் திகழ்கின்ற ஓலைச் சுவடிகளிலிருந்து அடுத்தடுத்து நூல்கள் வெளிவருவது மகிழ்வைத் தருகிறது.

நாம் இன்று போற்றி வளர்த்து வரும் சித்த மருத்துவத்திற்கு அடிப்படையாகத் திகழ்கின்ற ஓலைச்சுவடிகள் அதிக அளவில் பதிப்பிக்கப்பட்டு உலகோர் பயன்பெற வேண்டும் என்பது என் அவா.

இந்திய மருத்துவ இயக்ககத்தின் ஓலைச்சுவடி நகல் பிரிவினின்றும் **சித்த மருத்துவ சிந்தாமணி** எனும் இந்நூல் தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசையில் பன்னிரண்டாவது நூலாக வெளியிடப்படுகிறது. 350 பாடல்களைக் கொண்ட இந்நூலில் 90-க்கும் மேற்பட்ட மருத்துவ முறைகள் கூறப் பட்டுள்ளன.

அவ்வகையில் ஓலைச்சுவடியினின்றும் வெளியிடப் படும் சித்த மருத்துவ சிந்தாமணி எனும் நூலின் பதிப்புப் பணியை மேற்கொண்ட நூல் வெளியீட்டுப் பிரிவைச் சார்ந்த தனி அலுவலர், ஆய்வு மருத்துவ அலுவலர், தமிழ்ப் புலவர்கள், சுவடி படியெடுப்போர் யாவர்க்கும் என் வாழ்த்துகள்.

நன்முறையில் அச்சிட்டளித்த சென்னை, யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் எனது பாராட்டுகள்.

(ஜி.ஏ. ராஜ்குமார்)

ஆய்வுரை

சித்த மருத்துவ சிந்தாமணி எனும் இந்நூல் நமது இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரக ஓலைச் சுவடி யினின்றும் பதிப்பிக்கப்படும் நூலாகும். இதில் ஏறத்தாழ 90-க்கும் மேற்பட்ட மருத்துவ முறைகள், மருந்து செய்யும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

சுவடியில் ஆசிரியரின் பெயரை அறியும் குறிப்புகள் ஏதுமில்லை. சுவடியின் நடை இந்நூல் பிற்கால நூல் என்பதைக் காட்டுகிறது.

முதலில் நாடிகளின் விவரம் சொல்லி பின் மாத்திரை வகைகளைச் சொல்கிறார் ஆசிரியர். வயிரவன், ராட்சதன், வேந்தன், சிந்தாமணி, மாத்திரை என மாத்திரைகளைப் பல பெயர் சூட்டி அழைக்கிறார். அதைத்தொடர்ந்து லேகியங் களைச் சொல்கிறார். பின்னர் சூரணம், தைலம், நெய், எண்ணெய் எனத் தொடர்ந்து சொல்லிய ஆசிரியர் செந்தூரத்தையும், பற்பத்தையும் சொல்கிறார்.

மருந்துகளின் அடிப்படையில் பாடல்களை அமைத்த ஆசிரியர் எண்ணெய் முடிந்தவுடன் கலிக்கம், ஆக்கிராணம், நசியம் இவற்றையும் விளக்குகிறார். செந்தூரமும் பற்பமும் முடிந்த பின்னர் சில தைலம், குடிநீர், மாத்திரை இவற்றையும் விளக்குகிறார்.

இவற்றை முறைப்படுத்தி மருந்துகளின் வாழ்நாள் அடிப்படையில் அமைக்க முயன்றும் முடியவில்லை. ஆசிரியர் மேற்கொண்ட அமைப்பு முறையை மாற்றும்போது அந்தாதி

முறைகள் மாறுவதால் ஓலைச்சுவடியில் இருந்தவாறே பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் இந்த அந்தாதி அமைப்புமுறை ஓலைச்சுவடியில் முதலில் அமைந்துள்ள நாடிகுறித்த பாடல்களில் காணமுடியவில்லை. எனவே இந்த நாடிகள் விவரம் சொல்லும் 30 பாடல்கள் ஆசிரியரன்றி வேறு ஒருவரால் பின்னர் இடைச்செருகலாகச் சேர்க்கப் பட்டிருக்கலாம். நாடி பற்றி சொல்லும் பல பாடல்கள் நாம் விளங்கிக் கொள்ளும் வண்ணம் இல்லை.

பாடல்களின் சீரசையமைப்பைப்பற்றி சொல்லியாக வேண்டும். பல பாடல்கள் 4 அடிகளுக்குப் பதிலாக 3 அடிகளில் முடிகின்றன. ஒரேயொரு பாடல் மட்டும் 5 அடிகளில் காணப்படுகின்றது. சீரமைப்பை முழுமையாக்க இயலவில்லை. சில பாடல்களில் சில அடிகளின் சீர் ஒழுங்காக்க இயலவில்லை. ஒரு பாடலின் ஓரடியில் ஏழு சீரும், இன்னொரு அடியில் எட்டு சீரும் அமைகின்றன. அவ்வாறு அமையும்போதும் ஒரு பாடலின் எல்லா அடிகளும் ஒரே ஒழுங்கமைவில் இல்லை. எதுகை, மோனை போன்றனவும் முழுமையாக இல்லை.

இந்த ஓலைச்சுவடியிலுள்ள பாடல்கள் எளிமையாகக் காணப்பட்டாலும் பல பாடல்களில் தொடரோ, தொடர்களோ விளங்கிக்கொள்ள முடியாவண்ணம் உள்ளன. அவ்வாறு அறிந்துகொள்ள முடியா பாடல்களும் கூட அவ்வாறே பதிப்பிக்கப்பட்டுள்ளன. புரியா பாடல்களை விட்டுப் பதிப்பித்து விட்டால் சுவடிப் பாடல்களின் தொடர்ச்சி விடுபடுவதோடு, அவை மீண்டும் பதிப்பேற வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே அவற்றைப் பதிப்பித்தோம்.

பொருளடக்கம்

வ.எண்.	பாடல் பொருள்	பக்க எண்.
1.	நாடிகள் விவரம்	1
2.	சதானந்த வயிரவ மாத்திரை	13
3.	இரசானந்த வயிரவ மாத்திரை	13
4.	வாத ராட்சதக் குளிகை	14
5.	சுயமாக்கினி செந்தூரம்	15
6.	தயிரிய வேந்தன் செந்தூரம்	16
7.	கபாட மாத்திரை	17
8.	பூபதி மாத்திரை	18
9.	இரச சிந்தாமணி	20
10.	கோரோசனை மாத்திரை	22
11.	பூமணி மாத்திரை	23
12.	அர்த்தநாரீசுபரன்	24
13.	சிலோதாரி மாத்திரை	26
14.	கரிசாலை லேகியம்	26
15.	கண்டங்கத்திரி லேகியம்	29
16.	பஞ்சதீபாக்கினி லேகியம்	31
17.	கண்டங்கத்திரி லேகியம் (வேறுமுறை)	32
18.	சிந்தாதிரி லேகியம்	33
19.	மகாவில்வாதி லேகியம்	35
20.	சரபங்க வில்வாதி லேகியம்	37
21.	கண்டங்கத்திரி லேகியம் (பிரிதொரு முறை)	39
22.	கபாட லேகியம்	42

23.	திப்பிலி இரசாயனம்	43
24.	மதுத்த மணி	44
25.	சௌபாக்கியச்சுண்டி	46
26.	கூழ்ப்பாண்ட லேகியம்	48
27.	அக்கினியாஞ்சூரணம்	50
28.	திரிதோட சூரணம்	50
29.	அசுவகெந்தி சூரணம்	51
30.	இஞ்சி சூரணம்	52
31.	தாளிசபத்திரி சூரணம்	53
32.	பஞ்சதீபாக்கினி சூரணம்	54
33.	நிலவாகைச் சூரணம்	55
34.	வல்லாரைச் சூரணம்	56
35.	சஞ்சீவி சூரணம்	58
36.	ஏலாதிச் சூரணம்	59
37.	அசுவகெந்தி பலராட்சசத் தைலம்	60
38.	வில்வாதித் தைலம்	62
39.	குமரித் தைலம்	64
40.	கொம்பரக்குத் தைலம்	66
41.	பிருங்காமலகத் தைலம்	67
42.	சந்தனாதித் தைலம்	69
43.	பொன்னாங்காணித் தைலம்	72
44.	கீழ்க்காய்நெல்லித் தைலம்	73
45.	வேப்பெண்ணெய்த் தைலம்	74
46.	நிலப்பனை நெய்	75
47.	பொன்னாங்காணி நெய்	77

48.	புளியாரை நெய்	79
49.	வல்லாரை நெய்	80
50.	கூழ்ப்பாண்ட நெய்	81
51.	தூ துவளை நெய்	83
52.	கண்டங்கத்திரி நெய்	85
53.	கணத்தெண்ணெய்	86
54.	கரப்பானெண்ணெய்	88
55.	மாந்த எண்ணெய்	89
56.	மேகத் தெண்ணெய்	90
57.	கர்ப்பநோய்க்கு வீழி எண்ணெய்	92
58.	மேகத்திற்கு எண்ணெய்	93
59.	கலிங்காதி எண்ணெய்	94
60.	வாய்வுக்கு எண்ணெய்	96
61.	சுகசீதபேதி எண்ணெய்	97
62.	பழத்தெண்ணெய்	98
63.	வீரபத்திர கலிக்கம்	99
64.	ஆக்கிராணம்	99
65.	நசியம்	100
66.	கொண்டவிழ்தம்	100
67.	குருவுபதேசம்	101
68.	லோக செந்தூரம்	101
69.	காந்தம்	103
70.	அயக்காந்தச் செந்தூரம்	104
71.	திருலோகச் செந்தூரம்	105
72.	பஞ்சலோகச் செந்தூரம்	107

73.	கிட்டச் செந்தூரம்	108
74.	அப்பிரகச் செந்தூரம்	110
75.	துருசுக்குரு	112
76.	இரச பற்பம்	113
77.	தாளக பற்பம்	114
78.	வங்க பற்பம்	115
79.	நாகபற்பம்	116
80.	தாமிர பற்பம்	117
81.	வெங்கார பற்பம்	118
82.	பவளபற்பம்	120
83.	சன்னித் தைலம்	121
84.	வாத சுரத்திற்குக் குடிநீர்	124
85.	பித்த சுரத்துக்குக் குடிநீர்	126
86.	சிலேட்டும சுரம் தீரக் குடிநீர்	127
87.	சன்னி, ஏழுதோடம்	128
88.	செந்தூரம்	129
89.	காளகண்ட மேக நாராயணன்	134
90.	இரசலோக செந்தூரம்	136
91.	இரசகற்பூரம்	138
92.	காரீயச் செந்தூரம்	140
93.	சந்திரோதயம்	141

ஓகூ

சித்த மருத்துவ சிந்தாமணி

நாடிகள் விவரம்

கரிமுக னடியை வாழ்த்தி
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்குலத்தின் மேலே
பிடித்துடன் நடுவே தொட்டால்
வொருவிர லோடில் வாதம்மற்
றிருவிர லோடில் பித்தந்
திருவிரல் மூன்றி லோடில்
சேத்தும னாடி யாமே! 1

யானை முகனின் பாதத்தினை வாழ்த்தி நாடி பார்க்கும் போது பெருவிரலிலிருந்து அங்குலத்திற்கு மேலே கையைப் பிடித்து நடுவில் தொட்டால் முதல் ஒரு விரலில் தெரிவது வாதம். இரண்டாம் விரலில் (நடுவிரல்) தெரிவது பித்தம். மூன்றாம் விரலில் விளங்குவது சிலேத்தும நாடியாகும்.

ஆகிய நாடி மூன்றும்
படபடத் தோடில் சன்னி
வாகினி யன்னங் கோழி
மயிலென நடக்கும் வாதம்
ஏகிய யாமை யட்டை
யிவையென நடக்கும் பித்தம்
தேகிய தவளை பாம்பு
போலுமாஞ் சேட்டுமந் தானே! 2

மேற்கூறப்பட்ட வாத, பித்த, கப நாடிகள் மூன்றும் தன்னளவில் இல்லாது பதட்டத்துடன் இருந்தால் சன்னியாகும். வாதநாடியின் துடிப்பு அன்னம், கோழி, மயிலின் நடையை ஒத்திருக்கும். பித்தநாடியின் துடிப்பு ஆமை, அட்டையின் நடையையும் சிலேத்தும நாடியின் நடை தவளை, பாம்பு இவற்றின் நடையையும் போலிருக்கும்.

சேட்டும மெழுந்தி ருக்கில்
தித்திப்பு நாவி லேறும்
மேற்றிய கசப்பு மிறி
யெழும்பிடில் பித்த மாகும்
மாற்றிய புளிப்பு மீறில்
வந்திடும் வாத மாகுஞ்
சிலேட்டும தண்ணீர் பித்தந்
தீகாத்து வாய்வு மாமே! 3

உடலில் சிலேத்துமம் அதிகமாகில் நாக்கில் இனிப்புச் சுவையும், பித்தம் அதிகமானால் கசப்பும், வாதம் அதிகமானால் புளிப்புச் சுவையும் தோன்றும். சிலேத்துமம் தண்ணீரின் தன்மையையும், பித்தம் நெருப்பின் தன்மையையும், வாயு காற்றின் இயல்பையும் ஒத்திருக்கும்.

வாதத்தில் வாத மாகில்
வளர்ந்திடு மன்னம் போல
தீதுற்ற உடலும் நொந்து
நிகழ்ச்சியாய்ச் சுருங்கும் வாங்கும்
ஆதத்து பதரு மேனி
அசனமு மற்ப மாகும்
ஏதத்த தனத்தின் மின்னே
எண்ணியே அறிந்து சொல்லே! 4

வாதத்தில் வாதம் மேலே கூடின் அன்னத்தின் நடையை ஒத்திருக்கும். உடல் வலித்தல், மெலிதல், நடுங்குதல், உணவு ஏற்காமை ஆகிய குறிகுணங்களையுண்டாக்கும்.

வாதத்தில் பித்த மாகில்
வாயது குழறிப் பேசும்
பேதித்து குளிருங் காலில்
விக்கமும் பெருக உண்டாம்
தாதுற்ற புத்தி தானும்
தடைபடுந் தடங்கண் மாதே! 5

வாதத்தில் பித்தம் சேர்ந்தால் நாக்கு குழறுதல், குளிருண்டாதல், காலில் வீக்கமுண்டாதல், அறிவு வேறுபடுதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

வாதத்தில் சேஷ்ட்டும மாகில்
வலியொடு வீக்க முண்டாம்
பேதித்து தலையி டித்து
பிணங்கியே குணங்கள் வேறாய்
தீதுற்று மெய்வெ ளுத்து
திடமுட னசனஞ் செல்லா
பேதித்து நாவு பேசும்
பெருக்கவே வீக்க முண்டாம்
கோதித்து வயிறு விம்மி
குடல்தனைப் பிரட்டும் தானே! 6

வாதத்தில் கபம் சேர்ந்தால் தலைவலி, உடல்வலி, உடல்வீக்கம், உணவு ஏற்காமை, நாக்கு முன்பின் மாறிப் பேசல், வயிறு வீக்கம், குடலைப்பிரட்டுதல் ஆகிய குறி குணங்களையுண்டாக்கும்.

பித்தத்தில் பித்த மாகில்
பிதற்றிடுங் கிறுகி றுக்கும்
சத்தியு மதிக மாகும்
சரீரத்தில் இளைப்பு முண்டாம்
அத்தியா யுலரும் மேனி
ஆகமும் வேற தாகும்
வத்தியே வெளுத்துக் காயம்
வறண்டுபின் வீக்க முண்டாம்! 7

பித்தத்தில் பித்தம் இணைந்தால் மயக்கமுண்டாதல், வாந்தி அதிகமாதல், உடலிளைத்தல், சதையிழந்து, எலும்பும் தோலுமாதல், உடல் வற்றி வெளுத்து வறட்சியாய் வீக்க முண்டாதல் ஆகிய குணங்களைத் தோற்றுவிக்கும்.

பித்தத்தில் வாத மாகில்
பிடரியுங் காலுங் கையுங்
குற்றறு போலே யாகுங்
குறுகிமெய் பதறும் பின்னே
அஸ்தியா யுலரும் மேனி
ஆகமுஞ் சுரத்தால் னோவாம்
புத்தியு மடியு மிக்க
பொறுமை போய்க் கோபமாமே! 8

பித்தத்தில் வாதம் சேர்ந்தால் கழுத்து, கால், கை குத்தி வலித்தல், உடல் பதறுதல், எலும்பாய் வற்றுதல், சுரமடித்தல், அறிவு மயங்கல், பொறுமையிழந்து கோபமாதல் ஆகிய குறிகுணங்களையுண்டாக்கும்.

பித்தத்தில் சேஷ்ட்டும மாகில்
பிதற்றி யேவாய் குழறுஞ்
சத்தியே வாய்நீர் தானும்
தானறி யாம லோடும்
சுத்திடும் பேய்கள் போல
சுழற்றியே வயிற்றில் னோவாம்
பித்தமும் எடுத்துக் கொட்டி
பிடரியில் நோவ தாமே! 9

பித்தத்தில் சிலேத்துமம் சேர்ந்தால் பிதற்றுதல், சொற்கள் தடுமாறுதல், வாந்தியாதல், வாய்நீர் வழிந்தோடுதல், வயிற்றில் அதிக வலி, பித்தம் அதிகமாகி கழுத்து வலித்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

வாட்டிடும் சிலேட்டு மத்தில்
வந்திடும் வாத மாகில்
தாட்டிய கால்கள் போல
நரம்பெல்லாம் வலித்து நிற்கும்
கூட்டியே பிடரி தானும்
குண்ணவே வலிக்கு மாகில்

தாட்டிய விழியின் மேலாய்
நாக்குவாய் குழறுந் தானே! 10

சிலேத்துமத்தில் வாதம் சேர்ந்தால் நரம்புகள் வலித்தல், கழுத்து வலித்தல், விழிகள் மேல்நோக்கிப் பார்த்தல், குழறிப் பேசுதல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

சேட்டுமத்தில் பித்த மாகில்
தின்பது கசப்புண் டாகும்
பார்ப்புறு நாக்கு தன்னில்
பலவிதம் புளிப்பி னிப்பாம்
சேர்ப்பது பேச்சு மாறுந்
திடமில்லை கோழை யாகும்
சார்ப்பது கண்ணுப் பீளை
சாறுமே சத்தம் வேறாம்! 11

சிலேத்துமத்தில் பித்தம் சேரும்போது சாப்பிடும் பொருட்கள் கசப்பாக இருத்தல், நாக்கினில் புளிப்பு, இனிப்புச் சுவை தோன்றுதல், சொற்கள் மாறிப் பேசல், கோழை அதிகமாதல், கண்ணில் பீளை தோன்றுதல் ஆகிய குறிகுணங் களைக் காட்டும்.

சேட்டுமத்தில் சேட்டும மாகில்
திமிர்தமாய் யாவுஞ் சொன்னோம்
ஆத்துமமும் நல்ல தல்ல
அழிவது மெய்கண் டாயே
கூத்துவ னதுவே யாகுங்
குறுமுனி வட்டங் கொள்ளு
சாத்திர மறிந்து சொன்னோம்
யாத்திரை நாடி தானே! 12

சிலேத்துமத்தில் சிலேத்துமம் சேரும்போது மனதும் அமைதியாக இருக்காது. உடல் அழியும். கூற்றுவன் நிச்சயம் தொடர்வான் என்று சாத்திரத்தை அறிந்து கூறினோம். உயிர் கொல்லும் நாடி அதுவே ஆகும்.

காலமே சேட்டும நாடி
கட்டிச்சுப் பித்த நாடி
மாலையில் வாத நாடி
வகைதப்பிப் பதறி நன்றா
ஏலவே யிவர்கட் கெல்லாம்
இயம்பினா ரிதுதா னென்று
நாலஞ்சில் மரண மென்று
நன்முனி அருளிச் செய்தார்! 13

காலையில் சிலேத்தும நாடியும் மதியத்தில் பித்த நாடியும் மாலையில் வாதநாடியும் முறையின்றி தன்னளவினின்று திரிந்து பதறினால் இருபது நாளில் மரணம் நிகழும் என்று முனிவர் இயம்பியுள்ளார்.

போற்றிய நாடி தானும்
போத்துப்போல் பறந்த டித்தால்
கீற்றுவா னுதலே மிக்க
கிஞ்சுக மானே கேளாய்
காத்துமே திங்க ளொன்றில்
கருதியே தீரா விட்டால்
மாத்திய மாதம் பத்தில்
மரணமென் றுரைக்க லாமே! 14

மேலே கூறிய நாடிகள் சிட்டுக்குருவி போன்று பறந்து ஆடினால் அதனை ஒரு மாதத்தில் தீர்க்க வேண்டும். தீர்க்கா விட்டால் பத்து மாதத்தில் இறந்து விடுவான் என்று கூறலாம்.

குறித்திடும் சேட்டும நாடி
குதிரைபோல் வலித்து நன்றாய்
கருத்திடும் விழியாய் நல்ல
காரிழை யாளே கேளாய்
மறுத்திவை பேச வேண்டாம்
வயதிவை முகிந்து தென்று
பொறுப்பில்லை திங்க ளொன்றில்
புகண்டிடும் மரண மென்றே! 15

சிலேத்தும நாடியானது குதிரைபோல் நடந்ததென்றால் பேசுவதற்கொன்றுமில்லை. மரணம் ஒரு மாதத்தில் உறுதியென்று அறிந்து கொள்ளலாம்.

ஆதித்தன் சந்திரன் போல
அந்தித்த நாடி தானும்
பேதித்து நிற்கு மாகில்
பெருக்கவே கையி னூடே
சோதித்துக் கண்டு னாடி
சுரங்களில் புக்கு மாகில்
வாதத்தில் வாய்வு பீடை
வந்துற நிற்குந் தானே! 16

சுரம் ஏற்பட்டிருக்கும்போது நாடி பார்த்தால் அது சூரியன், சந்திரன்போல் மாறுபட்டுக் காணும். அப்போது வாதத்தில் வாயுவும் (பீடை) துன்பமும் வந்து சேரும் என்பதாம்.

கடிந்ததோர் நாடி தன்னை
கருதியே பார்க்கும் போது
விடிந்தபின் சேட்டும நாடி
விதறியே துடித்து நின்றால்
கடிந்ததோர் பித்த நாடி
கட்டிசித்துத் துடிக்கு மாகில்
மடிந்தது வாத நாடி
மாலையில் மரணந் தானே! 17

சிலேத்தும நாடியானது நடுங்கியிருந்ததென்றால் பித்த நாடியானது மிக வேகமாகத் துடித்ததென்றால் வாத நாடி இருப்பதே தெரியாமல் இருந்ததென்றால் மாலையில் மரணம் நிகழ்வது உறுதியாகும்.

சேட்டும நாடி தானுந்
தியங்கிய மஞ்சைப் போல
நாட்டிய அட்டை போல
நடுங்கியே பதறி நின்றால்

கூட்டவே வேண்டா மேழு
நாளினில் மரண மென்று
நாட்டமா முனிவன் சொன்னார்
நயம்படக் குறித்துப் பாரே! 18

சிலேத்தும நாடி மயில் போன்றும் அட்டை போன்றும் நடுக்கத்துடன் இருந்தால் ஏழு நாளில் மரணமென்று முனிவர் கூறினார்.

ஏற்றிய தீபந் தன்னில்
எரிசுடர் முனையே போல
தோற்றிய நாடி தானும்
துயரற நடக்கு மாகில்
கூற்றினுக் கிடமு மில்லை
குறிப்பிட மறிந்து செய்யில்
மாற்றிய வாணாள் தானும்
வந்திடும் திண்ணந் தானே! 19

விளக்கின் சுடர் போன்று நாடியானது துன்பமறத் தெளிவாக இருந்தால் எமனுக்கு வேலையில்லை. குறிப்பறிந்து செய்யாதிருப்பின் மரணம்.

கண்ணும் பல்லுந் தான்கருத்து
கருது முச்சு வாய்திறந்து
உண்ணும் வயிற்றில் சேட்டுமமும்
ஓடி மிகவே தானடந்தால்
பண்ணும் மருந்து ஏறாது
பண்பாய் சுவாசம் எடுத்து
மண்ணும் விண்ணும் தாமறிய
மாள்வார் கண்டீர் மடமாதே 20

கண், பல் கருப்பாகி நிற்றல், வாய் திறந்து மூச்சுவிடல், வயிற்றில் சிலேத்துமம் அதிகமாதல் ஆகிய குறி குணங்கள் இருந்தால் மருந்து எதுவும் பயனளிக்காது. மிகுந்த சுவாசமாகி இறந்து போவார்.

இடைதுடை மார்பின் கீழே
எதிரிடப் பதறி யோடில்
முடுகிட வீங்கு மாகில்
மூவரி லொருவ ரோடில்
படகவே தாக மிஞ்சி
பஞ்சிடுங் கண்ணும் வாய்வும்
அடர்விக டங்கள் கண்டால்
அறிந்துகொள் மரண மென்றே 21

இடுப்பு, தொடை, மார்பின் கீழ் பகுதி இவற்றில் நாடி எதிரிடையாகப் பதறியோடுதல், அவ்விடங்களில் வீக்கம் காணல், மூன்று நாடிகளில் ஒன்று இவ்விடங்களில் ஓடுதல், கண் பஞ்சடைத்தல், வாயடைத்துப் போதல் ஆகிய குறி குணங்கள் கண்டால் உறுதியாக மரணமேற்படும்.

எடுக்கும் படுக்கு மெழுந்திருக்கில்
இளைத்தே மூச்சு தனைவாங்கும்
வடுக்கண் ணொத்த விழியிரண்டு
மலர விழிக்கும் வழிநோக்கும்
தொடுக்குந் தொடுத்த சேட்டுமமுந்
தொண்டை தன்னை யடைப்பிக்கும்
அடுத்து வருவ திதுகண்டால்
அறியீர் மரண அதிசயமே 22

நாடியானது நிலையின்றி ஓடும், படுக்கும், எழுந்திருக்கும், ஈனக்குரல் எழும்புதல், உடம்பு இளைத்தல், மூச்சு வாங்குதல், கண்கள் மலர விழித்தல், வழியையே பார்த்தல், தொண்டை அடைத்தல் ஆகிய குறி குணங்கள் கண்டால் மரணம் உறுதி யாகும்.

ஊசிபோல் முகமும் நொந்து
உடம்பெல்லாம் நரம்பு தோன்றி
பாசிபோல் கண்ட சித்து
பரந்திருள் மூல மாகில்

பேசிய நாவ றண்டு
மற்றது பிசத்தது மாகில்
காசினி யறியச் சொன்னோம்
கண்டுகொள் மரண மென்றே 23

முகம் வளமையிழந்து காணல், உடல்மெலிந்து நரம்பாகக் காட்சியளித்தல், பாசிபோல கண் இருளல், நாக்கு வறட்சி யாதல் ஆகிய குறிகுணங்கள் காணில் மரணம் என்று உலகோர் அறியக் கூறினோம்.

நாட்டியால் முன்னோர் சொன்ன
நற்குறி குணங்க ளாலும்
நீட்டிய விழியி னாலும்
நின்றநாள் குறிப்பி னாலும்
வாட்டிய மேனி யாலும்
மலமோடு நீரி னாலும்
சூட்டிய வியாதி தன்னை
சுகம்பெற அறிந்து சொல்லே! 24

சான்றோர் கூறிய குறி குணங்களாலும் விழி, நாள் குறிப்பு, உடல், மலம், சிறுநீர் ஆகியவற்றின் குறிகளாலும் நோய்களை அறிந்து கொள்ளலாம்.

சுகம்பெற அங்க மெல்லாம்
சுற்றியெண் குணங்க ளாய்ந்து
முகம்குறி நாடி மூக்குஞ்
செவிநுதல் நயனம் நாடி
அகமது அடைக்கும் நாடி
அத்திசை விடுதி நாடி
உகந்திடி உந்தி னாடி
உண்மையாய் நடைகள் பாரே! 25

முகம், குறி, நாடி, மூக்கு, செவி, நெற்றி, கண், வயிறு ஆகியவற்றில் தோன்றும் குறிகுணங்களை ஆராய்ந்து நோய்கள் பற்றி தெளிதல் வேண்டும்.

பார்மனக் கவலை யற்று
பலபல விசாரம் விட்டு
தேர்மனந் தெளிந்து நீயும்
செய்குண வழியி தென்று
ஊரக மலிந்து தன்னில்
ஒளிபல வியாதி செய்யும்
தீபன உண்டி யாலே
சேர்ந்திடும் நோய்கள் மானே! 26

மனக்கவலைகள் பலவற்றையும் நீக்கி பலவகையான துன்பங்களையும் ஒழித்து மனந் தெளிந்து, வருகின்ற குறி குணங்களை ஆராய்ந்து, உணவாலே நோய்கள் மலிகின்றன என்பதை அறிந்து கொள்வோம்.

சொல்லிய உந்தி தன்னில்
சூழ்ந்ததோர் இடத்தைப் பற்றி
எல்லையில் மீந்த னாடி
யெழுபத் தீரா யிரத்தில்
வல்லவர் புகழும் னாடி
பத்திலே ஏழு நீக்கி
நல்லதோர் நாடி மூன்றும்
நயந்துநீ ரறிந்து பாரே! 27

உந்தியில் சுற்றி இருக்கும் இடத்தைப் பற்றி எழுபத் தீராயிரம் நாடிகள் உள்ளன. அதில் அறிவில் வல்லோர் புகழ்ந்த நாடிகள் பத்தினுள் ஏழினை நீக்கி மற்ற மூன்றினை அறிந்து பார்க்க வேண்டும்.

தான்மிகக் குளித்துக் கொள்ளில்
தயங்கிய நாடி வாத
மீன்முகில் குழலாய் நெய்பால்
இறைச்சிபா லுண்டால் வாதந்
தின மிகவருங் கோழி
திண்ணவர் நாடி பித்தம்

ஆனநற் கனிகள் தன்னை
வாங்கினாற் வாத மாமே! 28

மீன், நெய், பால், இறைச்சி ஆகிய உணவுப்பொருட்களை உட்கொண்டால் வாதம் மிகும். கோழிக்கறி சாப்பிட்டால் பித்தம் அதிகரிக்கும். நல்ல கனிகள் பலவற்றை உட்கொண்டால் வாதம் அதிகமாகும்.

வாதத்தி லிளநீர் தன்னை
வாங்கினாற் நாடி வாதம்
போதவே கோபம் உள்ளே
பொருமிறை னாடி பித்தங்
கோதைசேர் குழலாள் தன்னைக்
கூடினாற் நாடி பித்தந்
தீதிலா முனிவர் சொன்னார்
இயல்பிட லறியத் தானே! 29

வாதநோயாளி இளநீரைச் சேர்த்துக்கொண்டால் வாதம், நாடியில் அதிகம் காட்டும். கோபம் அதிகமாகப் பொருமி பித்தத்தை நாடியில் காட்டும். உடலுறவு மேற்கொண்டால் பித்தம் கூடும் என்று குற்றமற்ற முனிவர்கள் நாம் அறியும்படி இயம்பினார்கள்.

தானென உலகத் துள்ளே
தயங்கினார் நாடி பார்க்க
வானேது மின்னே கேளாய்
வரும்புல்லன் சொல்லக் கேளு
நானேன் புருஷர்க் கெல்லாம்
நாடிதான் வலக்கை யாகும்
தேனெனு மடவார்க் கெல்லாம்
திடம்பெற யிடக்கை பாரே! 30

உலகில் நாடி பார்ப்பதென்றால் ஆண்களுக்கு வலக்கையும், பெண்களுக்கு இடக்கையும் உகந்ததாகும்.

சதானந்த வயிரவ மாத்திரை

பாரப்பா புலத்தியனே சத்தா னந்த
பரிவான வயிரவன்தான் சொல்லக் கேளு
சேரப்பா திரிகடுகு செகப்பு நாபி
திறமான எரிச்சலொடு பேரீச்ச மேலம்
நீரப்பா சமன்கூட்டி பழச்சாற்றா லாட்டி
நிசமாக நால்சாம மரைத்துக் கொண்டு
தாரப்பா குன்றிபோல் நிழலு லர்த்தி
தப்பாமல் செப்பில்வைத்து சொல்லக் கேளே! 31

கேளப்பா யிஞ்சினி ருள்ளித் தயிலங்
கெடியான முலைப்பாலில் குடித்தா யானால்
தாளப்பா தோஷமென்ற தெல்லாம் போகும்
தப்பாமல் கண்ணிலிடத் தீரும் தீரும்
தேளப்பா சதானந்த வயிர வன்தான்
செப்புகிறேன் செகப்புனால் பொரிதா னெட்டே! 32

சதானந்த வயிரவன் என்னும் குளிகை செய்யும் முறையைக் கேட்பாயாக. சுக்கு, மிளகு, திப்பிலி, சிகப்பு நாபி, பேரீச்சு, ஏலம் இவற்றைச் சமமாக எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரமரைத்து 130 மி.கி. அளவுள்ள குளிகை களாகச் செய்து நிழலில் உலர்த்தி செப்பில் வைத்து பத்திரப் படுத்திக் கொள்க. இஞ்சிச்சாறு, பூண்டுத் தைலம், தாய்ப்பால் இவற்றில் ஏதேனுமொன்றில் இழைத்துக் கொடுக்க தோடங்கள் அனைத்தும் நீங்கும். தொடர்ந்து கண்ணிலிடத் தீரும்.

இரசானந்த வயிரவ மாத்திரை

எட்டப்பா நாபியி ராறு மாகும்
மிதமான திப்பிலியும் பன்னி ரண்டு
தட்டப்பா இருசீரகந் தன்னா லாட்டு
தளமாக நால்சாமம் அரைத்துக் கொண்டு
விட்டப்பா மிளகுபோல் நிழலு லர்த்தி
விருதான செப்பில்வைத்து சொல்லக் கேளு

அட்டப்பா வனுபான மறிந்து போடு
அப்பனே சன்னியென்ற மூலம் போமே! 33

இலிங்கம் - 4 கி., பொரிகாரம் - 8 கி., சுத்திசெய்த நாபி, திப்பிலி, வகைக்கு 12 கி. நற்சீரகம், கருஞ்சீரகம், ஆகியவற்றைக் குறிப்பிட்ட அளவெடுத்து பன்னிரெண்டு மணி நேரமரைத்து மிளகளவு குளிகைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்க. அதனைச் செப்புச் சிமிழில் பத்திரப்படுத்தி தக்க அனுபானமறிந்து கொடுக்க சன்னி நீங்கும்.

வாத ராட்சதக் குளிகை

போமப்பா வாதராட் சதனைக் கேளு
புதுமையாய் வேந்தனொடு னாற்றங் காந்தம்
சேமப்பா அப்பிரேகம் தாம்பூர பற்பம்
திறமாக அஞ்சுவிதஞ் சமனாய்க் கூட்டி
தாமப்பா வெள்ளைச்சா ரணையின் சாற்றால்
தளமாக நால்சாமம் அரைத்த பின்பு
வேமப்பா சிந்தியுட கஷாயந் தன்னால்
வெகுசுருக்காய் நால்சாம மரைத்தி டாயே! 34

அரைத்திடுவாய் கொடுவேலிக் கஷாயந் தன்னால்
அப்பனே துளசிச்சார் திருமலையின் கஷாயம்
அரைத்திடுவாய் வெவ்வேறே சாமம் ரெண்டு
அப்பனே மொத்தையா யுருட்டிக் கொண்டு
அரைத்திடுவாய் சாரணையின் இலைய ரைத்து
அப்பனே மருந்தையுள்ளே வைத்து மூடி
அரைத்திடுவாய் யிலைகருகப் புடத்தைப் போடு
ஆகாகா பின்னெடுத்து அரைக்கக் கேளே! 35

கேளப்பா சித்திரமாய் மூலிக் கிஷாயம்
கிருபையாம் நால்சாம மரைத்துக் கொண்டு
நாளப்பா மும்மூன்று விராகனிடை வீதம்
நலமாக வேயுருட்டி தட்டிக் கொண்டு
தாளப்பா நிழலுலர்த்திச் செப்பில் வைத்து
தளமான சன்னிவகை தோஷ மெல்லாம்

வேளப்பா அனுபான மறிந்து போடு
வெகுசுருக்காய் வாதமெல்லாம் விழலாய்ப் போமே! 36

இரசம், கெந்தகம், காந்தம், அப்பிரகம், தாமிரபற்பம் இவை ஐந்தையும் சமமாய் எடுத்து வெள்ளைச் சாரணைச் சாற்றால் பன்னிரெண்டு மணி நேரமும் சீந்திற் குடிநீரால் பன்னிரெண்டு மணி நேரமும் கொடிவேலிக் குடிநீரிலும் துளசிச்சாற்றிலும் முறையே ஆறு மணி நேரமுமரைத்துக் கொள்க. சாரணையின் இலையை அரைத்து மருந்து வைக்கும் மூசை செய்து அதற்குள் மருந்தை வைத்து மூடி இலை கருகும் அளவுக்குப் புடத்தைப் போடுக.

ஆறியபின் எடுத்துச் சித்திர மூலிக் குடிநீரால் பன்னிரெண்டு மணி நேரமரைத்துப் பன்னிரெண்டு கிராம் அளவு குளிகை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். உலர்ந்த பின் எடுத்துச் சிமிழில் வைத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும். தக்க அனுபானம் அறிந்து கொடுக்க சன்னி வகைகள், தோடங்கள், வாதங்கள் அனைத்தும் நீங்கும்.

சுயமாக்கினி செந்தூரம்

போமப்பா சுயமாக்கினி சொல்லக் கேளு
புகழான ரசம்மூனு நாற்றம் ரெண்டு
காமப்பா காந்தசெந் தூரம் நாலு
கலங்காதே சிலைரெண்டு சிகப்பு ரெண்டு
தாமப்பா திட்சணசெந் தூரம் பத்து
தவறாமல் குமரிச்சாற் றப்புக் கேளு
ஆமப்பா புடமொன்று அரைத்து ருட்டி
அப்பனே யிருசீரகந் திரிகடுகுந் தூளே! 37

தூளிலே தேன்கூட்டி பணவிடைதான் போட்டு
தொடர்ந்துஅரை மண்டலந்தான் கொண்டா யானால்
நாளிலே அக்கினியா மந்தந் தீரும்
நாடாது பிலிகையும் குன்மம் வாய்வு
தேளிலே வாய்வுவென்ற தெல்லாம் தீரும்
திறமான கவிசையொடு பாண்டு தீரும்

சூலிலே சுரமெல்லாம் சுருக்காய்த் தீரும்
சுகமாகும் பத்தியந்தான் புளிக்கசப்புத் தள்ளே! 38

இரசம் மூன்று பங்கு, கெந்தகம் இரண்டு பங்கு, காந்த செந்தூரம் நான்கு பங்கு, மனோசிலை இரண்டு பங்கு, இலிங்கம் இரண்டு பங்கு, தீட்சண செந்தூரம் பத்து பங்கு முறையே எடுத்து கற்றாழைச் சாற்றால் அரைத்து ஒரு புடமிட்டு எடுத்துச் செந்தூரமாக்கிக் கொள்க. நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றையும் சூரணமாக்கி ஒன்று கலந்து கொள்க. இத்துடன் 488 மி.கி. செந்தூரத்தைத் தேனில் கலந்து இருபது நாட்கள் கொடுத்தால் அக்கினி மந்தம், பீலிகை, குன்மம், வாய்வு, கவிசை, பாண்டு, சூலிலேற்படும் காய்ச்சல் ஆகியவை தீரும். புளிப்பு, கசப்புச் சுவையுள்ள பொருட் களை நீக்கவும்.

தயிரிய வேந்தன் செந்தூரம்

தள்ளவே இன்னமொரு சேதி கேளு
தயிரிய வேந்தனொன்று னாற்றம் ரெண்டு
விள்ளவே அயப்பொடிதான் னாலு கூட்டி
வித்தான குமரிச்சார் தன்னா லாட்டி
பள்ளவே நால்சாம மரைத்து ருட்டி
பாங்கான எருக்கிலையால் சுற்றிக் கட்டி
கள்ளவே பாண்டத்தில் பட்சம் வைத்து
கலங்காதே பொடிசெய்து திரிகடுகில் கொள்ள! 39

கொள்ளடா தேன்கூட்டி மண்ட லந்தான்
கொடியான குன்மமெட்டும் பிலிகையும் தீரும்
தள்ளடா பாண்டுவகை யெல்லாந் தீரும்
தளமான அக்கினியா மாந்தத் தீரும்
நள்ளடா இருசீரகந் தேனுங் கூட்டி
நலமாக மண்டலங்கால் கொண்டா யானால்
விள்ளடா சுரமென்ற தறுபத்து நாலும்
விட்டுவிட்டு கடற்புக்கும் விருது போடே! 40

தயிரியவேந்தன் எனும் இரசம் ஒரு பங்கு, கெந்தகம் இரண்டு பங்கு, அயப்பொடி நான்கு பங்கு எடுத்துக் கற்றாழைச் சாற்றால் பன்னிரெண்டு மணி நேரம் அரைத்து, குளிகைகளாக உருட்டி எருக்கிலை கொண்டு சுற்றிக் கட்டி பாத்திரத்தில் வைத்து பதினைந்து நாள் புடம் வைத்துக்கொள்க. ஆறிய பிறகு செந்தூரத்தைத் தக்க அளவு எடுத்து திரிகடுகுச் சூரணத் தையும் கலந்து தேனில் நாற்பது நாட்கள் உட்கொள்ள எட்டுவகைக் குன்மம், பீலிகை, பாண்டு வகைகள், அக்கினி மந்தம் தீரும்.

நற்சீரகம், கருஞ்சீரகத்தைப் பொடித்துத் தக்க அளவு செந்தூரத்துடன் சேர்த்துத் தேனுடன் கலந்து பத்து நாட்கள் உட்கொள்ள அறுபத்து நான்கு வகைச் சுரங்கள் தீரும்.

கபாட மாத்திரை

போடவே கபாடமென்ற மாத்திரைதான் கேளு
புகழான சாதிக்காய் பாதிரியுங் காயம்
நாடவே சிரகமும் விடையங் கிராம்பு
நலமான அபினிசடை வன்னி கற்பம்
தேடவே வெந்தயங் கழற்சி வித்து
திறமான குரோசாணி பதினொன் றுந்தான்
ஆடவே சமன்தூக்கி கல்வத் திட்டு
அப்பனே ஆனந்த மூலிச் சாறே! 41

சாத்தாலே நால்சாமம் அரைத்துக் கொண்டு
சாதகமா யிலந்தைவிரை பிரமா ணந்தான்
காத்தாலே மேதியென்ற தயிர்னாள் மூன்று
கசகாதே மதுவிலிடு மூன்று நாள்தான்
வாத்தாலே வாழையுட பூவின் சாற்றில்
வகையான தாளிசசாற்றி லிட்டா யானால்
வேத்தாலே ரெத்தமென்ற மூலங் கிராணி
விதமான சலக்கி ராணி யாமே! 42

ஆமப்பா சலக்கிராணி வாய்வுக் கிராணி
அப்பனே சூசிகா கிராணி தீரும்

போமப்பா சோரலாய் கழக்கி ராணி
பொய்க்காத நீர்தாகக் கிராணி தீரும்
தாமப்பா அதிசாரக் கடுப்புத் தீரும்
தப்பாது புளிகூட்டிப் பத்தியந்தான் போடே
நாமப்பா வயிற்றிலுள்ள கடுப்புத் தீரும்
நலமான பாண்டுவுட கிராணி தீரும்! *43*

சாதிக்காய், பாதிரி, பெருங்காயம், சீரகம், அதிவிடையம், கிராம்பு, அபினி, இலிங்கம், வெந்தயம், கழற்சி வித்து, குரோசாணி ஓமம் ஆகிய பதினொரு சரக்குகளைச் சம அளவெடுத்து கஞ்சாச்சாற்றில் பன்னிரெண்டு மணி நேரமரைத்து இலந்தை விதையளவு மாத்திரை செய்து கொள்க. அதனை மூன்று நாட்கள் எருமைத் தயிரிலும், மூன்று நாட்கள் தேனிலும், மூன்று நாட்கள் வாழைப்பூவின் சாற்றிலும் மேலும் மூன்று நாட்கள் தாளிசபத்திரியின் சாற்றிலும் முறையே உரைத்து, அளவறிந்து கொடுக்க இரத்த மூலக் கிராணி, சலக்கிராணி, வாய்வுக் கிராணி, சூசிகாகிராணி, கழக்கிராணி, நீர்தாகக் கிராணி, அதிசாரக் கடுப்பு, பாண்டு, கிராணி ஆகிய நோய்கள் தீரும். புளியை நீக்கிக் கொள்க. பத்தியமாக இருக்கவும்.

பூபதி மாத்திரை

போமப்பா சடலத்துள்ள நோய்கட் கெல்லாம்
பூபதிதான் மருந்தொன்று சொல்லக் கேளு
தாமப்பா தங்கமொடு வெள்ளி னாகந்
தளமான லோகமொடு முத்து ரெத்தினம்
நாடப்பா சூதமொடு கெந்தி லிங்கம்
நலமான சிலையொடு தார்சிங்கி னாபி
ஆமப்பா இவையெல்லாம் பழச்சாற் றாலே
ஆட்டியே நால்சாமம் வில்லை செய்யே! *44*

செய்யப்பா ரவியுலத்தி அகலில் வைத்து
திறமாக மேல்மூடி சீலை செய்து
வையப்பா முழுபுடத்தில் சிவந்து போகும்
வளமாக இடைக்கிடைதான் லிங்கக் கூட்டி

மெய்யப்பா முலைப்பாலால் னாலு சாமம்
விடாமலரை விரல்நீளம் உண்டை செய்து
கையப்பா நிழலுலர்த்தி செப்பில் வைத்து
கலங்காதே வயிரவர்க்குப் பூசை பண்ணே! 45

பண்ணியே பூபதியை முலைப்பா லுக்குள்
பரிவாக அரிசியிடை கொடுத்தால் கேளு
கன்னியே சன்னிபதி மூன்றுந் தீருந்
தப்பாது மேகமென்ற தேழுந் தீரும்
கன்னியே திருதோஷம் சங்கிலித மெல்லாங்
காணாது கடல்புக்குங் கருதிப் பாரு
விண்ணியே சிரசில்நின்ற தோஷ மெல்லாம்
வெகுசுருக்காய்த் தீருமடா விரைந்து பாரே! 46

பாரப்பா பூபதியை இஞ்சிச் சாற்றில்
பரிவான தேன்கூட்டிக் கொடுத்தால் கேளு
சாரப்பா சவமாகப் போனா லுந்தான்
சாதுரியப் பிராணன்வந்து சற்றே பேசும்
ஆரப்பா பிறமலபி யவ்வளவே யாகில்
ஆசித்துப் பேசிவிட்டு மரண மாவான்
தாரப்பா பூபதியைச் சொன்னேன் சொன்னேன்
சாதிச்சு வைத்தியஞ்செய் தர்ம மாமே! 47

இவ்வுலகில் உள்ள நோய்கள் தீர்வதற்கு பூபதி மாத்திரையைக் கூறுகிறேன்.

தங்கம், வெள்ளி, நாகம், இரும்பு, முத்து, இரத்தினம், சூதம், கெந்தி, இலிங்கம், மனோசிலை, மிருதாரசிங்கி, நாபி (குறிப்பிட்ட அளவு) ஆகியவற்றைத் தக்க அளவெடுத்து எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணி நேரமரைத்து வில்லை செய்து வெயிலில் உலர்த்திக் கொள்க. அகலில் அதனை வைத்து மேல் மூடி சீலை செய்து முழ அளவு புடத்தில் வைக்க செந்தூரமாகும். அதன் எடைக்குச் சம எடை லிங்கம் சேர்த்துத் தாய்ப்பால் விட்டு, பன்னிரெண்டு மணிநேரம் தொடர்ந்து அரைக்க வேண்டும். பின் விரலளவு

உருண்டை செய்து நிழலில் உலர்த்தி செப்பிலிட்டுப் பூசை செய்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

அதில் 65 மி.கி. அளவெடுத்துத் தாய்ப்பாலில் கொடுக்க பதிமூன்று வகை சன்னியும், ஏழுவகை மேகமும், தோடங்களும் தலையில் வரும் தோடங்களும் தீரும்.

மரணத்தின் இறுதி வாயிலிலுள்ள நபருக்கு, இஞ்சிச் சாற்றில் தேன் சேர்த்து அதில் பூபதி மாத்திரையைக் கொடுக்க பேசாதிருந்தவனும் சிறிது நேரம் பேசிவிட்டுப் பின் இறப்பான்.

இரச சிந்தாமணி

ஆமப்பா ரசசிந்தா மணியைக் கேளு
அப்பனே சூதமொடு சிவந்த ரத்தினம்
தாமப்பா தங்கமொடு வெள்ளி முத்து
தயவான பவளமொடு தீட்ச ணந்தான்
நாமப்பா சிலைகெந்தி அப்பிர கந்தான்
நலமாக வகைக்குயிரு கழஞ்சி கூட்டி
காமப்பால் விட்டரைப்பாய் சாமம் நாலு
கருவான சித்திரமூலக் கஷாயந் தானே! 48

கஷாயத்தி லரைத்திடுவாய் சாமம் நாலு
கருவாக எருக்கம்பால் சாமம் ரெண்டு
நியாயமாம் சோகிதனி லடைத்துக் கொண்டு
நிலவரமாய் மூலமென்ற சாம்ப லுக்குள்
வியாழமாம் அறைஅறையாய் வைத்து மூடி
விதமாக எழுசிலை மண்ணுஞ் செய்து
கியாழமாம் ரவிதனிலே உலரப் போட்டு
திறமாகக் கிசபுடத்தில் சென்று வாங்கே! 49

வாங்கியே இடைக்கிடைதான் சூதங் கூட்டி
மைந்தனே நாபிமுக் கழஞ்சி கூட்டி
ஒங்கியே னால்சாமம் திரிகடுகு கஷாயம்
உத்தமனே திரிபலையின் கஷாயந் தன்னால்

தேங்கியே இருசாமம் அரைத்த பின்பு
திறமாக எருக்கினுட பட்டைச் சாற்றில்
தாங்கியே ஒருசாம மரைத்து ருட்டி
தப்பாமல் நிழலுலர்த்தி செப்பில் வையே! 50

வைத்ததனை வயிரவர்க்குப் பூசை பண்ணு
வாகாகக் கணபதியைப் பூசை பண்ணு
தைத்ததொரு மாத்திரைக்குச் செபந்தானும் பண்ணு
தப்பாமல் தேவியைத்தான் பூசை பண்ணு
சித்திதரு மாத்திரையை அனுபா னத்தில்
திறமாகக் குன்றியிடை கொடுத்தால் கேளு
பத்திநின்ற சன்னிமுதல் தோஷ மெல்லாம்
பறக்குமடா சுரமென்ற தெல்லாந் தானே! 51

தானென்ற ரசசிந்தா மணியின் பேரை
சாற்றினால் எமதூதர் நடுங்கு வார்பார்
ஏனென்று இருந்தக்கால் வைத்தி யோரை
எய்துமோ மாத்திரைதா னியம்பக் கேளு
பானென்ற மாத்திரைகள் பண்பாய்ச் செய்து
பரிவான உலகத்தில் வைத்தி யஞ்செய்
தேனென்ற வைத்தியர்க்காய்ச் சொன்னே னின்னூல்
திறமான வாதியென்றால் செய்வான் பாரே! 52

சூதம், சிவந்த இரத்தினம், தங்கம், வெள்ளி, முத்து, பவளம், மனோசிலை, கெந்தகம், அப்பிரகம், எஃகு இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துத் தாய்ப்பால் விட்டு பன்னிரெண்டு மணி நேரமும் சித்திர மூலக் குடிநீரில் பன்னிரெண்டு மணி நேரமும் எருக்கம்பாலில் ஆறுமணி நேரமும் அரைத்துச் சோழியில் அடைத்துச் சாம்பலுக்குள் வைத்து மூடி ஏழுசீலை மண் செய்து கொள்க. வெயிலில் உலரச்செய்து 1000 வறட்டியில் புடம் போட செந்தூரமாகும்.

இவ்வெடைக்குச் சமமாக சூதமும் நாபி 15 கிராமும் சேர்த்து திரிகடுகுக் குடிநீர், திரிபலைக் குடிநீர் இவற்றால் முறையே 6 மணி நேரம் அரைத்து எருக்கம்பட்டைச்சாற்றில்

3 மணி நேரமரைத்து 130 மி.கி. அளவு குளிகைகளாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. குளிகையைத் தக்க அனுபானத்தில் கொடுக்க சன்னி முதல் தோடங்கள் அனைத்தும் தீரும். சுரங்கள் நீங்கும். இத்தகு சிறந்த மாத்திரையைப் பண்பாய்ச் செய்து உலகிலுள்ள வைத்தியர்கள் பயன்படுத்தும்படி சொல்லி வைத்தேன்.

கோரோசனை மாத்திரை

பாரப்பா கோரோசனையின் குளிகை கேளு
பாங்கான கோரோசனையுங் குங்கு மப்பூ
சாரப்பா கற்பூரம் ரசசெந் தூரம்
சார்வான பச்சைகற் பூரம் ஏலம்
சேரப்பா அப்பிரகம் கிராம்பு கோஷ்டம்
திறமான சாதிக்காய் அக்கிரா காரம்
ஆரப்பா வகையொன்று கழஞ்சி மூன்று
அப்பனே கல்வத்தில் பொடித்துக் கொள்ளே! 53

பொடித்ததனை யரைப்பதற்குக் கஷாயங் கேளு
பேரான சந்தனத்தூள் கிஷாயஞ் செய்து
வடித்ததனைச் சாமம்னாலா லரைத்துக் கொண்டு
வளமான லவங்கப்பூக் கிஷாயஞ் செய்து
துடித்திடவே இருசாம மரைத்துக் கொண்டு
துலங்கவே செண்பகப்பூக் கிஷாயஞ் செய்து
கடித்திட்டு யிருசாம மரைத்துக் கொண்டு
கருவாகக் குன்றிபோ லுண்டை செய்யே! 54

உண்டைசெய்து நிழலுலத்தி செப்பில் வைத்து
உத்தமனே முலைப்பாலில் கொடுத்தா யானால்
தொண்டைகட்டும் சேட்டுமங்கள் தொண்ணூற் றாறும்
துலைந்துவிடும் சன்னியெல்லாஞ் சொல்லா தோடும்
மண்டைகட்டுஞ் சூலைமுதல் நீர்த்தோ ஷங்கள்
மயக்கமொடு சேட்டுமசுரம் மாண்டு போகுஞ்
சண்டையிட்டு வந்ததொரு வலிப்பி சிவுஞ்
கண்ணுண்டு போகுமடா சொல்லக் கேளே! 55

கோரோசனை, குங்குமப்பூ, கற்பூரம், இரச செந்தூரம், பச்சைக் கற்பூரம், ஏலம், அப்பிரகம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், அக்கிராகாரம் இவற்றை வகைக்கு 15 கி. எடுத்து முறைப்படி சூரணமாக்கிக் கொள்க. அதனைச் சந்தனத்தூள் குடிநீரில் பன்னிரெண்டு மணி நேரமும் இலவங்கப் பூக் குடிநீரில் ஆறு மணி நேரமும் செண்பகப்பூக் குடிநீரில் ஆறு மணி நேரமும் அரைத்து 130 மி.கி. அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி செப்புப் பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வைக்கவும்.

அதனைத் தாய்ப்பாலில் கொடுக்க தொண்டை கட்டுகின்ற சிலேத்துமங்கள் தொண்ணூற்றாறும் சன்னி வகைகளும் மண்டைகட்டு, சூலை, நீர்த்தோடங்கள், மயக்கம், சிலேத்தும சுரம், வலிப்பு, இசிவு ஆகிய நோய்கள் தீரும்.

பூமணி மாத்திரை

கேளடா பூமணிதான் சொல்லக் கேளு
கிருபையாம் ரோகணியு யிலுப்பைப் பூவும்
நாளடா வாளமது ரெட்டிச் சேர்த்து
நலமான குமரிச்சார் தன்னா லாட்டி
வேளடா நால்சாம மரைத்துக்கொண்டு
விதமான தூதளங்காய் போலு ருட்டி
தாளடா நிழலுலர்த்தி செப்பில் வைத்து
தளமான இஞ்சிச்சார் தேனுங் கூட்டே! 56

கூட்டியே மாத்திரைதா னொன்று தன்னை
குழப்பியே காலமே கொடுத்தாற் கேளு
நாட்டியதோர் சன்னிசுர மெல்லாந் தீரும்
நலமான விஷசுரங்கள் நாடா தோடும்
திட்டியதோ ருள்ளியென்ற தயிலத் தூட்ட
திறமான தோஷமெல்லாம் தீரும் தீரும்
வாட்டியே யெண்ணையிலே கொடுத்தா யானால்
வாங்கிவிடும் வாய்வெல்லாம் மாண்டு போமே! 57

பூமணி மாத்திரையைக் கூறுகிறேன் கேளுங்கள். கடுகு ரோகணி, இலுப்பைப் பூ, வகைக்கு ஒரு பங்கும் நேர்வாளத்தை இரண்டு பங்குமாகச் சேர்த்து கற்றாழைச் சாற்றால் பன்னிரெண்டு டிணி நேரமரைத்து தூதுளங்காய் போல் உருட்டி மாத்திரை களாகச் செய்து கொள்க. நிழலில் உலர்த்தி பாத்திரத்தில் வைத்து பத்திரப்படுத்துக.

இஞ்சிச்சாற்றையும், தேனையும் சமஅளவெடுத்து அதில் மேற்சொன்ன மாத்திரையை இழைத்துக் குழப்பிக் கொடுக்க சன்னி சுரங்கள், விஷ சுரங்கள் தீரும். பூண்டுத் தயிலத்தில் கொடுக்க தோடங்கள் அனைத்தும் தீரும். எண்ணெயிலே கொடுத்தால் வாய்வனைத்தும் தீரும்.

அர்த்தநாரீசுபரன்

போமப்பா அர்த்தநாரீசு பரனைக் கேளு
புகழான சூதமோடு நாபி கெந்தி
நாமப்பா வெங்காரஞ் சமனாய்த் தூக்கி
நலமான நொச்சியிலைச் சாற்றி னாலே
வேமப்பா யிருசாம மரைத்துக் கொண்டு
விதமான குகையிலிட்டுச் சிலை செய்து
தாமப்பா மண்செய்து சட்டிக் குள்ளே
தயவாக உப்பைவிட்டு குகையை வையே! 58

வைத்ததிலே மேலுமந்த உப்பைக் கொட்டி
வாகாக மேற்சட்டி கொண்டு மூடி
தைத்ததிலே சிலைசெய்து யடுப்பி லேற்றி
தப்பாமல் கமலவன்னி நாலு சாமம்
நைத்ததிலே ஆறவிட்டு யெடுத்துக் கொண்டு
பருவமுடன் நொச்சிச்சார் விட்டு ஆட்டே! 59

ஆட்டப்பா நால்சாமம் பாகல் சாற்றால்
அப்பனே நால்சாம மாட்டிக் கொண்டு

நாட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
நன்றாகக் குழலடைத்து வைத்துக்கொண்டு
மூட்டப்பா பணவிடைத்தூள் முன்சாற்றில் போட்டு
முறையாகக் கொடுத்திடவே சுரங்கள் தீரும்
காட்டப்பா யிருபுறத்தி லொருபுறந்தா னிற்க
கருவான முன்சாற்றில் நசியம் பண்ணே! 60

பண்ணப்பா வொருபுறத்தில் சுரந்தான் நிற்கும்
பக்குவமாய் மறுபுறத்தில் நசியம் பண்ண
தண்ணப்பா யிருபுறமும் தணிந்து போகுந்
தப்பாது ஆட்டுப்பால் கஞ்சி கொள்ள
நண்ணப்பா புலத்தியர்க்காய்ச் சொன்னேன் கேளு
நாட்டிலுள்ளோர் இதையறிந்து ஆர்தான் சொன்னார்
கண்ணப்பா வொளிப்பில்லை சொல்லிப் போட்டேன்
கருவான வைத்தியத்தில் கருவைக் காணே! 61

சூதம், நாபி, கெந்தி, வெங்காரம் இவற்றைச் சமனாய் எடுத்து நொச்சியிலைச் சாற்றால் ஆறு மணி நேரமரைத்து குகையிலிட்டுச் சீலை செய்து கொள்க. மண்சட்டிக்குள் உப்பைப் போட்டு, குகையை வைத்து அதன் மேலும் உப்பைக் கொட்டி மேல் சட்டி மூடி சீலை மண் செய்து அடுப்பேற்றுக. இரண்டு விறகு கொண்டு பன்னிரெண்டு மணி நேரம் எரித்து ஆறிய பின் எடுத்துக் கொள்க.

அதனை நொச்சிச் சாற்றிலும் பாகல் சாற்றிலும் பன்னிரெண்டு மணி நேரம் அரைத்து வெயிலில் காயவைத்துப் பிறகு குழலில் அடைத்து வைத்துக் கொள்ளவும். 488 மி.கி. எடுத்து நொச்சிச் சாற்றில் கொடுக்க சுரங்கள் தீரும். மூக்கின் ஒரு புறத்தில் நொச்சிச் சாற்றினால் நசியம் செய்ய மறுபுறம் சுரம் தீரும். இவ்வாறு இருதுளைகளிலும் நசியம் பண்ணவும். ஆட்டுப்பாலினால் ஆன கஞ்சியைக் கொள்ளவும்.

சிலோதாரி மாத்திரை

காணப்பா சிலோதாரி உண்டை கேளு
கருவான பொடியோடு திரிகடு கூட்டி
நாணப்பா கடல்நுரையும் சூரை வித்து
நலமான இந்துப்பு காய மொன்று
வாணப்பா நேர்வாளம் ரெண்டுங் கூட்டி
வகைபத்தும் நின்றால்முச் சாம மாட்டி
தாமப்பா யிலந்தைவிரை பிரமா ணந்தான்
தப்பாமல் நிழலுலத்தி செப்பில் வையே! 62

வைத்தப்பா விஞ்சிநீர் தேனுங் கூட்டி
வளமான மாத்திரையைக் கொடுத்தா யானால்
சத்தப்பா வாய்வோடு வாத மெல்லாம்
சாந்தமாம் பித்தமெல்லாம் கீழே சாடும்
மத்தப்பா மதுவிலே யிட்டா யானால்
மந்தமொடு உப்பிசமும் வாங்கிப் போகும்
எத்தப்பா நீரடைப்பு சதையடைப்புத் திரும்
இதமான சிலோதாரி என்று காணே! 63

திரிகடுகு, கடல்நுரை, சூரைவித்து, இந்துப்பு, பெருங்காயம் இவற்றை வகைக்குச் சம அளவும் நேர்வாளத்தை அவ்வளவிற்கு இரண்டு மடங்கும் சேர்த்து ஒன்பது மணி நேரம் அரைத்து இலந்தை விதை அளவு உருட்டி வைத்துக் கொள்ளவும். நிழலில் உலர்த்தி செப்புக்குமிழில் பத்திரப் படுத்திக் கொள்க.

இஞ்சி நீரையும், தேனையும் சேர்த்து மேற்கூறிய மாத்திரையை இழைத்துக் கொடுக்க வாய்வு, வாதம், பித்தம், இவை தீரும். தேனிலே மட்டும் கொடுக்க மந்தம், உப்பிசம், நீரடைப்பு, சதையடைப்பு இவை தீரும்.

கரிசாலை லேகியம்

காணப்பா பாண்டுவகை ஆறுந் தீர
கரிசாலை லேகியந்தான் சொல்லக் கேளு

நாணப்பா பொற்கையான் சாறுபடி ரெண்டு
நலமான நெருஞ்சிச்சார் படிதான் ரெண்டு
வாணப்பா சிறுகிரைச் சாறுபடி ஒன்று
வளமான பொடுதலைச்சார் படிதா னொன்று
தாணப்பா கீழ்க்காய்நெல்லிச் சாறுபடிதா னொன்று
தருவான செருப்படிச்சார் படிதா னொன்றே! 64

ஒன்றப்பா பழச்சாறு படிதா னொன்று
உத்தமனே நெல்லிச்சார் படிதா னொன்று
சென்றப்பா கிஷாயவகை சொல்லக் கேளு
திறமான நாகலொடு கருங்காலி ஆற்றி
நன்றப்பா தென்னம்பூ வகையொன் றுக்கு
நலமாகப் பலமஞ்சு இடித்துப் போட்டு
கன்றப்பா தூணிநீ ரெட்டொன் றாக்கி
கருவான சாற்றினுள்ளே கூடச் சேரே 65

சேர்க்கயின்னங் கிஷாயமொன்று சொல்லக் கேளு
செப்புகிறேன் மிளகொடு மிளகரணை மூலம்
மார்க்கமாம் அவுரியொடு சிற்றா முட்டி
வளமான பேராமுட்டி விலாமிச் சோடு
தீர்க்கமா யிம்மூன்று நிறுத்துக் கொண்டு
திறமாக வடித்ததனைத் தூணி நீரில்
சேர்க்கவே யெட்டொன்றாய்க் காய்ச்சி நீயும்
சிதறாதே முன்கிஷாயந் தன்னில் கூட்டே! 66

கூட்டுவாய் பனவெல்லம் பலந்தா னெட்டு
கூறான கன்னல்வெல்லம் பலந்தா னெட்டு
மாட்டுவாய் ஆவின்பால் படிநா லுக்குள்
வளமாகக் கரைத்துவிட்டு சொல்லக் கேளு
காட்டுவா யடுப்பேற்றி பாகு சேரில்
கருவான சிரக மேலங் கிராம்பு
நீட்டுவாய் சாதிக்காய் சாதி பத்திரி
நினவாக ஓமமொடு குரோசாணி யாமே! 67

ஆமப்பா நாகப்பூ கற்கடக சிங்கி
அப்பனே கோஷ்டமொடு அக்கிரா காரம்

தாமப்பா மதுரமொடு தாளிச பத்திரி
தப்பாமல் திரிகடுகு திரிப லாதி
நாமப்பா வகையொன்று பலந்தா னொன்று
நலமாகச் சூரணித்து முன்பாகில் தூவே
வேமப்பா கிண்டயிலே ஆவின் நெய்தான்
வெகுசுருக்காய்ப் படியரைதான் விட்டுக் கிண்டே! 68

கிண்டப்பா தேனதிலே படியரைதான் விட்டு
கிருபையாய்த் திரிலோகச் செந்தூ ரந்தான்
தண்டப்பா பலமொன்று கூடப் போட்டு
தப்பாமல் மண்டூரம் பலமொன் றப்பா
மண்டப்பா கிண்டியதை மெழுகாய் வாங்கி
மகத்தான புன்னைக்கா யளவு வீதம்
கொண்டப்பா மண்டலந்தான் சென்ற தானால்
கூறுகெட்ட வெண்பாண்டம் சிவக்க லாச்சே! 69

ஆச்சப்பா பாண்டுவகை எல்லாம் போகும்
அப்பனே பித்தவெட்டை கைகா லோச்சல்
காச்சப்பா காந்தலுடன் எரிவு போகுங்
கனமான வாந்தியொடு மயக்கந் தூக்கம்
ஒச்சப்பா விக்கமொடு நீர்சு ரப்பு
உத்தமனே கிராணியெல்லா மொழிந்து போகும்
நீச்சப்பா அரோசியங்க ளெல்லாம் போகும்
நிசமாக அசுவகெந்தி தைலம் மூழ்கே! 70

பொற்கையாந்தகரைச்சாறு, நெருஞ்சிச்சாறு வகைக்கு 2.6 லி, சிறுகீரைச்சாறு, பொடுதலைச்சாறு, கீழ்க்காய் நெல்லிச்சாறு, செருப்படைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நெல்லிச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்ளவும். நாகல், கருங்காலி, தென்னம்பூ இவற்றை வகைக்கு 175 கி. எடுத்து 21.5 லி. நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி சாற்றுடன் சேர்த்துக் கொள்ளவும்.

மிளகு, மிளகரணைவேர், அவுரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, விலாமிச்சம் இவற்றை 21.5 லி. நீர்விட்டு எட்டொன்றாய்க்

காய்ச்சி மேற்குறிப்பிட்ட குடிநீரில் கலந்து கொள்ளவும். பனை வெல்லம், கரும்புவெல்லம் இவற்றை வகைக்கு 280 கி. எடுத்து, 5.2 லி. பசும்பாலில் கலந்து பாகாகக் காய்ச்சிக் கொள்ளவும். அதில் சீரகம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதி பத்திரி, ஓமம், குரோசாணி ஓமம், நாகப்பூ, கற்கடக சிங்கி, கோட்டம், அக்கிராகாரம், அதிமதுரம், தாளிசபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய மருந்துச் சரக்குகளை வகைக்கு 35 கி. எடுத்துச் சூரணம் செய்து தூவிக் கிண்டுக. பசுநெய் 675 மி.லி. விட்டு மேலும் கிண்டிவிட வேண்டும். தேன் 675 மி.லி, திரிலோகச் செந்தூரம், அயச்செந்தூரம் வகைக்கு 35 கி. பாகில் சேர்த்து மெழுகாகும் வரை கிண்ட வேண்டும். ஆறியபின் புன்னைக் காயளவு, நாற்பது நாட்கள் கொடுக்க வெண்பாண்டு மாறி தோல் சிவக்கும்.

பாண்டு வகைகள், பித்தவெட்டை, கைகால் ஓய்ச்சல், காந்தல், எரிச்சல், வாந்தி, மயக்கம், தூக்கம், வீக்கம், நீர்சுரப்பு, கிராணி, அரோசிகம் ஆகிய நோய்கள் தீரும். அசுவகந்தி தைலத்தால் தலைமுழுக வேண்டும்.

கண்டங்கத்திரி லேகியம்

மூழ்கவே கண்டங்கத்திரி லேகியஞ் சொல்வேன்
மூர்க்கமா யிஞ்சிச்சார் படிதா னொன்று
நீழ்கவே கண்டங்கத் திரியின் சாறு
நினைவாகப் படியொன்று கூட விட்டு
தாழ்கவே நெருஞ்சிச்சார் படிதா னொன்று
தப்பாமல் முள்ளங்கிச் சார்படி விட்டு
விழ்கவே பழச்சாறு படிதான் விட்டு
விருதான பழச்சாறு படிதான் ரெண்டே! 71

ரெண்டான பனவெல்லம் பலந்தா னெட்டு
ரேகித்து அடுப்பேற்றி பாகு சேரில்
குண்டான திரிகடுகு சீரகமும் ஏலம்
குருவான வாய்விளங்கம் கிராம்பு தாளிசம்

நன்றாக பலமொன்று சூர ணித்து
நலமான பாகதிலே தூவித் தூவிச்
சென்றான ஆவின்பால் படியரைதான் விட்டு
திறமான தேனதிலே கால்படிதான் வாரே! 72

வாத்தப்பா கிண்டியதை மெழுகு போலே
வளமான லேகியத்தைப் பதனம் பண்ணு
பாத்தப்பா பாக்களவு ரசித மாக
பதறாம லிருநேரங் கொள்ளுங் காலம்
காத்தப்பா மண்டலந்தான் கொண்டா யானால்
கலங்காத வாதமொடு வாய்வு யெல்லாம்
பித்தப்பா பித்தமொடு வாந்தி சூலை
பிரபலமாம் இசிவுமுதல் பறந்து போமே! 73

போமப்பா அரோசிங்க ளன்ன தோஷம்
பெருக்காக குன்மமெட்டும் பொருமல் கக்கல்
சாமப்பா பித்தத்தின் கோப மெல்லாம்
சாடுமடா கடுப்புவலி சாந்த மாகும்
தாமப்பா பித்தத்தின் கபாலக் கூற்று
நாடாது மயக்கமெல்லாம் நடுங்கி யோடும்
தேமப்பா குமரியடா தைலம் மூழ்கு
திறமான பித்தநோய் தீரும் பாரே! 74

கண்டங்கத்திரி லேகியத்தைக் கூறுகிறேன், கேட்பீராக. இஞ்சிச்சாறு, கண்டங்கத்திரியின் சாறு, நெருஞ்சிச்சாறு, முள்ளங்கிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. எடுக்க. பனை வெல்லம் 280 கி. எடுத்து 670 மி.லி. பாலூற்றி பாகு காய்ச்சிக் கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வாய்விடங்கம், கிராம்பு, தாளிசபத்திரி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துச் சூரணம் செய்து தூவிக் கொள்க. தேன் 325 மி.லி. விட்டு கிண்டிக்கொள்க. மெழுகு பதமாகும் வரை கிண்டி பாத்திரத்தில் பத்திரப்படுத்திக் கொள்க. 2.2 கி. அளவு இரண்டு நேரமும் நாற்பது நாட்கள் உட்கொண்டால் வாதம், வாய்வு, பித்தம், வாந்தி, சூலை, இசிவு, அரோசிகம்,

அன்னத்தோடம், எட்டுவகைக் குன்மம், பொருமல், கக்கல், கடுப்பு, பித்தத்தின் வேகங்கள், கபாலக் கூற்று, மயக்கம் ஆகிய நோய்கள் தீரும். கற்றாழைத் தைலத்தால் தலை மூழ்க பித்த நோயனைத்தும் தீரும்.

பஞ்ச தீபாக்கினி லேகியம்

பாரப்பா பஞ்ச தீபாக் கினியாம்
பகருகின்ற லேகியந்தான் சொல்லக் கேளு
ஆரப்பா திரிகடுகு ஏலஞ் சீரம்
அப்பனே வகையொன்று பலந்தா னொன்று
பேரப்பா யிளவறுப்பாய்ச் சூர ணித்துப்
பெரிதான ஆவின்பால் படிதான் ரெண்டு
சேரப்பா பனைவெல்லம் பலந்தா னெட்டு
சீராகக் கரைத்ததிலே பாகு செய்யே! 75

செய்யப்பா சூரணத்தைத் தூவிக் கிண்டி
திறமான தேன்நெய்தான் உரியு ழக்கு
கய்யப்பா விட்டதிலே கிண்டிக் கிண்டி
கருவாக மெழுகுபத மாக வாங்கி
மைய்யப்பா பாக்களவு மிருநே ரந்தான்
மைந்தனே மண்டலந்தான் கொண்டா யானால்
தைய்யப்பா தீருகிற வியாதி கேளு
தருவான வாட்டமொடு வாத மாமே! 76

ஆமப்பா உஷ்ணங்கள் பித்த வாய்வு
அப்பனே சரீரத்தி லுளவுக் குத்து
போமப்பா வலிகடுப்பு எரிச்சல் பேதி
பொருமலுடன் வாய்வென்ற கிராணி தீரும்
வேமப்பா அத்திசுரம் அத்தி வெட்டை
விருதான வாந்தியெல்லாம் விழலாய்ப் போகும்
சாமப்பா அரக்கினுட தயிலம் மூழ்க
சகலசுரம் விட்டோடும் சாரப் பாரே! 77

பஞ்சதீபாக்கினி லேகியத்தைக் கூறுகிறேன், கேட்பாயாக, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம் இவற்றை வகைக்கு

35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்க. பசும்பால் 2.6 லி.ரில் பனை வெல்லம் 280 கிராமைப் போட்டு பாகாகக் காய்ச்சுக. சூரணத்தைப் பாகில் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டிக் கொள்க. தேன் 675 மி.லி., நெய் 325 மி.லி. விட்டு மெழுகுபதமாய் வரும் வரை கிண்டி பதமாய் இறக்கிக் கொண்டு அதனை 2.2 கி. நாற்பது நாட்கள் இருநேரமும் உட்கொள்ள வாதம், வாட்டம், வெப்பம், பித்த வாய்வு, உடம்புவலி, உளைச்சல், குத்துவலி, கடுப்பு வலி, எரிச்சல், கழிச்சல், பொருமல், வாய்வு, கிராணி, எலும்புசுரம், எலும்பு வெட்டை, வாந்தி ஆகிய நோய்கள் தீரும். அரக்குத் தைலத்தில் தலை முழுக சுரமனைத்தும் தீரும்.

கண்டங்கத்திரி லேகியம் (வேறு முறை)

சார்வாக லேகியமொன்று சொல்லக் கேளு
சாத்துறேன் கண்டங்கத் திரிதாக் கப்பா
ஆர்வாக யிடித்ததனைத் தூணி நீரில்
அப்பனே யெட்டொன்றாய்க் காய்ச்சி விட்டு
சேர்வாகப் பனவெல்லம் பலந்தான் பத்து
சேர்த்ததிலே பால்படிதான் பாகு சேரில்
சார்வாகத் திரிகடுகு திரிப லாதி
கருவான வாய்விளங்கம் ஓம மாமே! 78

ஓமமொடு குரோசாணி லவங்கப் பட்டை
உத்தமனே சிரகமும் நறுக்கு மூலம்
நாமமொடு அத்தித்திப் பிலியும் கோட்டம்
நலமான தாளிசம் அக்கிரா காரம்
வாமமொடு வகையொன்று பலந்தா னொன்று
வளமாகச் சூரணித்து பாலில் தூவே
சேமமொடு ஆவினெய் படிகால் விட்டு
திறமான தேனதிலே படிகால் வாரே! 79

வார்த்ததிலே கிண்டியதை மெழுகு போலே
வளமான லேகியந்தான் பாக்கு வீதம்
பார்த்ததிலே யிருநேரங் கொண்டா யானால்
பறக்குமடா கழல்வாதம் பாரிச சூலை

தேத்ததிலே கிருமியொடு புழுக்க ளெல்லாம்
திரேகத்தில் விட்டோடும் கெர்ப்ப வாய்வு
சாத்ததிலே உஷ்ணநோய் பித்த மெல்லாம்
சாறாது சிந்தாதிரி லேகியம் கேளே! 80

கண்டங்கத்திரியைத் தேவையான அளவெடுத்து 21.5 லி. நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். பனைவெல்லம் 350 கி.முடன் 1.3 லி. பாலையும் சேர்த்துப் பாகு காய்ச்சி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வாய்விடங்கம், ஓமம், குரோசாணி ஓமம், இலவங்கப்பட்டை, சீரகம், திப்பிலிவேர், யானைத் திப்பிலி, கோட்டம், தாளிசபத்திரி, அக்கிராகாரம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துச் சூரணம் செய்து தூவவும், பசுநெய், தேன் வகைக்கு 325 மி.லி. விட்டுக் கிண்டி மெழுகு பதமானவுடன், இறக்கிக்கொள்ளவும். 2.2 கி. அளவு இரண்டு நேரமும் உட்கொள்ள கழல்வாதம், பாரிசசூலை, புழுக்கள், கிருமி, கர்ப்பவாய்வு, வெப்பநோய், பித்தம் இவை நீங்கும்.

சிந்தாதிரி லேகியம்

கேளப்பா திங்களாறு சென்ற காடி
கிருபையாம் படிபத்து புளித்த மோரு
தாளப்பா படிபத்து கூட விட்டு
தனமான புளியிலைதூக் கிடித்துப் போட்டு
கேளப்பா துருப்பிடித்த யிரும்பிடைதான் போட்டு
கொதிக்கவைத்து எட்டொன்றா யிறுத்துக் கொண்டு
வேளப்பா கையான்சார் படிதான் ரெண்டு
விருதான யிஞ்சிச்சார் படிதான் ஒன்றே! 81

ஒன்றான பழச்சாறு படிதா னொன்று
உத்தமனே நெருஞ்சிச்சார் படிதா னொன்று
சென்றான சிறுகீரை படிதா னொன்னு
செருப்படைதான் படியொன்று தென்னம் பூச்சார்
பண்டான படியொன்று கீழா நெல்லி
பதறாமல் படியொன்று கூடச் சேர்த்து

கண்டான ஆவின்பால் படிதா னாலு
கருவான பனவெல்லம் பலந்தான் பத்தே! 82

பத்தாகக் கரைத்துவிட்டு பாகு சேரில்
பக்குவமாங் கடைச்சரக்கு திரிகடு கோமம்
நத்தான திரிபலையுங் கோட்டம் மாஞ்சில்
நலமான சிரகம் வால்மிளகு ஏலம்
கத்தான கிராம்பு தாளிச பத்திரி
கருவான லவங்கத்தோல் ஆனைத் திப்பிலி
ஒத்தாக பலமொன்று தூக்கிக் கொண்டு
உருவாக யிளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே 83

செய்யப்பா முன்பாகில் தூவிக் கிண்டி
செயமான ஆவினெய் படிதான் வாரு
கொய்யப்பா தேனதிலே படிதான் வாரு
குழம்பாக லேகியத்தைப் பதனம் பண்ணு
பய்யப்பா யிருகழஞ்சி இருநே ரங்கொள்
பறக்குமடா பாண்டுவகை யெல்லாந் தீரும்
மைய்யப்பா பித்தவெட்டை பித்த வாய்வு
மயக்கமொடு அக்கினியாம் மந்தந் தானே! 84

மந்தமொடு வெளுப்பான திரேக மெல்லாம்
வண்டுபோல் கருக்குமடா மண்ட லத்தில்
அந்தமாம் மகோதரங்கள் பிலிகையாம் வாய்வு
அப்பனே சோகையொடு கிராணி போமே
பெந்தமாம் உடம்பெரிப்பு யிளைப்பி ரைப்பு
பொருமலுடன் உப்பிசங்க ளிரைச்சல் தீரும்
பந்தமாம் பத்தியங்கள் காத்துத் தின்னு
பக்குவமாய் மண்டலத்தில் சொல்லக் கேளே! 85

ஒரு மாதம் புளித்த காடி, புளித்தமோர் வகைக்கு 13 லி., 1.7 கி.கி. இடித்த புளியிலையுடன் துருப்பிடித்த இரும்பு சேர்த்து முறைப்படி எட்டொன்றாய்க் காய்ச்சிச் சேர்க்கவும். கையாந்தகரைச்சாறு 2.6 லி., இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நெருஞ்சிச்சாறு, சிறுகீரைச்சாறு, செருப்படைச்சாறு,

தென்னம்பூச்சாறு, கீழாநெல்லிச்சாறு, இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக் குடிநீரில் கலந்து கொள்க. பசும்பால் 5.2 லி. எடுத்து அதில் 350 கி. பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகாய்க் காய்ச்சுக. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோட்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஏலம், கிராம்பு, தாளிசபத்திரி, இலவங்கப்பட்டை, ஆனைத்திப்பிலி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணமாக்கிக் கொள்க. பாகில் இதைத் தூவிக் கிண்டி பசு நெய், தேன் இவற்றை வகைக்கு 1.3 லி. சேர்த்துக் குழம்பாகும் பக்குவம்வரை கிண்டி இறக்கிக் கொள்க. 10 கி. அளவு, இரண்டு நேரமும் உட்கொள்ள பாண்டு வகைகள், பித்தவெட்டை, பித்தவாய்வு, மயக்கம், அக்கினிமந்தம், வெளுப்பு, மகோதரங்கள் பல, பீலிகை வாய்வு, சோகை, கிராணி, உடலெரிவு, இளைப்பு, இரைப்பு, பொருமல், உப்பிசம், இரைச்சல் ஆகியவை தீரும். நாற்பது நாட்கள் பத்தியத்துடன் உட்கொள்ள வெளுத்த உடல் வண்டு போல் கருப்பாகும்.

மகாவில்வாதி லேகியம்

சொல்லக்கேள் புலத்தியரே யின்ன மொன்று
சுருக்கான நோய்க்கெல்லாம் மகாவில் வாதி
வல்லக்சேள் வில்வத்தின் மூல மெல்லாம்
வளமாக பலனூறு வெட்டி வந்து
நல்லக்கேள் விலாமிச்சை வாகை பாதிரி
நலமான நன்னாரி பரிவி ளாவும்
அல்லக்கேள் சிற்றாமல்லி பேரா மல்லி
அழகான சிறுவிளா வேரு மாமே! 86

ஆமப்பா சிறுவாகை முன்னை யோடு
அப்பனே முசுமுசுக்கை கொடுவேலி தேற்றான்
நாமப்பா வகையொன்று பலமூன் றாகும்
நலமாக இருந்துநன்றா யிருதூணி நீரில்
வேமப்பா எட்டொன்றாய் வடித்துக் கொண்டு
வெகுளாதே கொம்மட்டி பழச்சார் யிஞ்சி

காமப்பா சாறுபடி வொன்று விட்டு
கலங்காதே சர்க்கரைசேர் நாலு மாமே! 87

ஆமப்பா ஆவின்பால் படிதான் ரெண்டு
அப்பனே கரைத்ததெல்லாம் பாகு சேரில்
போமப்பா திரிகடுகு திரிப லாதி
புகழான லவங்கமொடு ஏலங் கோட்டம்
நாமப்பா மதுரங்கெந் தஞ்சீரம் ரெண்டு
நலமான விளங்கமொடு சாத்திர பேதி
வாமப்பா தாளிசஞ்செண் பகப்பூ அக்கிரா
வளமான அல்லிவிளா வரிசிறு தேக்கே! 88

தேக்கான முந்திரிகை பேரீச்சு விலம்
திறமான வாலுளுவை மாஞ்சில்சிறு னாகம்
பாக்கான நாகணமும் பருத்தி வித்து
பகருவேன் நின்பவித்து யிலுப்பைப் பூவும்
தூக்கான வகைகளொன்று பலமொன் றாக
சூரணித்துப் பாகுதனில் தூவிக் கிண்டி
நீக்கான தேனதிலே படியரைதான் விட்டு
நினவாக ஆவினெய் படிதான் வாரே! 89

வார்த்தப்பா மெழுகுபோல் கிண்டிக் கிண்டி
வளமான லேகியத்தைப் பதனம் பண்ணு
கோர்த்தப்பா லேகியத்தைப் புன்னைக்கா யளவு
கொண்டுவர யிருநேரந் தீரும் நோய்கள்
சாற்றப்பா சுவாசமுடன் அரோசி யங்கள்
தவறாத விக்கமொடு சத்திளரி பாண்டு
கார்த்தப்பா விஷபாண்டு வயிறெ ரிச்சல்
கனமான உப்பிசங்கள் கிராணி போமே! 90

போமப்பா கைகால் எரிவு காந்தல்
புகழான வெள்ளோக்காள மன்ன தோஷம்
நாமப்பா சூலையொடு சயந்தா னெட்டும்
நலமான சுரங்களறு பத்தி னாலும்
தாமப்பா பித்தமென்ற நாற்ப துந்தான்
தளமான அத்திசுர மருந்தி டெல்லாம்

ஆமப்பா அதிசாரம் உள்ளு ரோகம்
அருளான லோகம்வந்து கொள்ளு கொள்ளே! 91

வில்வவேர் 350 கி, விலாமிச்சம், வாகை, பாதிரி, நன்னாரி, விளா, சிற்றாமல்லி, பேராமல்லி, சிறுவிளாவேர், சிறுவாகை, முன்னை, முசுமுசுக்கை, கொடிவேலி, தேற்றான் இவற்றை வகைக்கு 105 கி. எடுத்து 43 லி. தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். அதனுடன் கொம்மட்டி பழச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்கு 1.3 லி. சேர்க்கவும். சர்க்கரை 1120 கி, பசும்பால் 2.6 லி சேர்த்துப் பாகாய்க் காய்ச்சி மேற்கலவையுடன் கலக்கவும். அதில், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இலவங்கம், ஏலம், கோட்டம், அதிமதுரம், சந்தனம், நற்சீரகம், கருஞ்சீரகம், வாய்விடங்கம், சாத்திரபேதி, தாளிசபத்திரி, செண்பகப்பூ, அக்கிராகாரம், அல்லி, விளாவரிசி, சிறுதேக்கு, முந்திரிகை, பேரீச்சு, வில்வம், வாலுளுவை, சடாமாஞ்சில், சிறுநாகப்பூ, நாகணம், பருத்தி விதை, வேப்பம்விதை, இலுப்பைப்பூ இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துச் சூரணம் செய்து பாகில் தூவிக் கிண்டிக் கொண்டு தேன் 675 மி.லி, பசுநெய் 1.3 லி. விட்டு மெழுகு பதமாகும் வரை கிண்டி பக்குவத்துடன் இறக்கிக் கொள்ளவும்.

இரண்டு நேரமும் புன்னைக்காயளவு உட்கொள்ள சுவாசம், அரோசிகங்கள், வீக்கம், வாந்தி, எரிபாண்டு, விஷப்பாண்டு, வயிறெரிதல், உப்பிசங்கள், கிராணி, கைகால் எரிச்சல், வெள்ளோக்காளம், அன்னதோடம், சூலை, எட்டுவகைச்சயம், அறுபத்துநான்கு வகைச் சுரங்கள், நாற்பது வகை பித்தம், அத்தி சுரம், அதிசாரம், உள்ளுரோகம், மருந்தீடு ஆகிய நோய்கள் தீரும்.

சரபங்க வில்வாதி லேகியம்

கொள்ளவே இன்னமொன்று சொல்லக் கேளு
குணமான சரபங்க வில்வாதி லேகியம்
விள்ளவே வில்வவேர் முக்கா வேளை
விருதான சங்கைவேர் வகையொன் றுக்கு

தெள்ளவே சிற்றாமுட்டி சிற்றா மல்லி
திறமான பேராமல்லி கூந்தல் முள்ளி
நள்ளவே சாரணைவேர் கண்டங் காலி
நலமான விலாமிச்சை சிந்தில் தானே! 92

தானென்ற கொடுவேலி பொன்மு சுட்டை
தளமான நன்னாரி சிறுதேக் கப்பா
வானென்ற மூலிவகை பதிமூன் றுந்தான்
வளமாக பலமஞ்சு இடித்து நய்ய
வேனென்ற ஆற்றுநீர் தூணி விட்டு
விளங்கவே யெட்டொன்றா யிறுத்துக் கொண்டு
கானென்ற கன்னல்வெல்லம் சேர்தா னாலு
கருவான ஆவின்பால் படிரெண்டு சேரே! 93

சேர்த்தப்பா கரைத்ததிலே பாகு செய்து
திறமான திரிகடுகு திரிப லாதி
வார்த்ததிலே கிராம்பேல மிருசி ரந்தான்
வளமான கோட்டம் தாளிச பத்திரி
தாத்ததிலே ஒமம்ரெண்டு அரத்தை ரெண்டு
தளமான கொத்தமல்லி லவங்கப் பட்டை
ஆத்ததிலே அக்கிரா அத்தித் திப்பிலி
அப்பனே வால்மிளகு சாதிக்கா யாமே! 94

ஆமப்பா வகையொன்று பலமொன் றாக
அப்பனே இளவறுப்பாய்ச் சூர ணித்து
சேமப்பா பாகிலே தூவிக் கிண்டி
திறமான தேன்படிநெய் அரைதான் விட்டு
நாமப்பா குழம்பு போல வைத்து
நலமான கழஞ்சிநிறை இருநேரங் கொள்ள
தாமப்பா பித்தவெட்டை பாண்டு ஆறு
தளமான வாய்கசப்பு தவறுந் தானே! 95

தானென்ற வாயூறல் அக்கினியாம் மந்தம்
திறமான சூலையொடு கைகால் காந்தல்

பானென்ற பித்தமது நாற்ப துந்தான்
பறக்குமடா மண்டலத்தில் பரிந்து கொள்ளு
வேனென்ற பத்தியந்தான் புளிக சப்பு
விளங்கியதோர் புகையோடு பெண்ணுந் தள்ளே
..
..! 96

வில்வம், முட்காவேளை, சங்கை, சிற்றாமுட்டி, சிற்றாமல்லி, பேராமல்லி, கூந்தல், முள்ளி, சாரணை, கண்டங்கத்திரி, விலாமிச்சம், சீந்தில், கொடிவேலி, பொன் முசுட்டை, நன்னாரி, சிறுதேக்கு ஆகிய மூலிகைகளின் வேர் வகைக்கு 175 கி. எடுத்து ஆற்றுநீர் 21.5 லி. விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க.

வெல்லம் 1120 கி, பசும்பால் 2.6 லி. சேர்த்துப் பாகு செய்து மேற்குறிப்பிட்ட குடிநீரையும் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கிராம்பு, ஏலம், நற்சீரகம், கருஞ்சீரகம், கோட்டம், தாளிசபத்திரி, ஓமம், குரோசாணி ஓமம், பேரரத்தை, சிற்றரத்தை, கொத்து மல்லி, இலவங்கப்பட்டை, அக்கிராகாரம், அத்தித்திப்பிலி, வால்மிளகு, சாதிக்காய் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து, பாகில் தூவி தேன் 1.3 லி., 675 மி.லி. நெய் விட்டு கிளறி குழம்பு பதம் வரும் வரை கிண்டி இறக்கிக் கொள்ளவும். 5 கி. அளவு, நாற்பது நாட்கள் இரண்டு நேரமும் உட்கொள்ள பித்த வெட்டை, ஆறுவகைப் பாண்டு, வாய்க்கசப்பு, வாய் நீரூறல், அக்கினி மந்தம், சூலை, கைகால் எரிச்சல், நாற்பது வகை பித்தம், ஆகியவை தீரும். புளிப்புச் சுவை, கசப்புச் சுவை, புகை, பெண் இவற்றை நீக்க வேண்டும்.

கண்டங்கத்திரி லேகியம் (பிரிதொருமுறை)

கேளப்பா மகாகண்டங் கத்திரி லேகியங்
கெடியான லேகியந்தான் சொல்லக் கேளு

நாளப்பா ஆற்றுமுள்ளி பலந்தா னூறு
நலமான கருமுள்ளி அதற்குப் பாதி
தாளப்பா சிற்றாமுட்டி பேரா முட்டி
தளமான மிளகரணை கொடுவேலி கிழாவும்
ஆளப்பா ஆதண்டை சிறுகாஞ் சோரி
அப்பனே விலாமிச்சை முக்கா வேளை! 97

ஆமப்பா கோவை யுடன்உத் தாமணி
அப்பனே காத்தொட்டி மாவி லங்கை
தாமப்பா யிடித்துயிரு தூணி நீரில்
....
வேமப்பா யெட்டொன்றா யிறுத்து வாங்கி
விருதான கொமட்டி பழச்சாறு கேளு
நாமப்பா படியரையாங் கூட விட்டு
நலமான ஆவின்பால் படிதான் ரெண்டே! 98

ரெண்டான சர்க்கரைதான் பலமு வஞ்சு
நினவாகக் கரைத்ததிலே பாகு சேரில்
கண்டான கடைமருந்து சொல்லக் கேளு
கருவான திரிகடுகு திரிப லாதி
நன்றான சிங்கியொடு யிஞ்சி ரசந்தான்
நலமான அரத்தைஅக்கிரா லவுங்கப் பட்டை
தன்றாக லவுங்கஞ்சா திக்காய் பத்திரி
தளமான பேரரத்தை லவுங்க பத்திரியுங் கூட்டே! 99

கூட்டுவாய் வகையொன்று பலமொன் றாக
கூசாமல் யிளவறுப்பாய்ச் சூர ணித்து
நாட்டுவாய் பாகிலே தூவிக் கிண்டி
நலமான தேன்படிநெய் யரைதான் விட்டு
காட்டுவாய் மெழுகுபோல் கிண்டிக் கிண்டி
கசகாமல் பீங்கானில் வழித்து வைத்து
திட்டுவாய் லேகியந்தான் புன்னைக்கா யளவு
திறமாக மண்டலத்தில் திரும் நோய்கேள்! 100

கேளப்பா சயமெட்டு குன்ம மெட்டு
கெடியான வாதமென்ற தெண்ப தும்போம்
நாளப்பா யிளைப்பு விஷநீர் கோர்வை
நாடாது யிசிவுவலி கழல்வா தங்கள்
தாளப்பா கெர்ப்பவலி கெர்பச் சூலை
தவறுண்டே போகுமடா புழுக்க ளெல்லாம்
ஆளப்பா தாளகமும் வைத்துக் கொள்ளு
அப்பனே மண்டலத்தில் திரும் பாரே! 101

ஆற்றுமுள்ளி 3500 கி, கருமுள்ளி எனும் கண்டங்கத்திரி 1750 கி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, மிளகரணை, கொடிவேலி, ஆதண்டை, சிறுகாஞ்சொறி, விலாமிச்சம், முக்காவேளை, கோவை, உத்தாமணி, காத்தொட்டி, மாவிலங்கை இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து 43 லி. தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதனுடன் கொம்மட்டி பழச்சாறு 675 மி.லி., பசும்பால் 2.6 லி., சர்க்கரை 175 கி. போட்டுக் கரைத்துப் பாகாய்க் காய்ச்சிக் கலந்து கொள்ளவும். அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கற்கடகசிங்கி, இஞ்சிச்சாறு, அரத்தை, அக்கிராகாரம், இலவங்கப்பட்டை, இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, பேரரத்தை, இலவங்கப்பத்திரி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணமாக்கிக் கொள்க. அதைப் பாகில் தூவி, தேன் 1.3 லி., நெய் 675 மி.லி. விட்டுக் கிண்டி மெழுகுப் பதமாகும் வரை கிளறி பத்திரப் படுத்திக் கொள்க.

பீங்கானில் பத்திரப்படுத்தியதைப் புன்னைக் காயளவு நாற்பது நாட்கள் கொள்ள எட்டு வகைச் சயம், எட்டு வகைக் குன்மம், எண்பது வகை வாதம், இளைப்பு, விஷநீர்க் கோர்வை, இசிவு வலி, கழல் வாதம், கெர்ப்பவலி, கெர்ப்பச் சூலை, புழுக்கள் இவை தீரும். தாளகத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கபாட லேகியம்

பாரப்பா கபாடமென்ற லேகியஞ் சொல்வேன்
பண்பான னாகலொடு அரசு அத்தி
சேரப்பா கருங்காலி ஒதியம் பட்டை
திறமாக பலம்பத்து நிறுத்துக் கொண்டு
சாரப்பா யிருத்துநய்ய யிருதூணி நீரில்
தளமாக யடுப்பேற்றி யெட்டொன் றாக்கி
வாரப்பா பனவெல்லம் பலந்தான் பத்து
வளமாகக் கரைத்துஅதில் பாகு சேரே! 102

பாகிலே தூவுதற்கு மருந்து கேளு
பதறாதே கஞ்சாவைச் சுத்தி செய்து
பாகிலே பலமொன்று தூக்கிக் கொண்டு
பாங்காக சுக்கு சிரக மிளகு
பாகிலே வோமமொடு குரோசாணி ஒமம்
பருவமாய் சிங்கிகாட் டத்திப் பூவும்
பாகிலே சிறுனா கம்வால் மிளகு
பக்குவமா மல்லியொடு ஏல மாமே! 103

ஆமப்பா அதிவிடையம் கிராம்பு திப்பிலி
அப்பனே சாதிக்காய் சாதி பத்திரி
நாமப்பா வகையொன்று பலமொன் றாக
நலமாக யிளவறுப்பாய்ச் சூர ணித்து
வேமப்பா பாகிலே தூவித் தூவி
வெகுசுருக்காய்த் தேன்நெய்யும் விட்டுக் கிண்டி
தாமப்பா பீங்கானில் பதனம் பண்ணு
தப்பாமல் பாக்களவு மண்டலந்தான் கொள்ளே! 104

அளவாகக் கொண்டுவரத் தீரும் நோய்கள்
அப்பனே சூசிகா கிராணி வாய்வு
பலவாகக் கடுப்புமுதல் பாண்டு கிராணி
பாங்கான பேதியொடு உஷ்ண வாய்வு
களவாக மூலத்தின் கிராணி யெல்லாம்
கண்காணா தோடுமடா பித்த வாய்வு

வளவாக கடுப்புமுதல் பாண்டு கிராணி
வாகாக யின்னமொரு வரிசை கேளே! 105

நாகல், அரசு, அத்தி, கருங்காலி, ஒதியம் இவற்றின் பட்டைகள் 350 கி. எடுத்து நன்கு இடித்து 43 லி. தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க. 350 கி. பனை வெல்லத்தைப் பாகாய்க் கரைத்து அக்குடிநீரில் சேர்த்துக் கொள்ளவும். அதில் சுத்தி செய்த கஞ்சாவின் பொடியை 35 கி. தூவிக்கொள்க. சுக்கு, சீரகம், மிளகு, ஓமம், குரோசாணி ஓமம், கற்கடகசிங்கி, காட்டத்திப்பூ, சிறுநாகம், வால்மிளகு, கொத்துமல்லி, ஏலம், அதிவிடையம், கிராம்பு, திப்பிலி, சாதிக்காய், சாதிபத்திரி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து பாகிலே தூவிக் கொள்க. தேன், நெய் இவற்றை வேண்டிய அளவு பாகில் விட்டுக் கிண்டி பக்குவமானவுடன் பீங்கானில் பத்திரப் படுத்தி வைக்கவும். அதனை 2.2 கி. அளவு இருநேரம், நாற்பது நாட்கள் உட்கொள்ள சூசிகாபேதி, வாய்வு, கடுப்பு, பாண்டுநோயில் காணும் பேதிகள், வெப்பவாய்வு, மூலக்கிராணி, பித்தவாய்வு ஆகிய நோய்கள் தீரும்.

திப்பிலி இரசாயனம்

கேளப்பா திப்பிலிர சாய னந்தான்
கெடியான திப்பிலிதான் பலமும் பத்து
நாளப்பா மிளகுஅஞ்சு சுக்கு அஞ்சு
நலமான இருசீரகம் ஓமம் ரெண்டு
ஆளப்பா அரத்தைரெண்டு லவங்கப் பட்டை
அப்பனே தாளீசம் லவங்கப் பத்திரி
காளப்பா திரிபலையுங் கிராம்பு ஏலம்
கருவான கொடுவேலி பலமொன்று தூக்கே! 106

தூக்கியே இளவறுப்பாய்ச் சூர ணித்து
சுகமான சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி
தாக்குவாய் தேன்விட்டுப் பிசைந்து கொண்டு
தப்பாமல் வெருகடிதான் கொள்ளும் போது

தேக்குவா யிரப்போடு ஈளை காசந்
திறமான சேட்டுமனோய் தொண்ணூற் றாறும்
நீக்கியே உதரத்தில் வாய்வ தெல்லாம்
நீங்கிவிடு மண்டலத்தின் நினவாய்ப் பாரே! 107

திப்பிலி 350 கி. மிளகு, சுக்கு இவை இரண்டும் வகைக்கு 175 கி. நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி, ஓமம், பேரரத்தை, சிற்றரத்தை வகைக்கு 70 கிராமும், இலவங்கப் பட்டை, தாளிசப்பத்திரி, இலவங்கப்பத்திரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கிராம்பு, ஏலம், கொடிவேலி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்க. அதற்குச் சம அளவு சர்க்கரை, தேன் சேர்த்துப் பிசைந்து மூவிரலளவு உட்கொள்ள வேண்டும். இவ்வாறு நாற்பது நாட்கள் கொள்ள இரைப்பு, ஈளை, காசம், தொண்ணூற்றாறு வகை சிலேத்தும நோய்கள் தீரும்.

மதுத்தமணி

பாரப்பா புலத்தியனே மேகவகை தீர
பண்பான மதுத்தமணி சொல்லக் கேளு
சேரப்பா சினப்பா அமுக்கி ராவேர்
திறமாக வகையொன்று பலம்பத் தாகும்
சாரப்பா நிலப்பனைவேர் பலந்தா னஞ்சு
தளமான தண்ணிமிட்டான் பலந்தான் ரெண்டு
ஆரப்பா நன்னாரி சங்கு மூலம்
அப்பனே திரிகடுகு திரிபலையு மாமே! 108

ஆமப்பா சொல்லுகிறேன் லவங்கப் பத்திரி
அப்பனே சிறுனாகம் வாய்வி ளங்கம்
போமப்பா மல்லியிரு சீரகம் வோமம்
புகழான குரோசாணி அரத்தை கெந்தம்
நாமப்பா சிறுதேக்கு கண்டங் காலி
நலமான கொடிவேலி விலாமிச்சை மூலம்
தாமப்பா தக்கோலம் வால்மிளகு........
தளமான முந்திரிகை பேரீச்சு கூட்டே! 109

கூட்டடா வெட்பாலை தாமரைக் கிழங்கு
குலமான சாதிக்காய் கிராம்பு பத்திரி
நாட்டடா கருவேம்பி னிலைவ கைக்கு
நலமாக பலமொன்று நிறுத்துக் கொண்டு
காட்டடா இளவறுப்பாய்ச் சூர ணித்து
கருவான குங்குமப்பூ கோரோசனை கற்பூரம்
வாட்டடா கழு நீரைக் கூடச் சேர்த்து
வளமான சர்க்கரைசேர் னாலு வாங்கே! 110

வாங்கியே ஆவின்பால் படிதா னாலு
வளமான சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு
வாங்கியே பாகுபத மாகும் போது
பதறாதே சூரணத்தைப் பாய்ச்சிக் கிண்டி
தேங்கியே தேன்படிதான் ஒன்று வாரு
திறமான ஆவின்நெய் யரைதா னப்பா
வாங்கியே மெழுகுபோல் கிண்டிக் கிண்டி
வளமான பீங்கானில் பதனம் பண்ணே! 111

பண்ணப்பா இருநேரம் பாக்களவு கொள்ள
பகருவேன் தீருகிற வியாதி கேளு
புண்ணப்பா கிரந்தியொடு சூலை தீரும்
புதுமையாங் கண்டத்தில் மாலை தீரும்
நண்ணப்பா வாய்வோடு வாத மெல்லாம்
நாடாது பிரமியங்கள் லிங்கப் புற்று
தண்ணப்பா சேட்டுமனோய் தொண்ணூற் றாறும்
தவறுண்டே போகுமடா பத்தியங் காரே! 112

பரங்கிப்பட்டை, அமுக்கிராவேர் இவற்றை வகைக்கு *350* கி., நிலப்பனைவேர் *175* கி., தண்ணீர்விட்டான் *70* கி. நன்னாரி, சங்கு மூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இலவங்கப் பத்திரி, சிறுநாகம், வாய்விடங்கம், கொத்துமல்லி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், அரத்தை, கெந்தம், சிறுதேக்கு, கண்டங்காலி, கொடிவேலி, விலாமிச்சம்வேர், தக்கோலம்,

வால்மிளகு, முந்திரிகை, பேரீச்சு, தாமரைக்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, கருவேப்பிலை இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்க. குங்குமப்பூ, கோரோசனை, கற்பூரம் இவற்றை வகைக்கு 5 கி. சேர்த்துக் கொள்க. சர்க்கரை 1120 கி., பசும்பால் 5.2 லி. சேர்த்துப் பாகாய்க் காய்ச்சி அதில் மேற்சொன்ன சூரணத்தைப் போட்டுக்கிண்டுக. தேன் 1.3 லி., பசுநெய் 675 மி.லி. இவற்றையும் சேர்த்து மெழுகாகும் வரை கிண்டி பீங்கானில் பத்திரப்படுத்திக் கொள்க. அதனை 2.2 கி அளவு இருநேரமும் நாற்பது நாட்கள் உட்கொள்ள கிரந்தி, சூலை, கண்டமாலை, வாய்வு, வாதம், பிரமியங்கள், இலிங்கப்புற்று, தொண்ணூற்றாறு வகை சிலேத்தும நோய்கள் தீரும். பத்தியங்காக்க வேண்டும்.

சௌபாக்கியச் சுண்டி

காரப்பா உலகத்தோர் நோய்கட் கெல்லாம்
கலங்குமடா சவுபாக்கியச் சுண்டி கேளு
நேரப்பா சுக்கதுதான் பலந்தா னெட்டு
நினவாக மேல்தோலைச் சீவிப் போட்டு
சாரப்பா மொச்சைவிரை பிரமா ணந்தான்
தளமாக வேநறுக்கி புதுச்சட் டிக்குள்
சேரப்பா செம்முள்ளி கச்சந் திராயும்
திரமான முருக்கிலையும் கஞ்சாவை யாமே! 113

ஆமப்பா சிறுசெருப்புக் காத்து வட்டி
அப்பனே சாறுவகை படிகால் வீதம்
நாமப்பா புதுச்சட்டி சுக்கி லிட்டு
நலமாக வெவ்வேறே ரவியு லர்த்தி
தாமப்பா இடித்துநன்றாய்ச் சூர ணித்து
தளமாக வடிகொண்டு அப்பால் வைத்து
போமப்பா தக்கோலம் வாலுளுவை வித்து
புகழான கூகைநீர் கரியபோளம் கூட்டே! 114

கூட்டப்பா வாய்விளங்கந் தாணிக்காய் நெல்லி
கூறான திப்பிலி திப்பிலிமூலஞ் செவியம்
நாட்டப்பா வகையொன்று பலமரைதான் வாங்கி
நலமாக யிளவறுப்பாய்ச் சூர ணித்து
காட்டப்பா அமுக்கிரா பொன்மு சுட்டை
கருவான கண்டங்கத் திரிநன் னாரி
நீட்டப்பா நிலப்பனையும் வகையொன் றுக்கு
நினவாகப் பலம்ரெண்டு நிறுத்துக் கொள்ளே! 115

கொள்ளப்பா சுத்திசெய்து யிடித்துத் தூளாய்
குணமாக வடிகொண்டு வைத்துக் கொண்டு
விள்ளப்பா மூவகைத்தூள் ஒன்றாய்க் கூட்டி
விளங்கவே சமனாகச் சர்க்கரையை வாங்கி
நள்ளப்பா ஆவின்பால் படிதான் ரெண்டில்
நலமாகச் சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு
அள்ளப்பா அடுப்பேற்றி பாக தானால்
அப்பனே முன்தூளைக் கொட்டிக் கிண்டே! 116

கிண்டியப்பா தூளாக நன்றாய்க் கிண்டி
கிருபையாம் புதுக்கலசந் தனில டைத்து
நன்றப்பா வெருகடித்தூ ளிருநேரங் கொள்ள
நலமாகத் தீரும்நோய் நவிலக் கேளு
கண்டப்பா கிராணிவகை யெல்லாந் தீரும்
கருவான பிரமியங்கள் காணா தோடும்
கண்டப்பா வாதமொடு பித்த மெல்லாம்
காயாதே வோடுமடா கண்டு கொள்ளே! 117

கொள்ளவே அக்கினியாம் மந்தந் தீரும்
கூறான மேகவகை வாத சூலை
கொள்ளவே அக்கினியா மந்தந் தீரும்
கூர்ப்பான வாயூறல் வாய்க சப்பு
கொள்ளவே வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்
குடிபோகுஞ் சவுபாக்கியச் சுண்டி யென்றால்
கொள்ளவே பத்தியந்தான் புளிக சப்பு
கூறான புகையோடு பெண்ணுந் தள்ளே! 118

சுக்கு 280 கி. எடுத்து மேல் தோலை நீக்கி மொச்சை விதையளவு வெட்டி புதுச்சட்டிக்குள் போட்டுக் கொள்க. செம்முள்ளி, கச்சந்திராய், முருக்கிலை, கஞ்சா, சிறு செருப்படை, காத்தொட்டி இவற்றின் சாறுகளை வகைக்கு 325 மிலி. எடுத்துப் புதுச்சட்டியிலூற்றி தனித்தனியே வெயிலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து தனியே வைத்துக் கொள்க.

வாலுளுவை விதை, கூகை நீறு, கரியபோளம், வாய்விடங்கம், தான்றிக்காய், நெல்லிக்காய், திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம் இவற்றை வகைக்கு 17 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்க.

அமுக்கிரா, பொன்முசுட்டை, கண்டங்கத்திரி, நன்னாரி, நிலப்பனை இவற்றை வகைக்கு 70 கி. எடுத்துச் சுத்தி செய்து முறைப்படி சூரணம் செய்து கொள்க. இந்த மூன்று வகைச் சூரணங்களையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்க.

மேற்கூறிய சூரணங்களின் அளவுக்குச் சர்க்கரை எடுத்து பசும்பால் 2.6 லி. ஊற்றி கரைத்துப் பாகாய்க் காய்ச்சி அதில் சூரணங்களைக் கொட்டிக் கிளறவும். நன்றாகக்கிண்டியவுடன் புதுக்கலசத்தில் அடைத்து வைத்து மூவிரலளவு இரண்டு நேரமுங் கொள்ள கிராணி வகைகள், பிரமியங்கள், வாதம், பித்தம், மேகவகைகள், வாதசூலை, பசியெடுக்காமை, வாயூறல், வாய்க் கசப்பு, வயிற்று வியாதிகள் ஆகியன தீரும். புளி, கசப்புள்ள பொருட்கள், புகை, பெண் இவற்றை நீக்கி பத்தியங் காக்க வேண்டும்.

கூழ்ப்பாண்ட லேகியம்

தள்ளவே கூழ்ப்பாண்ட லேகி யம்கேள்
தளமான கூழ்ப்பாண்ட சாறுபடி நாலு
வில்ளவே தாழையுட விழுதுச் சாறு
விருதாகப் படியொன்று தென்னம்பூ வொன்று
நள்ளவே பழச்சாறு படிதா னொன்று
நலமான ஆவின்பால் படிதான் ரெண்டு

பள்ளவே சர்க்கரைதான் பலமும் பத்து
பதறாதே கரைத்ததனைப் பாகு சேரே! 119

சேரப்பா சிரகமும் மல்லி கோஷ்டம்
திறமான மிளகுமா சிக்காய் ஏலம்
காரப்பா சாதிக்காய் சாதி பத்திரி
கருவான மதுரமொடு தாளி சந்தான்
வாரப்பா வகையொன்று பலமொன் றாக
வகையாகச் சூரணித்துப் பாகில் தூவி
நேரப்பா தேன்நெய்யில் படியரைதான் விட்டு
நினவாகக் கூழ்போலக் கிண்டி வாங்கே! 120

வாங்கியே புன்னைக்காய் வீத மாக
வளமாக லேகியத்தில் கொண்டா யானால்
நீங்கிப்போம் காமாலை சோகை யெல்லாம்
நீங்காத அத்திசுரம் அத்தி வெட்டை
தாங்கியதோர் பிரமியங்கள் வெள்ளை விழ்தல்
தளமாகும் தேகபுஷ்டி விந்து ஊறும்
பாங்கியே உஷ்ணநோய் நீர்ச்சு ருக்கு
பறக்குமடா புகையிலையும் புளியுந் தள்ளே! 121

கூழ்பாண்டத்தின் சாறு 5.2 லி., தாழையின் விழுதுச் சாறு 1.3 லி., தென்னம்பூச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு வகைக்கு 1.3 லி., பசும்பால் 2.6 லி., சர்க்கரை 350 கி. சேர்த்துப் பாகாய்க் காய்ச்சுக. அதில் சீரகம், மல்லி, கோட்டம், மிளகு, மாசிக்காய், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், தாளிசபத்திரி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துச்சூரணம் செய்து தூவிக் கிளறிக் கொள்க. தேன், நெய் இவற்றை வகைக்கு 675 மி.லி. விட்டு கூழ் போலாகும் வரை கிளறிக் கொள்க. அதனைப் புன்னைக்காயளவு உட்கொண்டால் காமாலை, சோகை, எலும்புசுரம், எலும்புவெட்டை, பிரமியங்கள், வெள்ளை தீரும், உடல் வன்மை பெறும்; தாது விருத்தியாகும். வெப்ப நோய்கள், நீர்ச்சுருக்கு தீரும். புகையிலை, புளி இவற்றை நீக்க வேண்டும்.

அக்கினியாஞ்சூரணம்

தாளப்பா அக்கினியாஞ் சூரணஞ் சொல்வேன்
தளமான கொடுவேலி திரிகடு கோமம்
வாளப்பா ஆனைத்திப் பிலியும் கோட்டம்
விளங்கியதோ ரெண்டுப்பு வகையொன்று பலந்தான்
நள்ளப்பா காயங்கால் வசம்பு கால்தான்
நலமான கடுகுபொடி அரைப்பலந்தான் கூட்டி
தெள்ளப்பா யிளவறுப்பாய்ச் சூர ணித்து
திறமான சீனிசமன் கூட்டிக் கொள்ளே! 122

கொள்ளவே வெருகடிதான் வெந்நீரில் கொள்ள
கூறான கிராணிவகை வுதிர வாய்வு
பள்ளவே முகவாய்வு வாத மெல்லாம்
பறக்குமடா திரிதோஷ சூர ணங்கேள்
தள்ளவே முந்திரிகை பேரிச்சம் பழந்தான்
தளமான அதிமதுரம் முக்கா வேளை
நள்ளப்பா நெற்பொரியும் முத்தக் காசு
நலமான ஏலமொடு கிராம்பு கூட்டே! 123

கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், ஆனைத் திப்பிலி, கோட்டம், சோற்றுப்பு, இந்துப்பு இவற்றை வகைக்கு 35 கி. எடுக்க. பெருங்காயம், வசம்பு வகைக்கு 9 கி., கடுகுப்பொடி 17 கி. சேர்த்து இளவறுப்பாய் வறுத்துக் கொள்க. அவ்வெடைக்குச் சம அளவு சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளவும். அதில் மூவிரலளவு எடுத்து வெந்நீரில் உட்கொள்ள கிராணி வகைகள், உதிரவாய்வு, முகவாய்வு, வாதம் இவை தீரும்.

திரிதோட சூரணம்

கூட்டுவாய் கொத்துமல்லி மிளகு வேலி
கூறான திப்பிலியுங் கூகை நீறும்
நாட்டுவாய் சாதிக்காய் சாபத்திரி கூட
நலமான வால்மிளகு லவங்கப் பத்திரி

ஆட்டுவாய் வகையொன்று பலமொன் றாக
அப்பனே சூரணித்துச் சர்க்கரை கூட்டி
வேட்டுவாய் வெருகடிதான் தேனில் கொள்ள
விருதாகத் திரும்நோய் விளம்பக் கேளு! 124

கேளப்பா அந்திரவாய்வு பாண்டு ரோகம்
கெடியான தாபசுரம் மயக்கம் தூக்கம்
வாளப்பா பித்தவகை நாற்ப துந்தான்
வளமான அரோசியங்க ளன்ன தோஷம்
நாளப்பா உஷ்ணநோய் சேட்டு மங்கள்
நலமான அக்கினியாம் மந்தம் வாய்வு
தாளப்பா கையெரிவு காந்த லெல்லாம்
தவறுண்டே போகுமடா நெய்யில் கொள்ளே! 125

முந்திரிகை, பேரீச்சம்பழம், அதிமதுரம், முட்காவேளை, நெற்பொரி, முத்தக்காசு, ஏலம், கிராம்பு, கொத்துமல்லி, மிளகு, வேலிப்பருத்தி, திப்பிலி, கூகைநீறு, சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, இலவங்கபத்திரி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து முறைப்படி சூரணம் செய்துகெள்க. அதனுடன் சம அளவு சர்க்கரை சேர்த்து மூவிரலளவு தேனில் உட்கொள்ள அந்திரவாய்வு, பாண்டுநோய், தாபசுரம், மயக்கம், தூக்கம், நாற்பது வகை பித்தம், உணவில் வெறுப்பு, அன்னதோடம், வெப்பநோய், சிலேத்துமங்கள், பசியெடுக்காமை, வாய்வு தீரும். நெய்யில் உட்கொள்ள கையெரிவு, காந்தல் தீரும்.

அசுவகெந்தி சூரணம்

கொள்ளவே அசுவகெந்தி சூர ணங்கேள்
குலமான லவங்கமொன்று னாகப்பூ ரெண்டு
தள்ளவே ஏலம்நால் மிளகு எட்டு
தளமான திப்பிலியி ரெட்டு சுக்கு
விள்ளவே முப்பத்து ரெண்டுங் கூட்டி
விசையான அசுவகெந்தி அறுபத்து னாலு
நள்ளவே சுத்தித்து உலர்த்திக் கொண்டு
நலமாக யிளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே! 126

செய்யப்பா சமனாக சர்க்கரையைக் கூட்டி
திறமான ஆவின்பால் நெய்யில் கொள்ள
கைய்யப்பா வெருகடிதான் கொள்ளும் போது
கனமான மேகவகை யெல்லாம் போகும்
மெய்யப்பா அத்திசுரம் வெட்டை போகும்
மேலான சுவாசமொடு யீளை போகும்
தைய்யப்பா மேகத்தின் பாண்டு போகும்
தளமான ஊறலெல்லாஞ் சாரா தென்னே! 127

இலவங்கம் ஒரு பங்கு, நாகப்பூ இரண்டு பங்கு, ஏலம் நான்கு பங்கு, மிளகு எட்டு பங்கு, திப்பிலி பதினாறு பங்கு, சுக்கு முப்பத்திரண்டு பங்கு, அசுவகெந்தி அறுபத்து நான்கு பங்கு எடுத்து முறைப்படி சுத்தி செய்து காயவைத்து இள வறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்ளவும். அவ்வள விற்குச் சமமாய் சர்க்கரையைச் சேர்த்து பசும்பால், நெய்யில் மூவிரலளவு உட்கொள்ள மேகவகைகள், எலும்புசுரம், வெட்டை, சுவாசம், ஈளை, மேகபாண்டு ஆகிய நோய்கள் தீரும்.

இஞ்சி சூரணம்

சாரவே இஞ்சி சூரணஞ் சொல்வேன்
தருவான இஞ்சியது பலந்தான் பத்து
சேரவே மேல்தோலைப் போக்கிப் போட்டு
செருகவே நீக்கியதை பழச்சா றூட்டி
தாரவே நாளொன்று ஊறப் போட்டு
தவறாமல் மறுநாள்தான் ரவியு லர்த்தி
ஆறவே சிரகந்தா னொன்று கூட்டி
அப்பனே முன்போல பழச்சா றூட்டே! 128

ஊட்டியே மறுநாள்தான் காயப் போட்டு
உத்தமனே மிளகோடு தாளிச பத்திரி
நாட்டியே திப்பிலியும் ஏலங் கிராம்பு
நலமான கோஷ்டமொடு வாய்வி ளங்கம்
வாட்டியே யிளவறுப்பாய்ச் சூர ணித்து
வளமான சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி

நீட்டியே வெருகடிதான் கொண்டா யானால்
நீங்கிவிடும் பித்தமுதல் வாய்வு போமே! 129

போமப்பா அரோசியங்க ளன்ன தோஷம்
புகழான பித்தவெட்டை பொருமல் விம்மல்
நாமப்பா வாய்வொடு வாத மெல்லாம்
நாடாது சூலையெல்லாம் நளின மாகுஞ்
சேமப்பா வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்
திறமாகத் தீருமடா பத்தி யங்கால்
நாடப்பா உலகோர்க்கா யிரங்கிச் சொன்னோம்
நலமான சூரணத்தை நாடிப் பாரே! 130

350 கி. இஞ்சியின் மேல்தோலை நீக்கி எலுமிச்சம் பழச்சாறு ஊற்றி ஒருநாள் முழுவதும் ஊற வைத்து மறுநாள் வெயிலில் காயவைத்துக் கொள்க. சீரகத்தையும் முன் கூறியது போலவே பழச்சாற்றில் ஊறவைத்து மறுநாள் வெயிலில் காயவைத்துக் கொள்ளவும். மிளகு, தாளிசபத்திரி, திப்பிலி, ஏலம், கிராம்பு, கோட்டம், வாய்விடங்கம் இவற்றுடன் உலர்ந்த இஞ்சி, சீரகத்தையும் சேர்த்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து அதற்குச்சமமான சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளவும். அதில் மூவிரலளவு உட்கொள்ள பித்தம், வாய்வு, அரோசிகங்கள், அன்னதோடம், பித்தவெட்டை, பொருமல், விம்மல், வாய்வு, வாதம், சூலை, வயிற்றிலுள்ள நோய்கள் தீரும். பத்தியங்கள் காத்துக் கொள்ள வேண்டும்.

தாளிசபத்திரி சூரணம்

நாட்டியே சொல்லுகிறேன் புலத்தியரே அய்யா
நலமான தாளிசபத்திரி சூர ணந்தான்
காட்டிய தாளிசபத்திரி பலந்தான் பத்து
கருவான திரிகடுகு திரிப லாதி
நீட்டியே கோட்டமொடு அக்கிரா காரம்
நினவான அத்தித் திப்பிலி சீரகம்
கூட்டியே கொத்துமல்லி வாய்வி ளங்கம்
கூறான கிராம்பேலம் சாதிக் காயே! 131

காயமொடு பத்திரியு மாஞ்சில் சோம்பு
கருவான வால்மிளகு லவங்கப்பட்டை
தாயோடு இவையெல்லாம் பலமொன் றாக
தவறாமல் சூரணித்து வடியே கொண்டு
சேயோடு மண்டலந்தான் கொண்டா யானால்
திறமாகப் பிசைந்துகொண்டு வெருகடிதான் னேரம்
வாயோடு மண்டலந்தான் கொண்டா யானால்
வாங்குமடா சயகாசம் ஈளை போமே! 132

போமடா அத்திசுரம் அத்தி வெட்டை
பொறுக்காத நீர்த்தாகம் புண்ணும் நெஞ்சில்
நாமடா பித்தவெட்டை பித்த பாண்டு
நாடாது கிராணிவகை யெல்லாந் தீரும்
தாமடா அரோசியங்க ளன்ன தோஷம்
தளராது விம்மலொடு விக்கல் கக்கல்
சாமடா கைகா லெரிவு காந்தல்
சாந்தமாம் புகையோடு புளியுந் தள்ளே! 133

தாளிசபத்திரி 350 கி., சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோட்டம், அக்கிராகாரம், யானைத்திப்பிலி, சீரகம், கொத்துமல்லி, வாய்விடங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், பெருங்காயம், சாதிபத்திரி, சடாமாஞ்சில், சோம்பு, வால்மிளகு, இலவங்கப்பட்டை இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துச் சூரணமாய்ச் செய்து கொள்க. அவ்வளவே சர்க்கரையைச் சேர்த்து மூவிரலளவு நாற்பது நாட்கள் உட்கொண்டால் சயம், காசம், ஈளை, எலும்புசுரம், எலும்புவெட்டை, நீர்த்தாகம், புண், பித்த வெட்டை, பித்தபாண்டு, கிராணி வகைகள், அரோசிகங்கள், அன்னதோடம், விம்மல், விக்கல், கக்கல், கைகால் எரிவு, காந்தல் தீரும். புகை, புளி நீக்கிக் கொள்ளவும்.

பஞ்சதீபாக்கினி சூரணம்

தள்ளவே பஞ்சதி பாக்கினி யான
தளமான சூரணந்தான் சொல்லக் கேளு

விள்ளவே திரிகடுகு ஏலம் சீரகம்
விதமாக வகையொன்று பலந்தா னொன்று
நள்ளவே இளவறுப்பாய்ச் சூர ணித்து
நலமாக வடிகொண்டு சர்க்கரைதான் சேர்த்து
தெள்ளவே தேன்நெய்யில் வெருகடிதான் கொள்ள
திறமாகத் தீரும்நோய் செப்பக் கேளு! 134

செப்புறேன் உஷ்ணநோய் சூலை வாய்வு
சேர்ந்தபித்த வாய்வோடு சிலேட்டும ரோகந்
தப்புறேன் பொருமலொடு செரியா மாந்தம்
தளமான மயக்கமொடு கிறுகி றுப்பு
வெப்புறேன் அத்திசுரம் அத்தி வெட்டை
வேறான மூலத்தின் வாய்வு தீரும்
நப்புறேன் புளிகசப்பு துளியுந் தள்ளு
நலமான காந்தம்வைத்து நலமாய்க் கொள்ளே! 135

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து, அதே அளவு சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளவும். அதில் மூவிரலளவு தேன் அல்லது நெய்யில் உட்கொள்ள வெப்பநோய், சூலை வாய்வு, பித்த வாய்வு, சிலேத்துமரோகம், பொருமல், செரியா மாந்தம், மயக்கம், கிறுகிறுப்பு, எலும்புசுரம், எலும்பு வெட்டை, மூலவாய்வு தீரும், புளி, கசப்பு இவற்றை அறவே நீக்க வேண்டும்.

நிலவாகைச் சூரணம்

நலமாகச் சூரணமொன்று சொல்லக் கேளு
நன்றாக நிலவாகை சுக்குங் கூட்டி
பிலமாக மிளகுவாய் விளங்கம் வோமம்
பேராக வகைக்குவொரு பலமே தூக்கி
சிலமாக ரவிமுகத்தி லூறப் போட்டு
சிதறாமல் யிடித்துசூ ரணமே செய்து
தலமான சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி
தவறாம லிருநேரங் கொண்டால் கேளு! 136

கேளப்பா வாய்வென்ற தெல்லாம் போகும்
கெடியான பித்தமெல்லாம் கீழ்நோக் கிப்போம்
வாளப்பா உஷ்ணநோ யெல்லாந் தீரும்
வளமான பொருமலொடு விம்மல் தீருந்
தாளப்பா சேஷ்டுமநோ யெல்லாந் தீரும்
தளமான விக்கலொடு வாந்தி தீரும்
நாளப்பா உடம்பெரிவு சுவாச காசம்
நன்றாகத் திருமடா சாத்தக் கேளே! 137

சாத்தக்கேள் நீரருகல் மலபெந் தங்கள்
தவறாத வயிறுவிம்மல் இருமல் தீரும்
தேத்துறேன் குன்மமெட்டு மகோத ரங்கள்
தெளிவாக வாய்வெல்லாந் தீரும் தீரும்
ஆத்துறேன் கெற்பரோகம்.........................
ஆச்சரியம் புழுக்களெல்லாம் அகன்று போமே! 138

நிலவாகை, சுக்கு, மிளகு, வாய்விடங்கம், ஓமம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துத் தண்ணீரில் ஊறப்போட்டு வெயிலில் உலர வைத்துக் கொள்க. பின் அதனை இடித்துச் சூரணம் செய்து அவ்வளவே சர்க்கரையைச் சேர்த்து இரண்டு நேரமும் உட்கொண்டால் வாய்வு, பித்தம், வெப்பநோய்கள், பொருமல், விம்மல், சிலேத்தும நோய், விக்கல், வாந்தி, உடலெரிவு, சுவாசகாசம், நீர்ச்சுருக்கு, மலக்கட்டு, வயிறு விம்முதல், இருமல், எட்டு வகைக் குன்மம், மகோதரங்கள், வாய்வு, கர்ப்பநோய், கிருமிகள் தீரும்.

வல்லாரைச் சூரணம்

போமப்பா சூரணமொன்று சொல்லக் கேளு
புதுமையாம் வல்லாரை பாலில் போட்டு
நாமப்பா அவித்துலத்தி காயப் போட்டு
நலமாகச் சூரணித்து பலம்பத் தானால்
தாமப்பா கிராம்பேலஞ் சாதிக் காயுந்
தளமான பத்திரியும் மாசக் காயும்

தேமப்பா தாளிசபத்திரி திரிப லாதி
திறமாக இளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே! 139

செய்யப்பா வகையொன்று பலமொன் றாக
திறமாக ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
வைய்யப்பா சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி
பதறாதே வெருகடிதான் நெய்யில் கொள்ள
தையப்பா மேகமெல்லாந் தவறுண் டேபோம்
சரீரத்தில் காந்தியெல்லாஞ் சாந்த மாகும்
கையப்பா பிரமியங்கள் கிரந்தி யெல்லாம்
கனமான உஷ்ணநோய் காணா தென்னே! 140

காணாது நீரருகல் நீரெரிவு
கண்ணெரிவு கண்புகைச்சல் காணா தோடும்
தோணாது உடம்பெரிவு மூலச் சூடு
சுருக்கான நீர்ச்சூடு குளிர்ந்து போகும்
நாணாது மதுமேகம் துத்தி மேகம்
நாடாது சயரோகம் நளின மாகும்
தோணாது தேகமெல்லாம் குளிர்ச்சி காணும்
கொண்டுவர அப்பிரகம் வைத்துக் கொள்ளே! 141

வல்லாரையைப் பாலில் வேகவைத்து உலரவைத்து சூரணம் செய்து 350 கி. எடுத்துக் கொள்ளவும். கிராம்பு, ஏலம், சா.திக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், தாளிசபத்திரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து கொள்க. இரண்டு வகைச் சூரணங்களையும் ஒன்று சேர்த்து அந்த அளவு சர்க்கரையையும் உடன் கலந்து மூவிரலளவு நெய்யில் கொடுக்க மேகம், உடலில் வெப்பம், பிரமியங்கள், கிரந்தி, வெப்ப நோய், நீரருகல், நீரெரிச்சல், கண்ணெரிவு, கண்புகைச்சல், மதுமேகம், துத்திமேகம், நீர்ச்சூடு, சயரோகம் ஆகியவை நீங்கும்.

சஞ்சீவி சூரணம்

கொள்ளவே சஞ்சிவி சூரணஞ் சொல்வேன்
குணமான சிந்திலடித் துண்டு வாங்கி
விள்ளவே மேல்தோலைப் போக்கிப் போட்டு
வெருளாதே நீக்கியதை ஊறப் போட்டு
கள்ளவே யிடித்துநன்றாய்ச் சூர ணித்து
கருவாக வடிகொண்டு படிதான் வாங்கி
நள்ளவே முன்னூற்றில் சுத்தி செய்து
நலமான பொடிபடிக்கு ஆவின்பால் படியே! 142

படியாக அரைப்படிதான் சீனி போட்டு
பாங்காக ரவியுலர்த்திக் காய்ந்த பின்பு
அடியாக வுரலிலிட்டு யிடித்துக் கொண்டு
அப்பனே சாதிக்காய் சாதி பத்திரி
கடியாக வால்மிளகு ஏலங் கிராம்பு
கசகசா தாளிச மாசிக் காயும்
வடிவாக யிளவறுப்பாய்ச் சூர ணித்து
வளமாக வகைக்கொரு பலந்தான் கூட்டே! 143

கூட்டியே ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
குறையாம லாறுபலஞ் சீனி சேர்த்து
சாட்டியே வெருகடிதான் நெய்யில் கொள்ள
நலமாகத் தீரும்நோய் நவிலக் கேளு
தாட்டிகமாய் மேகநீ ரிருவ தும்போம்
தளமான பிரமியங்கள் மேக மெல்லாம்
வாட்டியே வற்றியதோர் தேக மெல்லாம்
வளமாகும் அத்திசுரம் வெட்டை போமே! 144

போமப்பா மூலத்தின் சூடு போகும்
பொல்லாத பித்தவகை யெல்லாம் போகும்
நாமப்பா கண்ணெரிவு கைகால் காந்தல்
நாடாத தேகமெல்லாம் குளிர்ச்சி யாகும்
தாமப்பா யூறலெல்லாம் தவறுண் டேபோம்
தனமான கபாலத்தில் ரிணங்கள் தீரும்
வேமப்பா வாலைலரச செந்தூ ரந்தான்
வெகுசுருக்காய் பணவிடை அப்பிரகங் கொள்ளே! 145

சீந்தில் துண்டின் மேல்தோலை நீக்கி நீரில் ஊறப்போட்டு நன்கு இடித்து முறைப்படி சூரணமாக்கிக் கொள்ளவும். 1.3 லி. சூரணத்திற்கு அதே அளவு பசும்பால் சேர்த்துக் கொள்க. 675 மி.கி. சர்க்கரை சேர்த்து வெயிலில் காயவைத்து இடித்துச் சூரணமாக்கிக் கொள்ளவும்.

சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, ஏலம், கிராம்பு, கசகசா, தாளிசபத்திரி, மாசிக்காய் இவற்றை இளவறுப்பாய் வறுத்துச் சூரணமாய்ச் செய்து வகைக்கு 35 கி. சேர்த்துக் கொள்க. மேற்கூறப்பட்ட இருவகைச் சூரணங்களையும் ஒன்று சேர்த்து 210.கி. சர்க்கரையைச் சேர்த்துப் பத்திரப்படுத்தவும். மூவிரலளவு சூரணத்தை நெய்யில் கொள்ள மேகம், நீரருகல், பிரமியங்கள், அத்திசுரம், வெட்டை, மூலச்சூடு, பித்தவகைகள், கண்ணெரிவு, கைகால் எரிவு, ஊறல், தலையில் வரும் புண்கள் தீரும். உடல் குளிர்ச்சியாகும். வாலை ரச செந்தூரத்தையும் அப்பிரகச் செந்தூரத்தையும் 488 மி.கி. அளவு உட்கொள்ள நலமாகும்.

ஏலாதிச் சூரணம்

கொள்ளவே ஏலாதி சூர ணங்கேள்
குலமான வங்கமொன்று மிளகு ரெண்டு
விள்ளவே னாகம்னால் தாளிச மெட்டு
விதமான கூகைநீர் பதினா றாகும்
நள்ளவே சுக்கதுதான் முப்பத்தி ரெண்டு
நலமான ஏலமது அறுபத்தி னாலு
கள்ளவே சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி
கலந்துபுது கலசத்தில் பதனம் பண்ணே! 146

பண்ணவே வெருகடித்தூள் யிருநேரங் கொள்ள
பறக்குமடா பித்தமொடு வாதம் வாய்வு
தண்ணவே கிரந்திரிண மரிக்கி ரந்தி
தளமான மேகவூறல் சொறிசி ரங்கு
நண்ணவே சில்விஷங்கள் நாடா தோடும்
நலமான குஷ்டமொடு குறைநோய் திரும்
பெண்ணவே பெரும்பாடு எலும்பு ருக்கி
பின்பாரா தோடுமடா இன்னங் கேளே! 147

இலவங்கம் ஒரு பங்கு, மிளகு இரண்டு பங்கு, நாகப்பூ நான்கு பங்கு, தாளிசம் எட்டு பங்கு, கூகைநீறு பதினாறு பங்கு, சுக்கு முப்பத்திரண்டு பங்கு, ஏலம் அறுபத்துநான்கு பங்கு சேர்த்து முறைப்படி சூரணமாக்கிக் கொள்க. அதே அளவு சர்க்கரையைச் சேர்த்துப் புதிய கலயத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரலளவு இருநேரங் கொள்ள பித்தம், வாதம், வாய்வு, கிரந்தி, அரிக்கிரந்தி, மேகவூறல், சொறிசிரங்கு. வண்டு முதலியவற்றால் ஏற்படும் கடிகள், குட்டம், பெரும்பாடு, குறைநோய், எலும்புருக்கி ஆகிய நோய்கள் தீரும்.

அசுவகெந்தி பல ராட்சசத் தைலம்

ஒன்றான உலகத்தோர் நோய்கட் கொல்லாம்
உரைக்கிறேன் தைலமொன்று உசித மாக
நன்றாக அசுவகெந்தி பலராட் சசத
நாமமது சொல்லுகிறோம் நவிலக் கேளு
சென்றான அசுவகெந்தி பலமூ வஞ்சு
சிறுமுட்டி பதினஞ்சு வெள்ளறுகு நாலு
குன்றான நன்னாரி சிந்தில்விலா மிச்சை
கோரையுடன் நெய்ச்சிட்டி அவுரி எண்ணெய்! 148

எண்ணவே நாரத்தைத் துளசி வெட்டி
இதமான மூலவகை பலந்தான் நாலு
நண்ணவே அகில்நாலு தேவம் நாலு
நலமான கிழ்னாடன் பலந்தா னெட்டு
தண்ணவே கொம்பரக்கு பலந்தா னெட்டு
தள்ளிவிட்டு வகையெல்லாம் பதினஞ் சாகும்
வொண்ணவே யிடித்துநன்றா யிருதூணி நீரில்
ஒருவிறகால் தியிட்டு சோடசத்தொன் றாக்கே! 149

ஆக்குவா யெள்ளெண்ணை சேர்தா னஞ்சி
அதில்பாதி தயிர்தண்ணி பால்சே ரஞ்சு
தூக்குவாய் கற்கவகை மருந்து கேளு
துடியான திரிகடுகு திரிப லாதி

மார்க்கமாய் கத்தூரி மதுரங் கோஷ்டம்
மாஞ்சில்முச் சிரகமும் பூஞ்சாந்து கெந்தம்
பார்க்கும் மரமஞ்சள் ரோகணி செவ்வள்ளி
பச்சிலை பூலாமுலங் கிளியூறல் கூட்டே! 150

கூட்டுவாய் சதகுப்பை லவங்கப் பட்டை
கூறலாம் வகைக்குமரைப் பலம தாக
ஆட்டுவா யாவின்பால் விட்டு நன்றாய்
அப்பனே கியாழமெண்ணெய் தனில்க ரைத்து
நாட்டுவா யடுப்பேற்றி கொதியாம் போது
நலமான முன்னவர்க்குக் கியாழம் விட்டு
மூட்டுவா யடுப்பேற்றி முதிரா மல்தான்
முன்னவர்க்குப் பூசித்து வடித்தி டாயே! 151

வடித்திட்ட தைலமது மூழ்கும் போது
வாகாகத் தீருகிற வியாதி கேளு
பிடித்திட்ட மேகத்தின் சூலைபதி னெட்டும்
பேரான வாதத்தின் சூலை தானும்
வடித்திட்ட பித்தசுரம் வாதசுரம் வாய்வு
மயக்கமொடு சிலேட்டுமசுரம் மாண்டு போகும்
அடித்திட்டு சண்ணுமடா பித்தவெட்டை யெல்லாம்
அணுகாது அக்கினியாம் மந்தந் தானே! 152

மந்தமொடு பாண்டுவகை எல்லாம் போகும்
மைந்தனே கண்புகைச்சல் கைகால் காந்தல்
பெந்தமாம் உடம்பெரிவு சுவாச காசம்
பின்பாரா தோடுமடா மேக மெல்லாம்
பந்தமாம் பத்தியந்தான் புளிக சப்பு
பாங்கான புகையோடு பெண்ணுந் தள்ளு
இந்தவகை என்னைப்போலே ஆருஞ் சொல்லார்
இகத்திலுள்ளோர் பிழைக்கவென்று யிரங்கி னேனே! 153

உலகிலுள்ள பல நோய்களுக்கும் தைலமான அசுவகெந்தி பலராட்சசத் தைலத்தைக் கூறுகிறேன். அசுவகெந்தி, சிற்றாமுட்டி வகைக்கு 525 கி., வெள்ளறுகு 140 கி., நன்னாரி, சீந்தில்,

விலாமிச்சை, கோரை, நெய்ச்சிட்டி, அவுரி, நாரத்தை, துளசி, வெட்டிவேர் இவற்றை வகைக்கு 140 கி., அகில், தேவதாரம் வகைக்கு 140 கி., கொம்பரக்கு, கீழாநெல்லி வகைக்கு 280 கி. எடுத்திடித்து 43 லி. தண்ணீரில் போட்டு ஒரு விறகால் எரியிட்டுப் பதினாறில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொள்க. அதனுடன் நல்லெண்ணெய் 1½ லி., தயிர்த்தண்ணீர் 675 மி.லி., பால் 1½ லி. சேர்த்துக் கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கஸ்தூரி, அதிமதுரம், கோட்டம், சடாமாஞ்சில், நற்சீரகம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், பூஞ்சாந்து, சந்தனம், மரமஞ்சள், கடுகுரோகணி, செவ்வள்ளி, திருநீற்றுப் பச்சிலை, பூலாங் கிழங்கு, கிளியூறல், சதகுப்பை, இலவங்கப்பட்டை இவற்றை வகைக்கு 17 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்சொன்ன குடிநீர் எண்ணெயில் கரைத்துக் கொதிக்க வைத்துக் கொள்க. முதிராத பக்குவத்தில் எடுத்து வடித்து வைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்தை மூழ்கினால் பதினெட்டு வகை மேக சூலைகள், வாத சூலைகள், பித்தசுரம், வாதசுரம், வாய்வு, மயக்கம், சிலேட்டுமசுரம், பித்தவெட்டை, பசி மந்தம், பாண்டு, கண்புகைச்சல், கைகால் எரிதல், உடலெரிவு, சுவாசகாசம், மேகம் பலவகைகள் ஆகிய நோய்கள் தீரும். புளி, கசப்பு, புகை, பெண் இவற்றை நீக்கிக் கொள்ள வேண்டும். இந்த எண்ணெயைப் போன்று நோயை நீக்கும் சிறப்புடையது வேறு எதுவும் இல்லை.

வில்வாதித் தைலம்

இரங்கியே தைலமொன்று சொல்லக் கேளு
இதமான வில்வாதி யென்ற நாமம்
பரங்கியே வில்வமொடு விலாமிச்சை கோரை
பாங்கான சஞ்சீவி வகையொன் றுக்கு
தாங்கியே அதுநாலு பலந்தா னெட்டு
தரித்திடித்து சகலவெள்ள நீரில் போட்டு

அடங்கியே சோடசத்தொன் றாக்கிக் காய்ச்சி
அப்பனே கொம்பரக்கு சேர்தான் ரெண்டே! 154

ரெண்டான தூணிநீ ரெட்டொன் றாக்கி
நினவாக எள்ளெண்ணை படிதா னஞ்சு
குன்றான ஆவின்பால் படிதா னஞ்சு
குலமான கற்கவகை சொல்லக் கேளு
நன்றான திரிகடுகு திரிப லாதி
நலமான கஸ்தூரி மதுரங் கோட்டம்
கன்றாக யிருசிரக மாஞ்சில் மஞ்சள்
கருதுகெந்தம் கிளியூறல் பூஞ்சாந் தெண்ணே! 155

எண்ணவே செவ்வள்ளி லவங்கப் பட்டை
இதமான பச்சையொடு பூலா ஏலம்
பண்ணவே வகையொன்று பலந்தான் வாங்கி
பாங்கான ஆவின்பால் விட்டு ஆட்டி
முன்னவே கஷாயமெண்ணெய் தனில்க ரைத்து
மோகமா யடுப்பேற்றிக் கமல மாக
கண்ணவே முதிராமல் மெழுகுபத மானால்
கணபதியைப் பூசித்து வடித்தி டாயே! 156

வடித்திட்ட தைலமது மூழ்கும் போது
வாகாகத் தீருகிற வியாதி கேளு
பிடித்திட்ட மேகநீ ரிருவ தும்போம்
பேரான பித்தவகை நாற்ப தும்போம்
துடித்திட்ட குன்மமெட்டும் துலைந்து போகும்
துலையாத சிரசில்நோய் சொல்லா தோடும்
கடுத்திட்ட மேகவகை வறட்சி யெல்லாம்
கண்காணா தோடுமடா கருதிப் பாரே! 157

வில்வம், விலாமிச்சம், கோரை, சீந்தில் இவற்றை வகைக்கு 280 கி. எடுத்து தண்ணீரில் போட்டு பதினாறில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொள்க, 560 கி. கொம்பரக்கை 21 லி. தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்க.

நல்லெண்ணெய் 6.5 லி., பசும்பால் வகைக்கு 6.5 லி. சேர்த்துக் கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கஸ்தூரி, அதிமதுரம், கோட்டம், நற்சீரகம், கருஞ்சீரகம், சடாமாஞ்சில், மஞ்சள், சந்தனம், கிளியூறல், பூஞ்சாந்து, செவ்வள்ளி, இலவங்கப்பட்டை, திருநீற்றுப் பச்சை, பூலா, ஏலம் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்குறிப்பிட்ட குடிநீர் எண்ணெயில் கலந்து இரண்டு விறகினால் எரித்து முதிராத பக்குவத்தில் மெழுகு பதமானவுடன் வடித்திறக்கிக் கொள்ளவும்.

இத்தைலத்தை முழுகும்போது இருபது வகை மேகம், நீரருகல், பித்த வகைகள் நாற்பது, எட்டுவகைக் குன்மம், தலைநோய்கள், மேகத்தில் தோன்றும் வறட்சி ஆகிய நோய்கள் தீரும்.

குமரித் தைலம்

கருதியே நீகேளு புலத்தியரே அய்யா
கருவான குமரியுட தைலஞ் சொல்வேன்
விருதான குமரிச்சார் படிதான் ரெண்டு
வெள்ளாவின் பாலதுதான் படிதான் ரெண்டு
சதிரான எள்ளெண்ணை படிதான் ரெண்டு
சாத்துறேன் கற்கவகை திரிகடுகு கோஷ்டம்
மருவான மாஞ்சிலொடு திரிபலையுஞ் சீரகம்
மதுரமொடு பூஞ்சாந்து ஏல மெண்ணே! 158

எண்ணவே பச்சயிலை பூலா மூலம்
இதமான லவங்கபத் திரியும் பட்டை
அன்னவே செவ்வள்ளி அக்கிரா காரம்
அருளான கத்தூரி லவங்கங் கெந்தம்
திண்ணவே ரோகணிசெண் பகப்பூ ஆனைத்
திப்பிலி மஞ்சிட்டி சோம்பு மஞ்சள்
பண்ணவே வகையொன்று பலமரைதான் வாங்கி
பரிவான ஆவின்பால் விட்டு ஆட்டே! 159

ஆட்டியே கரைத்தெண்ணை சாற்றி னுள்ளே
அப்பனே அடுப்பேற்றி கமல மாக
மூட்டியே மெழுகுபத மாக வேதான்
முதிராமல் வடித்ததனைச் சீசாவில் விட்டு
நாட்டுவாய் தானியத்தில் வைத்து மூடி
நலமாக மண்டலங்கால் கொண்ட பின்பு
தாட்டிகமாய் மண்டலத்தில் மூழ்கும் போது
சாதமாய்த் தீரும்நோய் சாற்றக் கேளே! 160

கேளடா மேகமென்ற தெல்லாம் போகும்
கெடியான அத்திசுரம் வெட்டை போகும்
தாளடா பித்தமெல்லாம் சாந்த மாகும்
சரீரத்தில் வறட்சிமுதல் ஊறல் போகும்
வேளுநீ குன்மமெட்டு பாண்டு ஆறும்
வெளுப்பான தேகமெல்லாம் வண்டு போலாம்
வாளடா வைத்தியர்க்காய்த் தைலஞ் சொன்னேன்
மகத்தான மனமுடையோர் மகிழ்ந்து பாரே! 161

கற்றாழைச்சாறு, வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய் இவற்றை வகைக்கு 2.6 லி. எடுக்க. சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், சடாமாஞ்சில், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சீரகம், அதிமதுரம், பூஞ்சாந்து, ஏலம், திருநீற்றுப் பச்சிலை, பூலா, இலவங்கப்பத்திரி, பட்டை, செவ்வள்ளி, அக்கிராகாரம், கஸ்தூரி, இலவங்கம், சந்தனம், கடுகுரோகணி, செண்பகப்பூ, யானைத் திப்பிலி, மஞ்சிட்டி, சோம்பு, மஞ்சள் இவற்றை வகைக்கு 17 கி. எடுத்துப் பசும்பால் விட்டு அரைத்துக் கொள்க. மேற்குறிப்பிட்ட எண்ணெய் சாற்றில் கரைத்து இரண்டு விறகால் எரித்து மெழுகு பதமானவுடன் முதிராது வடித்து பாத்திரத்தில் வடித்துக் கொள்க. தானியத்தில் பன்னிரெண்டு நாட்கள் வைத்துப் பாதுகாக்க வேண்டும். நாற்பது நாட்கள் உட்கொண்டும் தலை முழுகவும் செய்தால் மேகம், அத்திசுரம், வெட்டை, பித்தம், உடல் வறட்சி, ஊறல், எட்டு வகைக் குன்மம், ஆறுவகைப் பாண்டு நீங்கும். வெளுத்த உடல் கருப்பாகும்.

கொம்பரக்குத் தைலம்

மகிழவே கொம்பரக்குத் தைலங் கேளு
மகத்தான கொம்பரக்கு பலந்தா னெட்டு
நிகழவே தூணிநீ ரெட்டொன் றாக்கி
நிசமாகத் தாளிக்குள் வடித்து விட்டு
திகழவே எள்ளெண்ணை சேர்தா னஞ்சு
தயிர்தண்ணி சேரெண்டு பால்சே ரஞ்சு
நிகழவே காடியது சேர்தான் ரெண்டு
நலமான கற்கவகை சொல்லக் கேளே! 162

கேளப்பா சதகுப்பை கடுகு ரோகணி
கிளியூறல் பூஞ்சாந்து பச்சைப் பூலா
நாளப்பா செவ்வள்ளி லவங்கப் பத்திரி
நலமான லவங்கத்தோல் மாஞ்சி கோட்டம்
தாளப்பா கஸ்தூரி மதுரம் கெந்தம்
தயவான இருசீரம் விருக் குளபம்
ஆளப்பா வகையொன்று கழஞ்சி ரெண்டு
அப்பனே ஆவின்பால் விட்டு ஆட்டே! 163

ஆட்டுவாய் எண்ணைக்குள் கரைத்து விட்டு
அடுப்பேற்றி மெழுகுபத மான வாறே
நாட்டியே வடித்ததனை முழுகும் போது
நலமாகத் தீருகிற வியாதி கேளு
தாட்டிகாய் பித்தவெட்டை அத்திசுரம் போகுந்
தலைமயக்கம் வாயூறல் சாந்த மாகும்
வாட்டியதோர் சீதசுரம் மாண்டு போகும்
வற்றியதோர் திரேகமெல்லாம் ஊறும் பாரே! 164

ஊறுமே கணவெட்டை கணச்சு ரங்கள்
உத்தமனே கணப்பாண்டு வெளுத்த தேகம்
தேறுமே தேகத்தில் வலிக டுப்பு
திறமான சூலையெல்லாம் தீரும் தீரும்
நாறுமே கற்றாழை பிறங்கை வீசி
நலமான தழுதணையும் நாடா தோடும்

சிறுமே காசமெல்லாந் தீர்ந்து போகுந்
திறமான வொன்றைவிட்டு வொருனா ளெண்ணே! 165

கொம்பரக்கு 280 கி. எடுத்து அதில் 21 லி. தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதனைப் பாத்திரத்தில் வடித்துக் கொள்ளவும். அதனுடன் நல்லெண்ணெய், 1400 லி. தயிர்த்தண்ணீர் 560 லி., பால் 1400 லி., காடி 560 லி. சேர்த்துக் கொள்க. அதில் சதகுப்பை, கடுகுரோகணி, கிளியூறல், பூஞ் சாந்து, பச்சைப்பூலா, செவ்வள்ளி, இலவங்கப்பத்திரி, இலவங்கத்தோல், சடாமாஞ்சில், கோட்டம், கத்தூரி, அதிமதுரம், சந்தனம், நற்சீரகம், கருஞ்சீரகம் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துப் பசும்பால் விட்டு அரைத்துக் கொள்ளவும். எண்ணெயில் கரைத்துக் கொதிக்க வைத்து மெழுகு பதமான வுடன் வடித்துக் கொள்க. அதனைத் தலையில் தேய்த்து முழுகும் போது பித்தவெட்டை, அத்திசுரம், தலை மயக்கம், வாயூறல், சீதசுரம், கணவெட்டை, கணச்சுரங்கள், கணப்பாண்டு, வெளுத்த தேகம், உடல்வலி, கடுப்பு, சூலை, படர்தாமரை, படர்தேமல், காசம் இவை தீரும். புளி, கசப்பு, புகை, பெண் இவற்றை நீக்க வேண்டும்.

பிருங்காமலகத் தைலம்

எண்ணவே பத்தியந்தான் புளிக சப்பு
யிதமான புகையோடு பெண்ணு மாகாள்
நண்ணவே தைலமொன்று சொல்லக் கேளு
நலமான பிருங்காமலத் தைலஞ் சொல்வேன்
நண்ணவே ஆமலச் சாறுபடி ரெண்டு
நலமான காணிச்சார் படிதான் ரெண்டு
பண்ணவே குமரிச்சார் படிதான் ரெண்டு
பாங்கான செவ்விளநீர் படிதான் ரெண்டே! 166

படியான சிறுகீரைச் சாறுபடி ரெண்டு
பழுதில்லா ஆவின்பால் படிதான் ரெண்டு
செடியான யெள்ளெண்ணை படிதான் மூன்று
சேர்க்கயிதில் கற்கவகை மருந்து கேளு

கொடியான மதுரமொடு கோட்டம் ஏலம்
குரோசாணி பச்சயிலை பூலா மூலங்
கடியான கஸ்தூரி மாஞ்சில் சீரம்
கருவான பத்திரியுஞ் சாதிக்காய் கூட்டே! 167

கூட்டுவாய் லவங்கப் பத்திரியும் பட்டை
கொடியான திரிகடுகு திரிப லாதி
நாட்டுவாய் பூஞ்சாந்து சோம்பு வால்மிளகு
நலமான வகையொன்று கழஞ்சி மூன்று
ஆட்டுவா யாவின்பால் விட்டு நன்றாய்
அப்பனே சாறெண்ணை தனில்க ரைத்து
மூட்டுவாய் யடுப்பேற்றி கமல மாக
முதிராமல் கணபதிக்குப் பூசை பண்ணே! 168

பண்ணியே மெழுகுபதம் தனில்வ டித்து
பாங்காக முழுகிவரத் தீரும் நோய்கேள்
கண்ணிலே காசமொடு அந்தி மாலை
கருவான நேத்திரநோய் தொண்ணூற் றாறும்
மண்ணிலே பித்தவெட்டை பித்த வாய்வு
மயக்கமொடு அத்திவெட்டை மாண்டு போகும்
தன்னிலே உடம்பெரிவு கைகால் காந்தல்
தளமான உஷ்ணநோய் சாரா தெண்ணே! 169

நெல்லிக்காய்ச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, கற்றாழைச் சாறு, செவ்விளநீர், சிறுகீரைச்சாறு, பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. நல்லெண்ணெய் 3.9 லி. எடுத்து ஒன்று சேர்க்க. அதிமதுரம், கோட்டம், ஏலம், குரோசாணி ஓமம், பச்சையிலை, பூலா, கஸ்தூரி, சடாமாஞ்சில், சீரகம், சாதிபத்திரி, சாதிக்காய், இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பூஞ்சாந்து, சோம்பு, வால்மிளகு இவற்றை வகைக்கு 15 கி. எடுத்துப் பசுவின் பால்விட்டரைத்து சாறெண்ணெய்தனில் கரைத்துக் கொள்க. அடுப்பேற்றி இரண்டு விறகு கொண்டெரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

இதைத் தலைமுழுக காசம், அந்தி மாலைக்கண், தொண்ணூற்றாறு வகை கண் நோய்கள், பித்தவெட்டை, பித்த வாய்வு, மயக்கம், அத்திவெட்டை, உடலெரிவு, கைகால் காந்தல், வெப்பநோய் ஆகிய நோய்கள் தீரும்.

சந்தனாதித் தைலம்

சாரவே சந்தனாதித் தைலஞ் சொல்வேன்
சார்வாகப் புலத்தியரே சொல்லக் கேளு
சேரவே மலர்க்காயின் சந்த னந்தான்
செப்புகிறேன் யிடையொன்று தூக்கி யேதான்
வாரவே விலாமிச்சை வெட்டி கோரை
வகையான சிந்திலொடு சிற்றா முட்டி
காரவே பேராமுட்டி பேரா மல்லி
கருவான சித்தமல்லி அசுவ மாமே! 170

ஆமப்பா நன்னாரி பற்ப டாகம்
அப்பனே வகையொன்று பலந்தா னாலு
போமப்பா யிருதுாணி வெள்ளம் நீரில்
பொடியாக யிடித்திட்டு அடுப்பி லேற்றி
நாமப்பா சோடசத்தொன் றாகக் காய்ச்சி
நலமாக பாண்டத்தில் வடித்துக் கொண்டு
தாமப்பா செவ்விளநீர் படிதான் ரெண்டு
தப்பாமல் காணிச்சார் படிரெண்டு வாரே! 171

வாரப்பா சிறுகீரை படிதா னொன்று
வாகான பொடுதலைச்சார் படிதா னொன்று
சேரப்பா வல்லாரை படிதா னொன்று
சிறுசின்னிச் சாறதுதான் படிதா னொன்று
காரப்பா பொற்றலைச்சார் படிதா னொன்று
கருவான நெல்லிச்சார் படிதா னொன்று
ஆரப்பா கற்பூர வள்ளிச் சாறு
அழகாகக் கூடவிட்டு படிதான் வாரே! 172

ஒன்றப்பா தாழையுட விழுதுச் சாறு
வுத்தமனே யெள்ளெண்ணை படிதான் மூன்று

நன்றான நறுநெய்தான் படிதா னொன்று
நலமான ஆவின்பால் படிதா னாலு
குன்றான தயிர்த்தண்ணி படிதான் ரெண்டு
குறையாமல் பாண்டத்தி லூற்றிக் கொண்டு
சென்றான அடுப்பிலே கொதிக்க வைத்து
திறமான கடைச்சரக்கு சொல்லக் கேளே! 173

கேளப்பா திரிகடுகு திரிப லாதி
கிருபையாங் கஸ்தூரி மதுர மேலம்
நாளப்பா கிராம்புசா திக்காய் பத்திரி
நலமான பச்சையிலை பூலா மூலங்
தாளப்பா பூஞ்சாந்து கிளியூரல் பட்டை
தளமான லவங்கப் பத்திரியின் பட்டை
ஆளப்பா செவ்வள்ளி செண்ப கப்பூ
அப்பனே கெந்தமொடு சீரம் ரண்டே! 174

ரெண்டான செங்கழுநீர் கோஷ்டம் அக்கிரா
நிலையான மஞ்சிட்டி பலகை மஞ்சள்
சென்றான செஞ்சந்தன முத்தக் காசு
திருக்கான வலம்புரிக்காய் யிடம்பு ரிக்காய்
குன்றாமல் வகையொன்று பலமேதான் வாங்கி
குலமான ஆவின்பால் விட்டு ஆட்டி
வெண்டான மேஷப்பால் படிரெண்டில் கரைத்து
விருதாக எண்ணையிலே விட்டுக் கொள்ளே! 175

கேளப்பா அடுப்பேற்றி கமல மாக
கிருபையாம் மெழுகுபதம் தன்னி லேதான்
நாளப்பா கணபதிக்குப் பூசை பண்ணி
நலமான கம்பளியால் வடித்துக் கொண்டு
தாளப்பா கோரோசனங் குங்கு மப்பூ
தளமான புனுகதிலே கழஞ்சி வீதம்
கோளப்பா பொடித்திட்டு கலசத் துள்ளே
குணமாகத் தானியத்தில் வைத்து மூடே! 176

மூடியே மண்டலங்கால் சென்ற பின்பு
மூழ்கிவர சீயக்காய் அரப்ப தாக
நாட்டியே தீருகிற வியாதி கேளு
நாடாது மேகமென்ற திருவ துந்தான்
நாடியே நீரழிவு நீர ருக்கல்
சண்ணுண்டு போகுமடா சயந்தா னெட்டும்
காடியே கண்ணெரிவு கண்பு கைச்சல்
கையெரிவு காலெரிவு காணா தோடும்! 177

ஓடுமாம் ரிணங்கிரந்தி பிரமி யங்கள்
உத்தமமாம் கற்றாழை நாற்றந் தீரும்
சாடுமடா அத்திசுரம் அத்தி வெட்டை
சரீரத்தில் மயக்கமெல்லாஞ் சாந்த மாகும்
ஓடுமடா யிந்திரகண்டி புண்பு ரைகள்
புழுவெட்டு கண்டத்தின் மாலை தீரும்
தேடுமடா பெண்மேலே மோக மேற்றம்
சிக்காதே வலையினுள்ளே தெளிந்து நில்லே! 178

தெளிந்து கொண்டு மாயத்தில்.. சிக்கவேண்டாம்
தேசத்தி லுள்ளநோய் சிதறிப் போகும்
அழிந்ததொரு குட்டமொடு சொறிசி ரங்கு
அப்பனே உள்வெக்கை ஆறிப் போகும்
நளிந்தயிந்தத் தயிலமது மூழ்கும் போது
நன்றான புளியோடு புளிக சப்பு
வழிந்துயிந்த வாய்வென்ற பதார்த்தந் தள்ளு
வளமாகுஞ் சரீரமெல்லாம் அருணன் போலாம்! 179

சந்தனத்தை ஒரு பங்கெடுத்துக் கொள்க. விலாமிச்சம், வெட்டிவேர், சீந்தில், சிற்றாமுட்டி, பேராமுட்டி, பேராமல்லி, சிற்றாமல்லி, அமுக்கரா, நன்னாரி, பற்படாகம் இவற்றை வகைக்கு 140 கி. எடுத்து 43 லி. தண்ணீரில் இடித்துப் போட்டு பதினாறில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொள்க. வடித்த குடிநீருடன் செவ்விளநீர், பொன்னாங்காணிச்சாறு இவற்றை வகைக்கு 2.6 லி., சிறுகீரை, பொடுதலை, வல்லாரை, சிறுசின்னிச்சாறு, பொற்றலைக் கையாந்தகரை, நெல்லி,

கற்பூரவள்ளி இவற்றின் சாறுகளை வகைக்கு 1.3 லி., தாழை விழுதுச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 3.9 லி., 1.3 லி. நெய், பசும்பால் 5.2 லி., மோர் 2.6 லி. சேர்த்து கொதிக்க வைக்க.

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கஸ்தூரி, அதிமதுரம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, பச்சையிலை, பூலாவேர், பூஞ்சாந்து, கிளியூறல் பட்டை, இலவங்கப் பத்திரியின் பட்டை, செவ்வள்ளி, செண்பகப்பூ, சந்தனம், நற்சீரகம், கருஞ்சீரகம், செங்கழுநீர், கோட்டம், அக்கிரா, மஞ்சிட்டி, மஞ்சள், செஞ்சந்தனம், முத்தக்காசு, வலம்புரிக்காய், இடம்புரிக்காய் இவற்றை வகைக்கு 35 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து 2.6 லி. ஆட்டுப்பாலில் கரைத்துப் பின் நல்லெண்ணெயில் கலந்து கொள்ளவும். கலவையை அடுப்பேற்றி இரண்டு விறகெரித்து மெழுகுபதமானவுடன் கம்பளியால் வடித்துக் கொள்ளவும். அதில் கோரோசனை, குங்குமப்பூ, புனுகு இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்துப் போட்டு தானியத்தில் வைத்துப்பத்திரப்படுத்தவும். பன்னிரெண்டு நாட்கள் இவ்வெண்ணெயை மூழ்கி சீயக்காய், அல்லது அரப்பைத் தேய்த்துக் கொள்க. அவ்வாறு செய்ய மேகம், நீரழிவு, நீரருக்கல், எட்டுவகைச் சயம், கண்ணெரிவு, கண்புகைச்சல், கைகாலெரிவு, கிரந்தி, பிரமியங்கள், கற்றாழைநாற்றம், அத்திசுரம், அத்திவெட்டை, உடல் மயக்கம், புண்புரைகள், புழுவெட்டு, கண்டமாலை, குட்டம், சொறிசிரங்கு, உள்சூடு ஆகிய நோய்கள் தீரும். புளி, கசப்பு, வாய்வை உண்டாக்கும் பொருட்களை நீக்க வேண்டும்.

பொன்னாங்காணித் தைலம்

ஆமப்பா பொன்னாங்காணித் தைலங் கேளு
அப்பனே காணிச்சார் படிதான் ரெண்டு
நாமப்பா கரிசாலை சாறுபடி யொன்று
நலமான நெல்லிக்காய்ச் சாறுபடி யொன்று
தாமப்பா எள்ளெண்ணை படிதான் ரெண்டு
தப்பாமல் ஆவின்பால் படிதான் ரெண்டு

வேமப்பா மதுரமது பலந்தான் ரெண்டு
விருதாக முன்பாலா லரைத்துப் போடே! 180

போட்டப்பா மெழுகுபதந் தனில்வ டித்து
புகழாக முழுகிவரத் தீரும் நோய்கேள்
நீட்டப்பா தேகத்தில் நோய்தொண்ணூற் றாறும்
நிலைகெட்ட காசமெல்லாம் நீங்கிப் போகும்
வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப் போகும்
வளமாகும் நேத்திரங்க ளொளியோ மீறும்
நாட்டப்பா உஷ்ணநோ யெல்லாந் தீரும்
நலமான கீழாநெல்லி தைலங் கேளே! 181

பொன்னாங்காணிச்சாறு 2.6 லி. கரிசாலைச்சாறு, நெல்லிக் காய்ச்சாறு வகைக்கு 1.3 லி., நல்லெண்ணெய், பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. எடுக்க. அதிமதுரம் 70 கி. எடுத்துப் பசும்பாலில் அரைத்துக் கலவையில் சேர்த்துக் கொள்ளவும். கலவையை அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துப் பத்திரப்படுத்தவும். அதனைத் தலைமுழுக உடலில் வரும் தொண்ணூற்றாறு வகை நோயும், காசம், பித்தம் ஆகிய நோய்கள் தீரும். கண்களில் ஒளி அதிகமாகும்.

கீழ்க்காய்நெல்லித் தைலம்

கேளப்பா கீழ்க்காயின் நெல்லி தானும்
கிருபையாய் தூக்கிடித்துத் தூணி நீரில்
வாளப்பா யெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
வளமான வெள்ளெண்ணெய் படிதான் ரெண்டு
நாளப்பா ஆவின்பால் படிதான் ரெண்டு
நலமான சீரகந்தான் பலந்தான் ரெண்டு
வேளப்பா பாலிலே அரைத்துக் கொண்டு
விழுதாக மெழுகுபதம் வடித்து வாங்கே! 182

வாங்கியே முழுகிவர பித்த வெட்டை
மயக்கமொடு மஞ்சகா மாலை தீரும்
தாங்கியே வாந்தியெல்லாம் தவறுண் டேபோம்
தலைமயக்கம் வாயூறல் சாந்த மாகும்

தேங்கியே உட்சுரங்கள் தீர்ந்து போகும்
தேகத்தில் நடுக்கமெல்லாந் தீர்ந்து போகும்
ஏங்கியே திரியாதே மனஞ்சலி யாதே
எளிசல்ல னோயப்பா யிறங்கிப் பாரே! 183

கீழாநெல்லி 1½ கி.கி. எடுத்து 21.5 லி. நீரில் போட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வடித்துக் கொள்க. அதனுடன் நல்லெண்ணெய், பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. சேர்க்கவும். சீரகம் 70 கி. எடுத்துப் பாலிலே அரைத்துக் கலவையில் கலந்துகொள்ளவும். பின் அதனைக் காய்ச்சி மெழுகு பதமானவுடன் வடித்திறக்கிக் கொள்ளவும். இதனைத் தலையில் தேய்த்து முழுக பித்தவெட்டை, மயக்கம், மஞ்சள்காமாலை, வாந்தி, தலைமயக்கம், வாயூறல், உள்சுரங்கள், நடுக்கம் இவை தீரும்.

வேப்பெண்ணெய்த் தைலம்

பாரப்பா சிரசிலுள்ள சூலை தீர
பக்குவமாய்த் தைலமொன்று சொல்லக் கேளு
நேரப்பா ஆதண்டை நொச்சில் சங்கு
நினவாக எருக்கோடு சிற்றா முட்டி
ஆரப்பா வகையொன்று பலம்பத் தாகும்
அப்பனே தூணிநீ ரெட்டொன் றாக்கி
காரப்பா எருக்கினுட பழுப்புச் சாறு
கருவாகப் படியொன்று பழச்சா றொன்றே! 184

ஒன்றப்பா எள்ளெண்ணெய் படிதா னொன்று
உத்தமனே வேப்பெண்ணெய் படியரைதான் கூட்டி
நன்றப்பா திரிகடுகு ஒமம் பூண்டு
நலமான வசம்பேலம் மஞ்சள் கூட்டி
கன்றப்பா அரைத்தெண்ணை தனில்க ரைத்து
கருவாக மெழுகுபதந் தனில்வ டித்து
மொன்றப்பா முழுகிவரத் தீரும் னோய்கேள்
முதலான சிரசிலுள்ள சூலை போமே! 185

சூலைபோம் வாய்வெல்லாஞ் சொல்லா தோடும்
சுருக்கான வாதத்தின் சூலை தீரும்
வாலையாந் திமிர்வாதம் விரைப்புத் தீரும்
வயிற்றிலுள்ள வாய்வெல்லாம் வாங்கிப் போகும்
சூலைபோம் சிறுகடுப்பு நேத்திரக் குத்தல்
சொறிசிரங்கு கரப்பனொடு ரிணங்கள் தீரும்
ஆலையாம் பத்தியந்தான் புளிக சப்பு
அப்பனே புகைவாய்வு பதார்த்தந் தள்ளே! 186

தலைச்சூலை தீருவதற்கான தைலம் கீழ்வருமாறு. ஆதண்டை, நொச்சில், சங்கு, எருக்கு, சிற்றாமுட்டி இவற்றை வகைக்கு 350 கி. எடுத்து 21.5 லி. நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். அத்துடன் எருக்கிலைப் பழுப்பின் சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் இவற்றை வகைக்கு 1.3 லி., வேப்பெண்ணெய் 675 மி.லி. சேர்க்கவும். சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், பூண்டு, வசம்பு, ஏலம், மஞ்சள் இவற்றை அரைத்து எண்ணெயில் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். அதனை அளவுடன் எடுத்து தலைமுழுக தலையிலுள்ள சூலை நோய்கள், வாய்வு நோய்கள், வாதசூலை, திமிர்வாதம், விரைப்பு, வயிற்றிலுள்ள வாய்வுகள், கடுப்பு, கண்ணில் குத்தல், சொறி சிரங்கு, கரப்பான், இரணங்கள் ஆகிய நோய்கள் தீரும். புளி, கசப்பு, புகை, வாய்வுப் பொருட்கள் இவை நீக்கவும்.

நிலப்பனை நெய்

தள்ளவே கிருதமொன்று சொல்லக் கேளு
தளமான நிலப்பனையும் ஒதியம் பட்டை
விள்ளவே கருங்காலி னாகல் பட்டை
விதமான வேந்தனுட பட்டை தானும்
அள்ளவே வகையொன்று பலம்பத் தாக
அப்பனே இடித்துநன்றா யிருதூணி நீரில்
நள்ளவே சோடசத்தொன் றாகக் காய்ச்சி
நலமான ஆவினெய் படிதான் ரெண்டே! 187

ரெண்டப்பா ஆவின்பால் படிதான் ரெண்டு
நினவாகப் புளியாரைச் சாறுபடி யொன்று
விண்டப்பா கோவையுட தண்டுச் சாறு
விதமாக படியொன்று கூட விட்டு
நன்றப்பா பொன்முசுட்டை சிறுகாஞ் சோறி
நலமான விளாவித்து கொத்த மல்லி
கண்டப்பா திரிகடுகு திரிப லாதி
கருவான பேரிச்சு முந்திரிகை யாமே! 188

ஆமப்பா கற்கடகம் மாம்பருப் பரத்தை
அப்பனே காட்டத்தி கீழ்காய் நெல்லி
நாமப்பா அதிவிடையம் கூவிளத்தின் பிஞ்சு
நலமான விளாம்பிஞ்சு மாதளையின் பிஞ்சு
தாமப்பா சந்தனமும் சாத்திர பேதி
தளமான புளிவிரைத்தோல் முத்தக் காசு
வேமப்பா சிறுனாகம் லவங்கப் பட்டை
விதமான குரோசாணி ஓமங் கூட்டே! 189

கூட்டப்பா மரத்துவெள்ளை அமுக்கி ராவேர்
கூசாதே வகைக்குரெண்டு கழஞ்சி வீதம்
ஆட்டப்பா ஆவின்பால் விட்ட ரைத்து
அப்பனே நெய்தனிலே கரைத்து விட்டு
மூட்டப்பா அடுப்பேற்றி கமல மாக
முதிராமல் மெழுகுபத மான போதில்
நாட்டப்பா வடிகொண்டு பரணி சேர்த்து
நலமாக இருநேரங் கழஞ்சி கொள்ளே! 190

கொள்ளவே பெரும்பாடு எலும்பு ருக்கி
கூறான பிரமியங்கள் கடுப்பு மூலம்
விள்ளவே கிராணிவகை யெல்லாந் தீரும்
விதமான சுக்கிலந்தா னிறுகும் பாரு
தள்ளாத சடம்வெளுப்பு கைகால் காந்தல்
தளமான குறியெரிப்பு நீர்க்க டுப்பு
நள்ளவே திருமடா பத்தி யங்கள்
நலமாகச் சீரகக்க ஷாயங் கேளே! 191

நிலப்பனை, ஓதியம், கருங்காலி, நாகல், அரசு இவற்றின் பட்டைகளை வகைக்கு 350 கி. எடுத்து இடித்து 43 லி. நீரில் போட்டு பதினாறில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதனுடன் பசுநெய், பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. புளியாரைச்சாறு, கோவைத்தண்டுச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. சேர்த்துக் கொள்ளவும்.

பொன்முசுட்டை, சிறுகாஞ்சொறி, விளாவிதை, கொத்து மல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பேரீச்சு, முந்திரிகை, கற்கடகசிங்கி, மாம்பருப்பு, அரத்தை, காட்டத்தி, கீழாநெல்லி, அதிவிடையம், கூவிளம் பிஞ்சு, விளாம்பிஞ்சு, மாதுளையின் பிஞ்சு, சந்தனம், சாத்திரபேதி, புளியம் விதைத்தோல், முத்தக்காசு, சிறுநாகம், இலவங்கப்பட்டை, குரோசாணி, ஓமம், வெள்ளைக்குங்கிலியம், அமுக்கிராவேர் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்கூறிய நெய்க் கலவையில் கரைத்துக் கொள்ளவும். இரண்டு விறகினால் எடுத்து முதிரவிடாது மெழுகு பக்குவத்தில் வடித்துப்பரணில் அமைத்துக் கொள்ளவும். அதனை 5 கி. காலை, மாலை கொள்ள பெரும்பாடு, எலும்புருக்கி, பிரமியங்கள், கடுப்புமூலம், கிராணி வகைகள், உடல் வெளுப்பு, கைகால் எரிதல், ஆண்குறி எரிவு, நீர்க்கடுப்பு ஆகியவை தீரும். சுக்கிலம் இறுகி தாது விருத்தியுண்டாகும். பொதுவான பத்தியத்தைக் கடைபிடிக்கவும். சீரகக் குடிநீரைக் குடிக்கவும்.

பொன்னாங்காணி நெய்

கொள்ளவே கிருதமொன்று சொல்லக் கேளு
குறிப்பான காணிச்சார் படிதா னொன்று
நள்ளவே பொற்கையான் சாறுபடி யொன்று
நலமான பழச்சாறு அரைப்படிதான் விட்டு
விள்ளவே ஆவின்நெய் படிதா னொன்று
விருதான ஆவின்பால் படிதா னொன்று
தெள்ளவே மதுரமது பலந்தான் ரெண்டு
தெளிவாக ஆவின்பால் விட்டு ஆட்டே! 192

ஆட்டியே நெய்க்குள்ளே கரைத்து விட்டு
அடுப்பேற்றி மெழுகுபத மான வாறே
நீட்டியே சாதிக்காய் சாதி பத்திரி
நினவாக குரோசனையுங் கற்கண் டப்பா
நாட்டியே கழஞ்சிநிரைப் பொடித்துப் போட்டு
நலமாகக் கிண்டிவைத்துக் கரண்டி வீதம்
மூட்டியே யிருநேரங் கொண்டா யானால்
முக்கியமாய்த் திருமடா மூலச் சூடே! 193

சூட்டுடனே உலர்த்துகின்ற மேகந் தீரும்
சூதகமாய் வாய்வகலும் சுரங்கள் தீரும்
நாட்டுடனே உள்வெக்கை யெல்லாந் தீரும்
நாடாது வயிற்றினுள்ளே எரிவ தெல்லாம்
வாட்டுடனே நேத்திரமெல்லாங் குளிர்ச்சி யாகும்
வளமாகும் வாய்நாற்றம் விட்டுப் போகும்
திட்டுடனே இறங்குகின்ற பிரமி யங்கள்
திருமடா புளியாரைக் கிருதங் கேளே! 194

பொன்னாங்காணிச்சாறு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு இவற்றை வகைக்கு 1.3 லி., எலுமிச்சம்பழச்சாறு 675 மி.லி., பசுநெய், பசும்பால் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக்கலந்து கொள்ளவும். அதிமதுரத்தை 70 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்கூறிய நெய்க் கலவையில் சேர்த்துக் கொள்ளவும். காய்ச்சி மெழுகு பதமானவுடன் சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை, கற்கண்டு இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்துக் கலவையிலிட்டு கிண்டி பதத்துடன் இறக்கிக் கொள்க. அதில் கரண்டியளவு காலை, மாலை ஆகிய இரண்டு நேரமும் உட்கொண்டால் சூட்டினால் வரும் மேகம், சூதக வாய்வு, சுரங்கள், உள்வெக்கை, வயிற்றெரிச்சல், கண் எரிச்சல், வாய் நாற்றம், பிரமியங்கள் ஆகியவை தீரும்.

புளியாரை நெய்

கேளடா புளியாரைச் சாறுபடி யொன்று
கிருபையுள்ள வள்ளிச்சார் படிதா னொன்று
நாளடா காணிச்சார் படிதான் விட்டு
நலமான செவ்விளநீர் படிதான் ரெண்டு
தாளப்பா ஆவின்நெய் சேர்தா னஞ்சு
தலமான கருஆவின் பால்சே ரஞ்சு
ஆளப்பா சீரக மாசக் காயும்
அப்பனே மதுரமொடு கழஞ்சி நாலே! 195

நாலப்பா ஆவின்பால் விட்டு ஆட்டி
நலமாக நெய்சாற்றில் கரைத்து விட்டு
மேலப்பா அடுப்பேற்றி மெழுக தானால்
விருதாக வடித்துமென் பொடிதான் கேளு
காலப்பா பத்திரியும் ஏலம் ரெண்டு
கருவாகக் கழஞ்சிரெண்டு பொடித்துத் தூவி
ஆலப்பா கல்கண்டு பலந்தா னொன்று
அப்பனே பொடித்திட்டு கரண்டிநிரை யாமே! 196

ஆமப்பா யிருநேரம் மண்ட லங்கேள்
அப்பனே பித்தவெட்டை பித்த வாய்வு
தாமப்பா எரிச்சலொடு நீர்ச்சு ருக்க
தளமான மயக்கமெல்லாந் தவறிப் போகும்
நாமப்பா வாயூறல் அரோசி யங்கள்
நாடாது பித்தமெல்லாம் நடுங்கி யோடும்
போமப்பா வாந்திமுதல் சரீரம் ஊறும்
புதையாக யின்னமொரு கிருதங் கேளே! 197

புளியாரைச்சாறு, வள்ளிச்சாறு, பொன்னாங்காணிச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்க. செவ்விளநீர் 2.6 லி., பசுநெய், பசும்பால் இவற்றை வகைக்கு 1½ லி. எடுத்துக் கலக்கவும், சீரகம், மாசிக்காய், அதிமதுரம் இவற்றை வகைக்கு 20 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்கூறிய கலவையில் கரைத்துக் கொள்ளவும். பின் காய்ச்சி மெழுகான

வுடன் வடித்து பத்திரி, ஏலம் இவற்றை வகைக்கு 10 கி., கற்கண்டு 35 கி. எடுத்துப் பொடித்துக் கலவையில் கரைத்துக் கொள்ளவும்.

கரண்டி அளவு காலை, மாலை நாற்பது நாட்கள் உட்கொள்ள பித்தவெட்டை, பித்தவாய்வு, எரிச்சலுடன் கூடிய நீர்ச்சுருக்கு, மயக்கம், வாயூறல், அரோசிகங்கள், பித்தம், வாந்தி ஆகிய நோய்கள் தீரும்.

வல்லாரை நெய்

கேளப்பா வல்லாரைக் கிருதஞ் சொல்வேன்
கெடியான வல்லாரைச் சாறுபடி ஒன்று
தாளப்பா காணிச்சார் படிதான் ஒன்று
தளமான பொடுதலைச்சார் படிதா னொன்று
நாளப்பா பழச்சாறு படியரைதான் விட்டு
நலமான ஆவின்நெய் படிதான் ரெண்டு
ஆளப்பா ஆவின்பால் படிதான் ரெண்டு
அப்பனே கற்கவகை சாதிக் காயே! 198

காயோடு பத்திரியும் மாசிக் காயும்
கருவான சிங்கியொடு காட்டத் திப்பூ
தாயோடு வால்மிளகு ஏலங் கிராம்பு
தளமான மதுரமொடு வகையொன் றுக்கு
பாயோடு யிருகழஞ்சி நிறைதான் தூக்கி
பருவமாய் ஆவின்பால் விட்டு ஆட்டு
வாயோடு கரைத்துவிட்டு அடுப்பி லேற்றி
வளமாக மெழுகுபதந் தனில டைத்தே! 199

வடித்ததனை சீனிரண்டு பலந்தான் தூக்கி
வாகாகப் போட்டதிலே கிண்டிக் கிண்டி
கடித்திதனை கரண்டிநிறை கொண்டா யானால்
கலங்காதே மண்டலத்தில் தீரும் னோய்கள்
தடித்திட்ட மேகவகை யெல்லாந் தீரும்
தளமான குளிர்ச்சியாஞ் சரீர மெல்லாம்

வெடித்திட்ட ரிணங்கிரந்தி விழலாய்ப் போகும்
விருதான பிரமியஞ்சீழ் விட்டுப் போச்சே! 200

போச்சப்பா ரசபற்பம் வைத்துக் கொள்ளு
புகழான மேகவகை சூலை போரும்
காச்சப்பா குட்ட மொடு சொறிசி ரங்கு
கருவான சிங்குவைனோய் காணா தோடும்
வீச்சப்பா கிரந்தியொடு யோனிப் புற்று
விதமான புண்புரைகள் விழலாய்ப் போகும்
மாச்சப்பா நீரருக்கல் குறிஎ ரிப்பு
அப்பனே அஸ்திரிணம் ஆறிப் போமே! 201

வல்லாரைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, பொடுதலைச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி., எலுமிச்சம்பழச்சாறு 675 மி.லி. பசுநெய், பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. எடுத்து ஒன்று சேர்த்துக் கொள்ளவும். சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, காட்டத்திப்பூ, வால்மிளகு, ஏலம், கிராம்பு, அதிமதுரம் இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்கூறிய கலவையில் கரைத்துக் கொள்ளவும். பின் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து 70 கி. சர்க்கரையைப் போட்டுக் கிண்டி வைக்கவும். அதனைக் கரண்டி அளவாக நாற்பது நாட்கள் உட்கொள்ள உடல் குளிர்ந்து மேக வகைகள், இரணம், கிரந்தி, பிரமியம் ஆகிய நோய் நீங்கும்.

இரச பற்பத்தையும் உட்கொண்டால் மேக வகைகள், சூலை, குட்டம், சொறி, சிரங்கு, சிங்குவை, கிரந்தி, யோனிப்புற்று, புண்புரைகள், நீரருக்கல், ஆண்குறி எரிவு, எலும்புப்புண் ஆகியவை நீங்கும்.

கூழ்ப்பாண்ட நெய்

ஆறுமே கூழ்ப்பாண்ட கிருதங் கேளு
அப்பனே பூசணிக்காய் சாறுபடி ரெண்டு
நாறுமே தாழை விழுதுச் சாறு
நன்றாகப் படியொன்று தென்னம் பூச்சார்

சாறுமே படியொன்று கூட விட்டு
கலங்காதே குமரிச்சார் படிதா னொன்று
சாருமே செவ்விளநீர் படிதா னொன்று
தளமான ஆவின்நெய் படிதான் ரெண்டே! 202

ரெண்டான கற்கவகை சொல்லக் கேளு
நிலையான சாதிக்காய் சாதி பத்திரி
பண்டான மாச்சக்காய் திரிப லாதி
பாங்கான சீரகமும் ஏலம்வால் மிளகு
குண்டான காட்டத்தி கற்கடக சிங்கி
கூர்ப்பான மல்லியொடு குரோசாணி ஓமம்
நன்றாகக் கழஞ்சிநிறை மூன்ற தாக
நலமான ஆவினபால் விட்டு ஆட்டே! 203

ஆட்டியே ஆவின்பால் படிரெண் டுக்குள்
அப்பனே கரைத்துவிட்டு அடுப்பி லேற்றி
நாட்டியே மெழுகுபத மாகும் போது
நலமாக வடிகொண்டு கலசத் துள்ளே
காட்டியே கல்கண்டு பலந்தான் ரெண்டு
கருவாகப் பொடித்திட்டுக் கரண்டி வீதம்
முட்டியே மண்டலமே கொண்டா யானால்
மூதண்டப் பிரமியங்கள் மேகம் போமே! 204

போமப்பா உஷ்ணங்கள் எரிவு காந்தல்
பொல்லாத நீர்க்குத்து குறிள ரிப்பு
நாமப்பா அஸ்திரிணம் அஸ்தி வெட்டை
நாடாது கிராணியெல்லாம் நளின மாகுந்
தாமப்பா எலும்புருக்கி காமாலை யெல்லாந்
தவறுண்டே போகுமடா பித்த மெல்லாம்
ஆமப்பா அப்பிரேகம் போட்டுக் கொள்ளு
அனுகாது மேகநீ ரத்துப் போமே! 205

பூசணிக்காய்ச்சாறு 2.6.லி., தாழைவிழுதுச்சாறு, தென்னம் பூச்சாறு, குமரிச்சாறு, செவ்விளநீர் இவற்றை வகைக்கு 1.3. லி., பசும்பால், பசுநெய் வகைக்கு 2.6 லி. சேர்த்துக் கொள்ளவும்.

சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டத்தி, கற்கடகசிங்கி, கொத்துமல்லி, குரோசாணிஓமம் இவற்றை வகைக்கு 15 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்துக் கொள்க. காய்ச்சி மெழுகு பதமானவுடன் வடித்துக் கலசத்தில் வைத்து, அதில் 70 கி. கல்கண்டைப் பொடிசெய்து போட்டுக் கலக்கிக்கொள்ளவும். கரண்டியளவாக நாற்பது நாட்கள் உட்கொள்ள பிரமியங்கள், மேகம், உஷ்ணங்கள், எரிவு, காந்தல், நீர்க்குத்து, பிறப்புறுப்பு எரிவு, எலும்புப்புண், எலும்பு வெட்டை, கிராணி வகைகள், எலும்புருக்கி, காமாலை, பித்தம் ஆகியவை நீங்கும். அப்பிரகமும் எடுத்துக் கொண்டால் மேகநீர் நீங்கும்.

தூதுவளை நெய்

அற்றுப்போம் தூதுவளைக் கிருதம் கேளு
அப்பனே தூதுவளை யிடைதா னொன்று
கற்றுப்போம் நல்முள்ளி கண்டங் கத்திரி
கருவான சிறுகாஞ்சொறி ஆடா தோடை
சற்றுப்போம் மிளகுநல் திப்பிலி கடுக்காய்
*சதிரான *துர்ால்பையும் வகையென் றுக்கு*
நத்துப்போம் பலம்நாலு இடித்து நய்ய
நலமாக யிருதூணி நீரி லூட்டே! 206

ஊட்டியே சோடசத்தொன் றாகக் காய்ச்சி
உத்தமனே வடித்துவொரு பாண்டத் தூற்றி
நாட்டியே ஆவின்நெய் படிதான் ரெண்டு
நலமான ஆவின்பால் படிதான் ரெண்டு
காட்டியே திரிகடுகு திரிப லாதி
கருவான தாளிசம் கோட்டம் அக்கிரா
வாட்டியே வாய்விளங்கம் சிரகம் ஓமம்
வகையான அரத்தைரெண்டு வால்மிளகு ஏலம்! 207

ஏலமொடு கிராம்புசா திக்காய் பத்திரி
எடுத்திடுவாய் வகையொன்று கழஞ்சி மூன்று

ஆலமொடு ஆவின்பால் விட்டு ஆட்டி
அப்பனே நெய்தனிலே கரைத்து விட்டு
ஞாலமே மெழுகுபத மாகும் நேரம்
நலமாக வடிகொண்டு கரண்டி வீதம்
காலமே மண்டலந்தான் கொண்டா யானால்
கருவான சயமெட்டுங் காணா தென்னே! 208

காணாது ஈளையொடு இருமல் காசம்
கலங்காதே சேட்டுமநோய் தொண்ணூற் றாறும்
நாணுமே மேகமெல்லாம் நாடா தோடும்
நலமான உஷ்ணநோ யெல்லாந் தீரும்
ஆணுமே யிளையிளைப்பு அற்றுப் போகும்
அப்பனே வாய்வென்ற தெல்லாந் தீரும்
கோணுமே குண்டலமாம் வாய்வு தீரும்
குறிப்பாக யின்னமொன்று சொல்லக் கேளு! 209

தூதுவளை ஒரு எடையை எடுத்துக் கொள்க. நல்முள்ளி, கண்டங்கத்திரி, சிறுகாஞ்சொறி, ஆடாதோடை, மிளகு, நல்திப்பிலி, கடுக்காய், ஒருவகை நெருஞ்சி இவற்றை வகைக்கு 140 கி. எடுத்து நன்கு இடித்து 43 லி. நீரில்போட்டு பதினாறில் ஒன்றாய்க் காய்ச்சி பாத்திரத்தில் வடித்துக் கொள்ளவும். பசுநெய், பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. சேர்த்துக் கொள்ளவும். பின் அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தாளிசபத்திரி, கோட்டம், அமுக்கிரா, வாய்விடங்கம், சீரகம், ஓமம், பேரரத்தை, சிற்றரத்தை, வால்மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி இவற்றை வகைக்கு 15 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து நெய்யில் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதமானவுடன் வடித்துக் கொள்ளவும். அதனைக் கரண்டி அளவு நாற்பது நாட்கள் காலையில் மட்டும் உட்கொள்ள எட்டு வகைச் சயம், ஈளை, இருமல், காசம் மட்டும் தொண்ணூற்றாறு வகை சிலேட்டும நோய், மேகம், வெப்பநோய், ஈளை, இளைப்பு, வாய்வு, குண்டல வாய்வு ஆகிய நோய்கள் தீரும்.

கண்டங்கத்திரி நெய்

கேளடா கண்டங்கத் திரிநெய் சொல்வேன்
கிருபையாங் கண்டங்கத் திரிதூக் கப்பா
தாளடா சேருவகை சிறுகாஞ் சோறி
நலமான தூதுவளை சங்கு மூலம்
வாளப்பா வகையொன்று பலந்தா னஞ்சி
வகையாக யிடித்துயிரு தூணி நீரில்
தாளப்பா சோடசத்தொன் றாகக் காய்ச்சி
தப்பாமல் வடிகொண்டு பாண்டத் தூற்றே! 210

ஊத்தியே ஆவின்நெய் படிதான் ரெண்டு
உத்தமனே ஆவின்பால் படிதான் ரெண்டு
தாத்தியே கற்கவகை சொல்லக் கேளு
தளமான திரிகடுகு திரிப லாதி
ஏத்தியே ஏலமொடு கோட்ட மக்கிரா
யிதமான கிராம்புசா திக்காய் பத்திரி
ஆத்தியே தாளசம் லவங்கப் பட்டை
அரத்தைரெண்டு சீரம்ரெண்டு ஓம மாமே! 211

ஆமப்பா வகையொன்று கழஞ்சி மூன்று
அப்பனே ஆவின்பால் விட்டு ஆட்டி
தாமப்பா நெய்தனிலே கரைத்து விட்டு
தளமாக மெழுகுபதந் தன்னில் வைத்து
தாமப்பா கரண்டிநிறை கொண்டா யானால்
தவறுமடா காசசய மெல்லாந் தீரும்
வேமப்பா வலிப்பிசிவும் வெகுண்டு போகும்
விருதான வயிறுவிம்மல் தளரும் பாரே! 212

பாரப்பா விஷக்கடிகள் எலிக்கடிகள் தீரும்
பதறுகின்ற வலிப்பெல்லாம் பறந்து போகும்
நேரப்பா குன்மமெட்டும் நீங்கிப் போகும்
நிலையான மந்தார காசம் தீரும்
வாரப்பா சேட்டுமங்க ளெல்லாந் தீரும்
வளமான வாய்வெல்லாம் மாண்டு போகும்

ஆரப்பா தாளகத்தின் பற்பங் கூட்டி
அப்பனே மண்டலங்கொள் தீர்ந்து போமே! 213

கண்டங்கத்திரி 1.7 கி.கி., சிறுகாஞ்சொறி, தூதுவளை, சங்கு இவற்றை வகைக்கு 175 கி. எடுத்து 43 லி தண்ணீரில் போட்டு பதினாறில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்துப் பாத்திரத்தில் ஊற்றிக் கொள்ளவும், பசுநெய், பசும்பால் இவற்றை வகைக்கு 2.6 லி. எடுத்து முன்சொன்ன குடிநீரில் கலந்து கொள்க. அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், கோட்டம், அக்கிராகாரம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, தாளிசபத்திரி, இலவங்கப்பட்டை, பேரரத்தை, சிற்றரத்தை, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம் இவற்றை வகைக்கு 15 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து நெய்யில் கலந்து காய்ச்சி மெழுகு, பதமானவுடன் வடித்து வைத்துக் கொள்க. அதில் கரண்டியளவு உள்ளுக்குச் சாப்பிட்டால் காசம், சயம், வலிப்பு, இசிவு, வயிறுவிம்மல், விஷக்கடிகள், எலிக் கடிகள், வலிப்பு, எட்டுவகைக் குன்மம், மந்தாரகாசம், சிலேட்டுமங்கள், வாய்வு ஆகிய நோய்கள் தீரும்.

இதனுடன் தாளகபற்பத்தையும் அளவுடன் கூட்டி நாற்பது நாட்கள் சாப்பிட்டால் மேற்கூறிய நோய்கள் தீரும்.

கணத்தெண்ணெய்

போமப்பா கணத்தெண்ணை சொல்லக் கேளு
புகழ்முத்துக் கொட்டையெண்ணை படிதா னொன்று
நாமப்பா கையான்சார் காணிச் சாறு
நலமான குமரிச்சார் யிருள்ளிச் சாறு
தாமப்பா வகையொன்று சாறுபடி காலாய்
தப்பாமல் எண்ணையிலே கூட வாரே
..
..! 214

வார்த்தப்பா சாதிக்காய் சாதி பத்திரி
மைந்தனே மாசிக்காய் கற்கடக சிங்கி

ஏத்தப்பா கோஷ்டமொடு அக்கிரா காரம்
யிதமான சீரம்ரெண்டு வெந்த யந்தான்
காத்தப்பா லவங்கப்பத் திரியும் பட்டை
கருவான வெள்ளுள்ளி வகையொன் றுக்கு
சாத்தப்பா கழஞ்சிநிறை வாங்கி யேதான்
தளமான ஆவின்பால் விட்டு ஆட்டே! 215

ஆட்டியே எண்ணெயிலே கரைத்து விட்டு
அப்பனே பால்படியா லடுப்பி லேற்றி
நாட்டியே மெழுகுபத மாக வேதான்
நலமாக வடிகொண்டு கலசத் துள்ளே
கூட்டியே கோரோசினையுங் குங்கு மப்பூ
குலமான சாதிக்காய் கழஞ்சி வீதம்
ஆட்டியே பொடித்திட்டு கழஞ்சிநிறை யாக
அப்பனே கொடுத்துரைக்கச் சொல்லக் கேளே! 216

கேளடா கணவெட்டை கணச்சு ரங்கள்
கெடியான மாந்தமொடு உப்பி சங்கள்
நாளடா உலர்த்துகின்ற கணங்க ளெல்லாம்
நலமாக ஊறுமடா கெர்ப்ப வெட்டை
தாளடா கணப்பாண்டு வெளுத்த திரேகம்
தளமான நீர்ழத்தல் விடாத சூடு
வேளடா உடம்பூரும் உஷ்ணம் போகும்
வெகுசுருக்கு இன்னமொரு சேதி கேளே! 217

விளக்கெண்ணெய் *1.3 லி.*, கையாந்தகரைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, கற்றாழைச்சாறு, ஈருள்ளிச்சாறு இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுத்து ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, கோட்டம், அக்கிராகாரம், நற்சீரகம், கருஞ்சீரகம், வெந்தயம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, வெள்ளுள்ளி இவற்றை

வகைக்கு 5 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்துக் கொள்ளவும். விழுதினை எண்ணெயிலே கலந்து 1.3 லி. பசும்பாலையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமானவுடன் வடித்துக் கொள்ளவும். அதில் கோரோசனை, குங்குமப்பூ, சாதிக்காய் வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்து வடித்த கலவையில் போடவும். 5 கி. எண்ணெயைக் கொடுக்க கணவெட்டை, கணச்சுரங்கள், மாந்தம், உப்பிசம், கெர்ப்பவெட்டை, கணப்பாண்டு, வெளுத்த தேகம், வெப்பம், நீர்ச்சுருக்கு, தாகம் ஆகிய நோய்கள் தீரும்.

கரப்பானெண்ணெய்

சேதியென்ன கரப்பானென்ற ரெணத்துக் கெல்லாம்
தெளிவான எண்ணெயொன்று சொல்லக் கேளு
சாதியென்ற பூவரசு செங்கத் தாரி
தளம்பூதக் கரப்பனொடு கண்டங் காலி
வேதியென்ற நிலவாகை வகையொன் றுக்கு
விதமாக பலம்பத்து இடித்துக் கொண்டு
ஆதியென்ற தூணிநீ ரெட்டொன் றாக்கி
அப்பனே ஆமணக்கம் எண்ணெய்படி யொன்றே! 218

வொன்றப்பா வெள்ளாட்டின் பால்தா னொன்று
உத்தமனே மிளகுகருஞ் சீர கந்தான்
வென்றப்பா கார்கோல வெள்ளுள்ளி வசம்பு
வேரான சதகுப்பை வலம்புரிக் காயி
நன்றப்பா பரங்கியுட பட்டை தானும்
நலமாக வகையொன்று கழஞ்சி ரெண்டு
தன்றப்பா முன்பாலா லரைத்துக் கொண்டு
தளமான எண்ணையிலே கரைத்து விட்டே! 219

விட்டப்பா அடுப்பேற்றி மெழுகுபத மானால்
வெருளாதே கரண்டிநிறை கொண்டா யானால்
தட்டப்பா கரப்பனென்ற தெல்லாந் தீரும்
தளமான அரிப்பெல்லாஞ் சாரா தோடும்

கட்டப்பா ரிணத்தின்மேல் தடவிப் போட
கசகாம லுதிர்ந்துபோம் கருவாய்ப் பாரு
பட்டப்பா பத்தியந்தான் காத்தா யானால்
பறக்குமடா கரப்பனொடு ரிணங்கள் தானே! 220

பூவரசு, செங்கத்தாரி, நித்தியகல்யாணி, கண்டங்கத்தரி, நிலவாகை இவற்றை வகைக்கு 350 கி. எடுத்திடித்து 21.5 லி. நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். அதனுடன் ஆமணக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால் இவற்றை வகைக்கு 1.3 லி. சேர்த்துக் கொள்ளவும்.

மிளகு, கருஞ்சீரகம், கார்கோலரிசி, வெள்ளுள்ளி, வசம்பு, சதகுப்பை, வலம்புரிக்காய், பரங்கிப்பட்டை இவற்றை வகைக்கு 10 கி. எடுத்து வெள்ளாட்டுப் பாலிலரைத்து மேற்குறிப்பிட்ட கலவையில் கரைத்துக் கொள்ளவும். அதனை மெழுகுபதமாகும் வரை காய்ச்சி வடித்து அதில் ஒரு கரண்டி உட்கொண்டால் அனைத்து வகைக் கரப்பான்கள், அதனால் வரும் அரிப்புகள் தீரும். புண்கள் மீது அவ்வெண்ணெயைப் போட அது உலர்ந்து உதிர்ந்து போகும். பத்தியங் கைப் பற்றினால் கரப்பான் நீங்கும்.

மாந்த எண்ணெய்

தானென்ற மாந்தயெண்ணை சொல்லக் கேளு
தளமான ஆமணக்கி னெண்ணைபடி யொன்று
வானென்ற வெள்ளிண்டு உசிலம் பட்டை
வளமான சருகுமஞ்சள் வெள்ளுள்ளிப் பூண்டு
கானென்ற வெவ்வேறே நிம்பக்காய் மட்டுங்
கருவாக அரைத்தெண்ணை தனில்க ரைத்து
நானென்ற பேய்துமட்டிக் காயி யப்பா
நலமாகப் பாதியிதில் நறுக்கிப் போடே! 221

போட்டப்பா அடுப்பேற்றிக் காய்ச்சி வந்தால்
பொட்டெனவே யிறக்கியதை வறுத்துக் கொண்டு

நாட்டப்பா மூன்றுநாள் கால்சேர் விதம்
நலமாகக் காலமே கொடுத்தா யானால்
காட்டப்பா மாந்தமெல்லாங் காணா தோடும்
கருவான யிசிவுமுதல் காணா தோடும்
நீட்டப்பா பேய்மாந்தம் பொரும லெல்லாம்
நிலைகெட்டு வோடுமடா யின்னங் கேளே! 222

ஆமணக்கெண்ணெய் 1.3 லி. எடுத்து, அதனுடன் வெள்ளிண்டு, உசிலம்பட்டை, சருகு, மஞ்சள், வெள்ளுள்ளி, பூண்டு இவற்றைத் தனித்தனியே அரைத்து எலுமிச்சங்காயளவு சேர்க்கவும். எண்ணெயில் தும்மட்டிக் காயைப் பாதியாக நறுக்கிப் போட்டுக் காய்ச்சி பதமானவுடன் வடித்திறக்கிக் கொள்ளவும். எண்ணெயை 70 கி. மூன்றுநாள் காலையில் மட்டும் உட்கொண்டால் அனைத்துவித மாந்தம், இசிவு, பேய்மாந்தம், பொருமல் ஆகிய நோய்கள் தீரும்.

மேகத்தெண்ணெய்

தேளப்பா மேகமென்ற தெல்லாந் தீர
கெடியான எண்ணையொன்று சொல்லக் கேளு
நாளப்பா கோவைச்சார் காணிச் சாறு
நலமான வல்லாரை செருப்படிச் சாறு
வேளப்பா ஆனையுட நெருஞ்சிச் சாறு
வெகுசுருக்காய் சீந்தியுட தண்டுச் சாறு
ஆளப்பா அரசினுட பட்டைச் சாறு
அப்பனே அத்தித்தோல் படிதா னாமே! 223

ஆமப்பா ஆமணக்கின் எண்ணைபடி முக்கால்
அப்பனே எள்ளெண்ணை படிதான் முக்கால்
தாமப்பா சாற்றிலே விட்டுக் கேளு
சதிரான சாதிக்காய் சாதி பத்திரி
வாமப்பா மாசிக்காய் கற்கடக சிங்கி
வளமாக செண்பகப்பூ காட்டத்திப் பூவும்
வேமப்பா சினப்பா ஏலம் குரோசாணி
வெகுசுருக்காய் கழஞ்சிரண்டு யிடைதான் தூக்கே! 224

தூக்கியே ஆவின்பால் விட்டு ஆட்டி
சுருக்காக எண்ணையிலே கரைத்து விட்டு
தாக்கியே சித்திரமா மூலிவேர்ப் பட்டை
சாதகமாய்ப் பலமொன்று கூடப் போட்டு
தேக்கியே அடுப்பேற்றி மெழுகுபதம் பார்த்துத்
திறமாக வடித்ததனைக் கலசத் துள்ளே
ஆக்கியே கல்கண்டு பலம்ரண்டு போட்டு
அப்பனே கரண்டிநிறை கொள்ளு கொள்ளே! 225

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டா யானால்
கூறுகெட்ட மேகமெல்லாங் குலைந்து போகும்
தாளப்பா ரிணங்கிரந்தி லிங்கப் புற்று
தளராத யோனிப்புற்று அக்கி கிரந்தி
நள்ளப்பா வெடிசூலை மேக வூறல்
நலமான சொறிசிரங்கு நாடா தோடும்
தள்ளப்பா ரெத்த பிரமி யங்கள்
தவறுண்டு போகுமடா சார்ந்து பாரே! 226

கோவை, பொன்னாங்காணி, வல்லாரை, செருப்படி, ஆனைநெருஞ்சில், சீந்தில் தண்டு, அரசம் பட்டை, அத்திப் பட்டை ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 1.3 லி., ஆமணக் கெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு 725 மி.லி. எடுத்து ஒன்று கலந்துகொள்க. சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி, செண்பகப்பூ, காட்டத்திப்பூ, பரங்கிப்பட்டை, ஏலம், குரோசாணி இவற்றை வகைக்கு 10 கி. எடுத்துப் பசும்பால் விட்டரைத்து மேற்குறிப்பிட்ட எண்ணெயில் கலந்து கொள்ளவும்.

5 கி. சித்திரமூலி வேர்ப்பட்டையைக் கலவையில் கலந்து காய்ச்சி மெழுகுபதமானவுடன் வடித்திறக்கிக் கொள்க. அதனுடன் 70 கி. கல்கண்டைப் பொடித்துப் போட்டுக் கரண்டி அளவாக உட்கொள்ள வேண்டும். இவ்வாறு நாற்பது நாட்கள் கொள்ள மேகம், இரணம், கிரந்தி, இலிங்கப்புற்று, யோனிப் புற்று, அக்கி, கிரந்தி, வெடிசூலை, மேகவூறல், சொறி, சிரங்கு, இரத்த பிரமியங்கள் ஆகியவை நீங்கும்.

கர்ப்பநோய்க்கு வீழி எண்ணெய்

பாரப்பா கெர்ப்பனோ யெல்லாந் தீர
பகருகிறேன் வீழியெண்ணை பண்பாய்க் கேளு
சேரப்பா முத்தெண்ணை படிதா னொன்று
திறமான ஆவினெய் படிதா னொன்று
தாரப்பா வீழிச்சார் படிதா னொன்று
தளமான திரிகடுகு வேம்பி ருள்ளி
ஆரப்பா கோஷ்டமொடு இலவங்கம் ஏலம்
அப்பனே வெள்ளுள்ளி பலங்கா லாமே! 227

ஆமப்பா ஆவின்பா லால ரைத்து
அப்பனே யெண்ணைதனில் கரைத்து விட்டு
போமப்பா அடுப்பேற்றி மெழுகுபதம் பார்த்து
பொட்டெனவே இறுத்துவொரு கலசத் துள்ளே
நாளப்பா மூன்றுநாள் கால்சேர் விதம்
நலமாகக் கொண்டுவர ஆறு நாள்தான்
வேமப்பா பத்தியந்தா னுப்பைத் தள்ளு
வெகுசுருக்காய்த் திருமடா கெர்ப்ப னோவே! 228

கெர்ப்பத்தில் வாயுவெல்லாம் கெதிகெட் டோடும்
கிட்டாது சூதகத்தில் வலியெல் லாம்போம்
கெர்ப்பத்தில் புழுக்களெல்லாம் நழுவி விழும்
நாடாது சூலையெல்லாம் நளின மாகும்
அற்பமிது வல்லவடா கெர்ப்ப முண்டாம்
ஆச்சரிய மின்னமொன்று அறையு றேன்கேள்
கெர்ப்பத்தில் இசிவுமுதல் தளர்ந்து போகும்
சந்திடுப்பு சூலையெல்லாம் சாந்த மாமே! 229

வீழிச்சாறு, ஆமணக்கெண்ணெய், பசுநெய் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்துக் கலந்து கொள்ளவும். சுக்கு, மிளகு, திப்பிலி, வேம்பு, ஈருள்ளி, கோட்டம், இலவங்கம், ஏலம், வெள்ளுள்ளி இவற்றை வகைக்கு 9 கி. எடுத்துப் பசும்பாலிலரைத்து எண்ணெயில் சேர்த்துக் கொள்ளவும்.

பின் அதனைக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கலசத்தில் வைத்துக் கொள்ளவும். 70 கி. அளவு மூன்று நாட்கள் உட்கொள்ள கெர்ப்பநோய் தீரும். ஆறுநாட்கள் உப்பை நீக்க வேண்டும். கெர்ப்பத்தில் உண்டான வாயு, சூதக வலி, கர்ப்பப் புழுக்கள், சூலை ஆகிய நோய்கள் நீங்கும். கர்ப்ப முண்டாகும்.

மேகத்திற்கு எண்ணெய்

அறையுறேன் நல்லெண்ணை படிதா னொன்று
அப்பனே ஆவின்நெய் படிதா னொன்று
முறையுறேன் மூலவேர் பலந்தான் ரெண்டு
முனையாக ஆவின்பால் விட்டு ஆட்டி
நிறையுறேன் கரைத்துவிட்டு அடுப்பி லேற்றி
நினவாக மெழுகுபதந் தனில்வ டித்து
குறையிறேன் கரண்டிநிறை கொண்டா யானால்
குறைவான மேகமெல்லாம் கூறப் போமே! 230

கூறிப்போம் குறியெரிப்பு லிங்கப் புற்று
கொடியான கிரந்தியோடு குடிபோ மப்பா
நாறிப்போம் உள்ளழலை வாய்நாற் றம்போம்
நாடாது அரிப்பெல்லாம் நளின மாகும்
தேறிப்போம் சூலைமுதல் வெடிரி ணங்கள்
திராத குட்டமெல்லாம் தீர்ந்து போகும்
காறிப்போம் கெந்தியிட்டுக் கொண்டா யானால்
கடல்புக்கும் வெகுரிணங்கள் குன்மந் தானே! 231

நல்லெண்ணெய், பசுநெய் இவற்றை வகைக்கு 1.3 லி. எடுக்கவும். சித்திரமூலம் 70 கி. அளவெடுத்துப் பசும்பால் விட்டரைத்து எண்ணெயில் கலந்து கொள்க. காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கரண்டியளவு கொடுக்க மேக வகைகள், பிறப்புறுப்பு எரிவுகள், இலிங்கப்புற்று, கிரந்தி, உள்ளழல், வாய்நாற்றம், அரிப்புகள், சூலை, வெடித்துப் புண்ணாகும் இரணங்கள், குட்டம் ஆகியவை தீரும்.

கலிங்காதி எண்ணெய்

குன்மவகை தீர்வதற்கு கலிங்காதி யெண்ணெய்
கோட்டுறேன் புலத்தியனே நன்றாய்க் கேளு
கன்மமென்ற தும்மட்டிக் காய்சா றப்பா
கருவாகப் படியொன்று ஆவின் நீர்தான்
தன்மமென்ற படிரெண்டு வெள்ளாட்டு நீர்தான்
தப்பாமல் படிரெண்டு கூடச் சேர்த்து
பன்மமென்ற ஆமணக்கின் எண்ணை யப்பா
பதறாதே படிரெண்டு கூட வாரே! 232

வார்த்தப்பா கடுக்காயும் கடுகு ரோகணி
வளமான வாய்விளங்கம் திரிகடுகு ஏலம்
ஏத்தப்பா யிந்துப்பு வளைய லுப்பு
யிதமான கல்லுப்பு சவிட்டி லுப்பு
காத்தப்பா நவாச்சாரம் எவாச்சாரம் காரம்
கலங்காதே அப்பிளா காரங் கூட்டி
பார்த்தப்பா வால்மிளகு ஆனைத் திப்பிலி
பதறாதே வெள்ளுள்ளி பருப்பு மாமே! 233

ஆமப்பா நிலவாகை கண்டங் கத்திரி
அப்பனே வெள்ளைச்சா ரணையின் மூலம்
நாமப்பா சத்திச்சா ரணைக்கி ழங்கு
நலமாக அரைப்பலமா யரைத்துப் போட்டு
தாமப்பா நொச்சிலைச்சார் பசுமஞ் சள்சார்
தளமான யிஞ்சிச்சார் குமரிச் சாறும்
வேமப்பா படியாய்க் கூடச் சேர்த்து
விருதான கடைச்சரக்கு கழஞ்சி மூன்றே! 234

மூன்றப்பா அரைத்தெண்ணை தனில்க ரைத்து
முதிராமல் அடுப்பேற்றி மெழுகுபத மானால்
ஏன்றப்பா கலசமதில் வடித்து விட்டு
என்னசொல்வேன் அரைக்கால்சேர் வித மாக

கான்றப்பா கொண்டுவர பத்து னாளில்
கவிசையொடு பீலிகையும் கரைந்து போகும்
ஆன்றப்பா பெருவயிறு கட்டி வாய்வு
அணுகாது மகோதரங்க ளற்றுப் போமே! 235

அற்றுப்போம் வாய்வென்ற திரட்சி யெல்லாம்
அப்பனே குன்மமெட்டு வாய்வு வாதம்
நற்றுப்போம் கெர்ப்பசூலை............
நாடாது இசிவுபுழு நழுவி வீழும்
தத்துப்போம் கைகாலில் சூலைக் கட்டு
கடல்புக்குங் குத்துவலி காணா தோடும்
பத்துநிறை வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்
பகருமடா யின்னமொன்று பகரக் கேளே! 236

தும்மட்டிக்காய்ச் சாறு 1.3 லி. கோமியம், வெள்ளாட்டு நீர், ஆமணக்கெண்ணெய் இவற்றை வகைக்கு 2.6 லி. எடுத்துக் கலந்து கொள்ளவும். கடுக்காய், கடுகுரோகிணி, வாய்விடங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, சவுட்டுப்பு, நவச்சாரம், எவாச்சாரம், வெங்காரம், அப்பளாகாரம் (சோடாஉப்பு) வால்மிளகு, ஆனைத்திப்பிலி, வெள்ளைப்பூண்டுபல், நிலவாகை, கண்டங்கத்திரி, வெள்ளைச் சாரணைவேர், சத்திரச்சாரணைக் கிழங்கு இவற்றை வகைக்கு 17.5 கி. எடுத்துக் கொள்ளவும்.

நொச்சியிலை, பசுமஞ்சள், இஞ்சி, குமரி இவற்றின் சாறுகளை வகைக்கு 1.3 லி. எடுத்து மேற்குறிப்பிட்ட, கடைச் சரக்குகளை அரைத்து எண்ணெய்க் கலவையில் கலக்கவும். கலவையைக் காய்ச்சி மெழுகு பதமானவுடன் வடித்து வைத்துக் கொள்ளவும். 35 கி. அளவு பத்து நாட்களுக்குக் கொடுக்க கவிசை, பீலிகை, கரைந்துவிடும். பெருவயிறு, கட்டி, வாய்வு, மகோதரங்கள், வாய்வான திரட்சி, எட்டு வகைக் குன்மம், வாதம், கைகால் சூலைக்கட்டு, குத்துவலி, வயிற்று நோய்கள் தீரும். இசிவுப்புழு நழுவி கீழே விழுந்துவிடும்.

வாய்வுக்கு எண்ணெய்

கேளப்பா வேப்பெண்ணை புங்கி னெண்ணெய்
கடியான ஆமணக்கு புன்னை எண்ணெய்
நாளப்பா எள்ளெண்ணெய் அஞ்சுங் கூட்டி
நலமாக வகையொன்று படியரைதான் சேர்த்து
தாளப்பா வெள்ளுள்ளி வசம்பு காயம்
தினமான திரிகடுகு வோமம் கிராம்பு
ஆளப்பா சதகுப்பை கடுகு ரோகணி
அப்பனே சித்திரமா மூல மாமே! 237

ஆமப்பா வகையொன்று பலமரைதான் வாங்கி
அப்பனே காடியா லரைத்துப் போட்டு
வேமப்பா காடிபடி ரெண்டி லேதான்
விருதாகக் கரைத்துவிட்டு அடுப்பி லேற்றி
போமப்பா மெழுகுபதம் வடித்துக் கொண்டு
புகழான கலசமதில் பதனம் பண்ணி
தாமப்பா மேற்பூசிப் பிடித்துக் காய்ச்சத்
தவறிப்போம் வாதம்எண் பதுவுந் தானே! 238

தானென்ற சூலைவகை யெல்லாம் போகும்
தளமான திமிர்வாதம் பிறயிசிவு.....
நானென்ற யிசிவுமுதல் நடுக்கு வாதம்
நாடாது சிறுகடுப்பு நளின மாகுந்
தேனென்ற காசிடைதான் உள்ளே கொள்ள
தேகத்தில் வாதமெல்லாம் தெரிகெட் டோடும்
வானென்ற தேகவலி யெல்லாந் தீரும்
வளமாகுந் துவாலையிட வாதம் போகும்! 239

வேப்பெண்ணெய், புங்கம் எண்ணெய், ஆமணக் கெண்ணெய், புன்னை எண்ணெய், நல்லெண்ணெய் ஆகிய ஐந்து வகை எண்ணெய்களையும் வகைக்கு 675 மி.லி. எடுத்து ஒன்று சேர்த்துக் கொள்ளவும். வெள்ளுள்ளி, வசம்பு, காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கிராம்பு, சதகுப்பை, கடுகு ரோகிணி, சித்திரமூலம் இவற்றை வகைக்கு 17.5 கி. எடுத்து

காடியில் அரைத்து 2.6 லி. காடியில் கலந்து கொள்ளவும். காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து கலசத்தில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். அதனை மேலுக்குப் பூசி, 4 கி. அளவு உட்கொள்ள எண்பது வகை வாதம் நீங்கும். சூலை வகைகள், திமிர்வாதம், புற இசிவு, நடுக்கு வாதம், கடுப்புகள் நீங்கும். வாதவலிகள், உடல் வலிகள் ஒழியும்.

சுகசீதபேதி எண்ணெய்

போமப்பா சுகசீத பேதி எண்ணெய்
புகலுகிறேன் முத்தெண்ணை படிதா னொன்று
காமப்பா குமரிச்சார் படிதா னொன்று
கருவான பிரமிச்சார் படியரைதா னப்பா
தாமப்பா மிளகுடனே களிப்பாக்கு கடுக்காய்
தவறாமல் கருவேலிலை பலம்ரெண் டப்பா
நாமப்பா பதக்குநீ ரதனில் போட்டு
நலமாக எட்டொன்றாய் வடித்து வாங்கே! 240

வாங்கியே எண்ணெக்குள் விட்டு அப்பால்
வளமாக கடுக்காயும் கடுகு ரோகணி
தாங்கியே மிளகுடனே உள்ளிவகை யொன்று
தவறாமல் பலமரைதான் அரைத்துப் போட்டு
வாங்கியே யடுப்பேற்றி மெழுகுபத மானால்
என்னசொல்வேன் கலசத்துள் வடித்து விட்டு
ஆங்கியே கால்சேர்தான் கொடுத்தா யானால்
அப்பனே சுகசீத பேதி யாமே! 241

ஆமப்பா நீர்க்கட்டு வாய்வு வூதல்
அப்பனே வாய்வெல்லா மகண்டு போகும்
தாமப்பா சரீரமெல்லாங் குளிர்ச்சி யாகும்
தள்ளாத வயிறுவிம்மல் தளர்ந்து போகும்
நாமப்பா மூலத்தில் சூடெல்லாம் போம்
நாடாது பித்தமெல்லாம் கீழே சாடும்
போமப்பா யிதைப்போலே பேதி யெண்ணை
பூதலத்தில் சுகபேதி யில்லை தானே! 242

விளக்கெண்ணெய், கற்றாழைச்சாறு இவற்றை வகைக்கு 1.3 லி., பிரமிச்சாறு 675 மி.லி., எடுத்து ஒன்று கலந்து கொள்க. மிளகு, களிப்பாக்கு, கடுக்காய், கருவேலிலை இவற்றை வகைக்கு 70 கி. எடுத்து 10.7 லி. நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அக்குடிநீரை எண்ணெயில் சேர்த்துக் கொள்ளவும். கடுக்காய், கடுகுரோகணி, மிளகு, உள்ளி இவற்றை வகைக்கு 17.5 கி. எடுத்தரைத்துக் கலவையில் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதமானவுடன் கலசத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். 70 கி. அளவு கொடுக்க சுக சீதபேதி யாகும். நீர்க்கட்டு, வாய்வுநீங்கி உடல் குளிர்ச்சியாகும். வயிறு விம்மல், மூலச்சூடு, பித்தம் ஆகியவை தீரும்.

பழத்தெண்ணெய்

தானென்ற பழத்தெண்ணை சொல்லக் கேளு
தவறாமல் பழச்சாறு படிதா னொன்று
நானென்ற முத்தெண்ணை படிதா னொன்று
நலமான குமரிச்சார் படிதா னொன்று
வேனென்ற கடுக்காய்தான் பலமும் ரெண்டு
விருதாக அரைத்தெண்ணை தன்னில் போட்டு
கானென்ற அடுப்பேற்றி மெழுகுபத மானால்
கண்டப்பா வடிகொண்டு கலசம் வாரே! 243

வார்த்தப்பா கால்சேர்தான் கொடுத்தா யானால்
வாங்குமடா பித்தமென்ற நாற்ப தும்போம்
ஏத்தப்பா எரிவுமுதல் காந்தி தீரும்
எண்ணவே உஷ்ணநோ யெல்லாந் திரும்
காத்தப்பா பட்சமொன்று கொடுத்தா யானால்
கருவான னோயெல்லாங் காணா தோடும்
பாத்தப்பா வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்
பறக்குமடா பித்தநோய் பாரு பாரே! 244

எலுமிச்சம் பழச்சாறு, விளக்கெண்ணெய், கற்றாழைச் சாறு இவற்றை வகைக்கு 1.3 லி. எடுத்து ஒன்று சேர்த்து அதில் 70 கி. கடுக்காயை அரைத்துக் கலந்துகொள்க. பின்

அதனைக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கலசத்தில் வைத்துக் கொள்க. அதில் 70 கி. எண்ணெயைப் பதினைந்து நாட்களுக்கு உள்ளுக்குக் கொடுக்க நாற்பது வகை பித்தம், எரிவு, காந்தல், வெப்பநோய்கள், வயிற்று நோய்கள் நீங்கும்.

வீரபத்திர கலிக்கம்

பாரப்பா வீரபத்திர கலிக்கம் கேளு
பறக்குமடா சன்னியொடு மற்ற தெல்லாம்
சேரப்பா திரிகடுகு காயம் இந்து
திறமான வாளமொடு கிராம்பு யேழும்
வேரப்பா வெற்றிலைச்சார் தன்னா லாட்டி
வெகுசுருக்காய் நால்சாமம் அரைத்துக் கொண்டு
ஆறப்பா முன்சாற்றில் கலிக்கம் போட
அப்பனே சன்னிமுதல் தோடம் போமே! 245

சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், இந்துப்பு, நேர்வாளம், கிராம்பு ஆகிய ஏழு மருந்துப் பொருட்களை வெற்றிலைச் சாற்றினால் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்து அச்சாற்றிலேயே கலந்து கண்ணில் விட சன்னி மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்கள் நீங்கும்.

ஆக்கிராணம்

போமப்பா ஆக்கிராணம் சொல்லக் கேளு
புகழான சுண்டைக்காய் திப்பிலி மூலம்
நாமப்பா யிலுப்பைப்புண் ணாக்குஞ் சுட்டு
நலமான முன்ரண்டும் ரவியு லர்த்தி
சோமப்பா பொடிசெய்து வடிகொண் டேதான்
திறமான குழலடைத்து ஆக்கிரா ணஞ்செய்
தாமப்பா தலையிலுள்ள தோட மெல்லாம்
சண்ணுண்டு போகுமடா யின்னுங் கேளே! 246

சுண்டைக்காய், திப்பிலி மூலம், இலுப்பைப் பிண்ணாக்கு இவற்றைச் சம அளவு எடுத்து முதலிலுள்ள இரண்டையும் வெயிலில் உலர்த்திப் பொடிசெய்து கொள்ளவும். பிண்ணாக்கைச்

சுட்டு கலந்து கொள்க. அப்பொடியினை வடிகட்டி குழலில் அடைத்து மூக்கின் வழி ஆக்கிராணம் செய்ய தலையிலுள்ள தோடங்கள் அனைத்தும் நீங்கும்.

நசியம்

கேளப்பா இலுப்பையுட பழம்பிண் ணாக்கை
கிருபையாய் பொடிசெய்து துணியில் கட்டி
நாளப்பா வாலையுட வடி........ நீரால்
மைந்தனே நசியமிட சன்னி தோடம்
தாளப்பா பித்தத்தா லெடுத்த தோடம்
தனமான கபவாத தோட மெல்லாம்
மாளடா பிரமராட் சதன்முதலாய்ப் போகும்
அணுகாது பிசாசுமுத லகண்டு போமே! 247

இலுப்பையின் நாட்பட்ட பிண்ணாக்கைப் பொடித்துத் துணியில் முடிந்து வாலையின் வடிநீரில் ஊறவைத்து அதனைப் பிழிந்து மூக்கில் நசியமிட பித்தத்தாலான தோடம், கபவாத தோடம், பிரமராட்சதன், பிசாசு ஆகியவை ஒழிந்து விடும்.

கொண்டவிழ்தம்

போமப்பா கொண்டவிழ்தம் சொல்லக் கேளு
புதுமையாம் தங்கமொடு வெள்ளி முத்து
நாமப்பா மதுரமொடு கிராம்பு திப்பிலி
நலமான பவளமொடு ருத்தி ராஷ்டம்
தாமப்பா கோஷ்டமொடு அக்கிரா காரம்
தளமான ஏலமொடு குவளத்தின் மூலம்
ஆமப்பா கலங்கொம்பு ரசசெந் தூரம்
அப்பனே ஆடாதோடை மூலந் தானே! 248

தானென்ற முலைப்பாலி லரைத்துக் கொண்டு
தப்பாமல் தேன்குத்தி நாவில் போட
நானென்ற தோஷமுதல் சன்னி யெல்லாம்
நாடாது நாவறட்சி நாவ ழுத்தல்

தேனென்ற ஸ்ரீசங்கத் தோஷம் வாந்தி
திறமான விக்கல்முதல் தீரும் தீரும்
வானென்ற வாதமெல்லாம் வாங்கிப் போகும்
வளமான ....குந் தானே! 249

தங்கம், வெள்ளி, முத்து, அதிமதுரம், கிராம்பு, திப்பிலி, பவளம், ருத்திராட்சம், கோட்டம், அக்கிராகாரம், ஏலம், குவளையின் சமூலம், மான்கொம்பு, இரசசெந்தூரம், ஆடாதோடை வேர் இவற்றை வகைக்குச் சம அளவு எடுத்துத் தாய்ப் பாலிலரைத்து அதில் வேண்டிய அளவு தேனை விட்டு கலக்கிக் கொள்ளவும் அதில் குறிப்பிட்ட அளவு நாவில் தடவ தோடம், சன்னி, நாவறட்சி, நாக்கு தடுமாறல், ஸ்ரீசங்கத்தோடம், வாந்தி, விக்கல், வாதங்கள் நீங்கும்.

குருவுபதேசம்

கேளப்பா செந்தூர பற்ப மெல்லாம்
கெடியான சிங்கமுப்பு தொட்டா லாகும்
நாளப்பா யிதைவிட்டால் பற்ப மில்லை
நன்றான லோகமுதல் சிகப்பே றாது
வாளப்பா யிதுவல்லே புடத்தி லாதி
வகையறியான் வயிற்றி னல்லா மாடுமேய்க்கி
தாளப்பா வைத்தியர்க்காய்க் கருவைச் சொன்னேன்
தப்பாது பற்பமுறை செந்தூரந் தானே! 250

இனி செந்தூர பற்பங்கள் செய்யும் முறையைக் கூறுகிறேன். இவற்றை விட சிறப்பான செந்தூர பற்பங்கள் வேறேதுமில்லை. வைத்தியர்க்குதவும் செந்தூர பற்ப முறைகள் இங்கு கூறப்புகுகிறேன்.

லோக செந்தூரம்

தானென்ற லோகசெந் தூரம் கேளு
தயவான அரப்பொடியில் நல்லெண்ணை விட்டு
வானென்ற நாழிகைதா னறுப தானால்
வளமாக வார்த்தனைப் பீங்கானி லிட்டு

நானென்ற பழச்சாறு பிழிந்து விட்டு
நலமாகக் கிண்டிவைத்து நாலாம் நாளில்
தேனென்று யுறிஞ்சியதைக் கழுவிப் போட்டு
திறமாக ரவியுலர்த்தி பலந்தான் தூக்கே! 251

தூக்கியே கெந்தித்த சுத்தி கேளு
சுகமாகப் பலம்ரெண்டு கூடப் போட்டு
தூக்கியே பழச்சாற்றால் சாமம் னாலு
தளமான பொற்றலையால் சாமம் னாலு
தேக்கியே அரைக்கயிலே முப்பூ வப்பா
திறமாகக் கழஞ்சிநிறை திறமாய்ப் போடு
வாய்க்கியே வில்லைசெய்து ரவியில் காய்ந்தால்
வளமான முப்பதெரு புடத்தில் போடே! 252

போட்டப்பா மறுக்காலும் பொற்கை யானால்
புகழாக சாமம்ரெண்டு அரைத்துக் கொண்டு
நாட்டப்பா வில்லைசெய்து ரவியு லர்த்தி
நலமாக முன்போலே புடத்தைப் போடு
ஆட்டப்பா ஆறினபின் னெடுத்துப் பாரு
அப்பனே முருக்கம்பூ போலாம் வர்ணம்
காட்டப்பா பணவிடைதா னனுபா னத்திற்
கருவாகத் தேன்கூட்டிக் கொள்ளு கொள்ளே! 253

கொள்ளவே பாண்டுவகை யெல்லாந் திரும்
குறிப்பான பித்தவெட்டை பித்த வாய்வு
நள்ளவே வாய்வென்ற தெல்லாந் திரும்
நாடாது அரோசியங்க ளன்ன தோஷம்
விள்ளவே மயக்கமொடு வாந்தி திரும்
விருதான பித்தமெல்லாம் விழலாய்ப் போகும்
தள்ளவே யிஞ்சியென்ற சூர ணத்தில்
சாப்பிடவே தேன்கூட்டி சாடும் பாரே! 254

அரப்பொடியில் நல்லெண்ணெயை ஊற்றி ஒரு நாள் ஊறவிடுக. பின் அதனை யெடுத்துப் பீங்கானில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றினைப் பிழிந்து கிண்டி விடவேண்டும்.

நான்காம் நாள் அதனைக் கழுவி வெயிலில் உலர்த்தி 35 கி. அளவெடுக்க. 70 கி. சுத்தித்த கந்தகத்தைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரமும் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் பன்னிரெண்டு மணிநேரமும் அரைத்து 5 கி. முப்புவையும் உடன் சேர்த்தரைத்து வில்லை களாய்ச் செய்து வெயிலில் காய வைத்து முப்பது வறட்டியில் புடம் போட வேண்டும்.

புடம் ஆறிய பின் எடுத்து மீண்டும் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் ஆறு மணி நேரமரைத்து வில்லை செய்து வெயிலில் உலர்த்தி மேற்கூறியது போல புடம் போட வேண்டும். ஆறியபின் எடுத்துப் பார்க்க முருக்கம் பூவின் நிறம் போன்று செந்தூரமாகும், 488 மி.கி. அளவெடுத்து தேனில் குழைத்துக் கொடுக்க பாண்டு வகைகள், பித்த வெட்டை, பித்தவாய்வு, வாய்வு வகைகள், அரோசிகங்கள், அன்னதோடம், மயக்கம், வாந்தி ஆகிய நோய்கள் தீரும். இஞ்சி சூரணத்துடன் லோக செந்தூரத்தையும் தேனையும் சேர்த்து உட்கொள்ள பித்தம் குறையும்.

காந்தம்

பாரப்பா காந்தத்தை யிப்படியே செய்யில்
பரிவான காந்தமது செப்பு மேத்த
சாரப்பா வனுபான மறிந்து கொண்டால்
தப்பாது மூலவகை யாவுந் திரும்
சேரப்பா பித்தமெல்லாஞ் சிதறிப் போகும்
தேகத்தில் பாண்டுவெல்லாந் திரும் தீரும்
ஆரப்பா தேனிலே கொண்டா யானால்
அருணனைப்போல் காந்தியாம் அறிந்து கொள்ளே! 255

காந்தத்தையும் மேற்கூறியவாறே முறைப்படி செய்து தக்க அனுபானத்தில் உட்கொண்டால் மூலவகை, பித்தம், பாண்டு ஆகிய நோய்கள் தீரும். தேனில் சாப்பிட்டால் சூரியனைப் போல் ஒளியுடன் இருப்பார்.

அயக்காந்தச் செந்தூரம்

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரம் கேளு
குறிப்பாக ரெண்டையுந்தான் சுத்தி செய்து
நள்ளவே சமனாக ரெண்டுங் கூட்டி
நலமாக சாதிலிங்கம் சமனாய்க் கூட்டி
தள்ளவே வெண்காரம் கால்தான் கூட்டி
தயவான ரசங்கால்தான் கெந்திரும னப்பா
விள்ளவே சுத்திசெய்து கல்வத் திட்டு
விருதான பழச்சாற்றால் சாமம் னாலே! 256

நாலாக முப்பூவுங் கழஞ்சி ரெண்டு
நலமான பொற்றலையால் சாமம் னாலு
காலாக அரைத்துவில்லை ரவியில் காய்ந்தால்
கருவான ஒட்டிலிட்டு ஒடு மூடி
சாலாக முப்பதெரு புடத்தில் போடு
தப்பாது செந்தூர மருணன் போலாம்
பாலாக பணவிடைதா னனுபா னத்தில்
மைந்தனே கொண்டுவரத் திரும் நோய்கேள்! 257

கேளப்பா பாண்டுஆறு கிராணி ஆறு
கிருபையாம் பித்தமது நாற்ப தும்போம்
நாளப்பா வாய்வோடு வாத மெல்லாம்
நாடாது அக்கினியா மந்தங் கேளு
சூளப்பா தாதுவெல்லாம் முறுக்கி ஏறும்
சுகமாக வெளுத்தசடம் வண்டு போலாம்
ஆளப்பா சுயதேனில் கொண்டா யானால்
அணுகாது பாண்டுவென்ற ரோகம் போமே! 258

போமப்பா சூலையொடு வாய்வ தெல்லாம்
பொல்லாத கெர்ப்பனோய் சொல்லா தோடும்
நாளப்பா வாந்தியொடு பொருமல் விம்மல்
நாடாது உஷ்ணமாம் வாய்வு திரும்

தாமப்பா சேட்டுமங்க ளெல்லாந் தீரும்
தலைமயக்கம் வாயூறல் சாந்த மாகும்
வேமப்பா பத்தியங்கார் பித்த மெல்லாம்
வெகுசுருக்காய்த் திருமப்பா இன்னங் கேளே! *259*

அயம், காந்தம் இரண்டையும் முறைப்படி சுத்தி செய்து சம அளவெடுத்துக் கொள்க. சாதிலிங்கம் சம அளவாகவும் வெண்காரம், இரசம் இரண்டையும் வகைக்குக் கால் பங்கு, கெந்தகம் அரைப் பங்களவெடுத்துச் சுத்திசெய்து சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்துக் கொள்க. 10 கி. முப்புவையும் உடன் சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்து மாத்திரை தட்டி வெயிலில் உலர்த்திக் கொள்க. அதனை ஓட்டில் போட்டு ஓட்டினால் மூடி முப்பது எருவில் புடம் போட செந்தூரமாகும். 488 மி.கி. அளவு தக்க அனுபானத்தில் உட்கொள்ள பல நோய்கள் தீரும்.

அறுவகைப்பாண்டு, அறுவகைக் கிராணி, நாற்பது வகை பித்தம், வாய்வு, வாதம், பசி மந்தம் ஆகிய நோய்கள் இம்மருந்தால் தீரும். தாது விருத்தியாகும். வெளுத்தமேனி வண்டு போலாகும். தேனில் இச்செந்தூரத்தை உட்கொண்டால் பாண்டு நீங்கும்.

சூலை, வாய்வு, கெர்ப்பநோய், வாந்தி, வயிற்றுப் பொருமல், விம்மல், உஷ்ணவாய்வு, சிலேட்டுமங்கள், தலைமயக்கம், வாயூறல், பித்தங்கள் ஆகியவை தீரும். பத்தியத்தைத் தவறாது கடைபிடிக்க வேண்டும்.

திருலோகச் செந்தூரம்

கேளப்பா திருலோகச் செந்தூ ரந்தான்
கெடியான லோகமொடு அப்பிரகங் காந்தம்
நாளப்பா மூன்றை யுந்தான் செய்து
நலமாகச் சமன்கூட்டி கல்வத் திட்டு

தாளப்பா சுத்தித்த கெந்திசமன் கூட்டி
தப்பாமல் வாலைரசம் பாதி சேர்த்து
ஆளப்பா பழச்சாற்றில் சாமம் னாலு
அப்பனே அரைக்கயிலே பூனிறு போடே! 260

போடப்பா முக்கழஞ்சி தூக்கி யேதான்
பொற்றலையால் நால்சாமம் அரைத்துக் கொண்டு
நாடப்பா செருப்படியால் சாமம் னாலு
நன்றான குமரிச்சார் சாமம் னாலு
தேடபபா வில்லைசெய்து ரவியில் போடு
திறமாக வோட்டில்வைத்து வோடு மூடி
ஆடப்பா சீலைசெய்து புடத்தில் போடு
ஆறினபின் எடுத்ததை அரைக்கக் கேளே! 261

கேளப்பா லிங்கமரைப் பலந்தான் கூட்டி
கெடியான குமரிச்சார் சாம மாட்டு
நாளப்பா அரைத்துவில்லை ரவியில் காய்ந்தால்
நன்றாக முப்பதெரு புடத்தில் போடு
வேளப்பா செந்தூர மருணன் போலாம்
வெகுசுருக்காய்ச் சஞ்சீவி சூர ணத்தில்
தாளப்பா பணவிடைதான் நெய்யில் கொள்ள
தப்பாது மேகநீர் தவறிப் போமே! 262

தவறிப்போம் பாண்டுவகை யாவுந் தீரும்
தப்பாது பித்தமென்ற நாற்ப தும்போம்
தவறிப்போம் மேகமென்ற திருவத் தொன்றும்
சாந்தமாம் வாய்வெல்லா மொழிந்து போகும்
தவறிப்போம் உள்சூடு இரும லெல்லாம்
சந்திரன்போல் தேகமது குளிர்ச்சி யாகும்
தவறிப்போம் பித்தத்தின் கோப மெல்லாம்
சண்ணுமடா யின்னமொன்று சாற்றக் கேளே! 263

இரும்பு, அப்பிரகம், காந்தம் ஆகிய மூன்றையும் சமமாக எடுத்து அதனுடன் சுத்தி செய்த கெந்தியைச் சமமாகவும், வாலை ரசத்தை அதில் பாதியளவும் சேர்த்து எலுமிச்சம்

பழச்சாற்றால் பன்னிரெண்டு மணி நேரமரைத்துக் கொள்ளவும். அரைக்கும் போதே பூநீற்றை 15 கி. அளவு சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் பன்னிரெண்டு மணி நேரமும் செருப்படைச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரமும் கற்றாழைச் சாற்றால் பன்னிரெண்டு மணி நேரமும் அரைத்து வில்லைகளாகச் செய்து வெயிலில் உலர்த்தவும். ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை செய்து புடம் போடவும். ஆறிய பிறகு எடுத்து 17 கி. லிங்கத்தைச் சேர்த்து கற்றாழைச் சாறு விட்டு மூன்று மணிநேரம் ஆட்டிவில்லை செய்து வெயிலில் உலர்த்தி முப்பது எருவில் புடம் போட செந்தூரமாகும்.

சஞ்சீவி சூரணத்தை, 488 மி.கி. செந்தூரத்துடன் சேர்த்து தேனில் கொள்ள மேகம் இருபத்தொன்று, பாண்டுவகைகள், நாற்பது வகை பித்தம், வாய்வு, உள்சூடு, இருமல், பித்த கோபம் ஆகியவை நீங்கும். உடல் குளிர்ச்சியாகும்.

பஞ்சலோகச் செந்தூரம்

கேளடா பஞ்சலோகச் செந்தூ ரந்தான்
கெடியான தங்கமொடு வெள்ளி செம்பு
நாளடா காந்தமொடு இரும்பு அஞ்சு
நலமாகச் சுத்திசெய்து சமனாய்க் கூட்டி
வேளடா கெந்தகந்தான் ரெட்டிப் பிட்டு
வெகுளாத சூதமரை வீரங் கால்தான்
ஆளடா முப்பூவின் சுண்ண மொன்று
அப்பனே பழச்சாற்றா லரைச்சாமம் னாலே! 264

நால்சாம மரைத்துமே உலர வைத்து
நன்றான வோட்டிலிட்டு ஒடு மூடி
சீலான சீலைசெய்து முழப்பு டத்தில்
சென்றேதா னாறினபின் னெடுத்துக் கொண்டு
காலான கரிசாலைச் சாற்றி லாட்டி
கசகாமல் நால்சாம மரைத்துக் கொண்டு
வேலான முழப்புடத்தில் செந்தூர மாகும்
விருதான செருப்படியால் சாமம்னா லாட்டே! 265

ஆட்டியே முழப்புடத்தில் செந்தூ ரந்தான்
அருணனைப்போல் நிறமாகு மெடுத்துக் கொண்டு
முட்டியே திரிகடுகு பணவிடைதான் கொள்ள
முதண்ட தேன்கூட்டி மண்டலந்தான் கொள்ளு
நாட்டியே வாய்வென்ற தெண்ப தும்போம்
நாடாது சேட்டுமங்க ளிருவ தும்போம்
....
கருவாக இன்னமொன்று கருதிக் கேளே! 266

தங்கம், வெள்ளி, செம்பு, காந்தம், இரும்பு இவற்றை முறைப்படி சுத்திசெய்து சமமாய் எடுத்துக் கொள்க. இவ் வெடைக்கு இரண்டு மடங்கு கெந்தகத்தையும் அரைப்பங்கு இரசத்தையும், கால்பங்கு வீரத்தையும் முப்பு சுண்ணத்தையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்துக் கொள்க. பின் காயவைத்து ஓட்டில்வைத்து ஓட்டினால் மூடி சீலை செய்து முழஅளவு புடம் போட்டு ஆறியபின் எடுத்துக் கரிசாலைச் சாற்றினால் பன்னிரெண்டு மணிநேரம் ஆட்டி முழப்புடத்தில் வைக்க செந்தூரமாகும். மீண்டும் பன்னிரெண்டு மணிநேரம் செருப்படைச்சாற்றால் ஆட்டி முழ அளவு புடம்போட செந்தூரமாகும்.

488 மி.கி. செந்தூரத்துடன் திரிகடுகு சூரணத்தையும், தேனையும் சேர்த்து நாற்பது நாட்கள் உட்கொள்ள எண்பது வகை வாய்வு, இருபது வகை சிலேட்டுமங்கள் நீங்கும்.

கிட்டச் செந்தூரம்

கேளடா ஆயிரந்தான் வருடஞ் சென்ற
கெடியான கிட்டமது கொண்டு வந்து
தாளடா ஆவினீர் தன்னி லேதான்
தளமாகக் காய்ச்சியே தோய்த்து தோய்த்து
வேளடா பத்துவிசை தோய்த்தெ டுத்து
விருதான கல்வத்தில் பொடியைச் செய்து
நாளடா பத்திலொன்று கெந்தி சூதம்
நலமான லிங்கப்பூ வெண்காரம் கூட்டே! 267

கூட்டியே பழச்சாற்றில் புடந்தான் பத்து
கூசாதே கரிசாலை புடந்தான் பத்து
ஆட்டியே செருப்படியால் புடந்தான் பத்து
அப்பனே செம்பைச்சார் புடந்தான் பத்து
நீட்டியே அரசினுட பட்டைச் சாற்றில்
நேராகப் புடமஞ்சு போட்டெ டுத்து
காட்டியே செந்தூரம் பொடிதான் செய்து
கனமான பரணிதனி லடைத்துக் கொள்ளே! 268

கொள்ளவே திரிகடுகு தேனி லேதான்
கூசாதே பணம்ரெண்டு கூட்டிக் கொள்ள
விள்ளவே விடப்பாண்டு காமாலை யாகும்
விருதான பாண்டு கூடப்போ டப்பா
தள்ளவே பித்தமெல்லாம் கீழே சாடும்
தளமான சேட்டுமனோய் தொண்ணூற் றாறும்
கள்ளவே கடல்புக்குங் காணா தோடும்
கண்டாயோ வெண்பாண்டங் கரும்பாண்ட மாமே! 269

ஆமப்பா அரோசியங்க ளன்ன தோஷம்
ஆகாகா நீங்காத வாந்தி விக்கல்
தாமப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
நலமான நீர்த்தோடம் நாடா தோடும்
காமப்பா லூருமடா தேக மின்னும்
நலமான அப்பிரகஞ் சொல்லக் கேளே! 270

ஆயிரம் வருடத்திய கிட்டத்தைப் பசு கோமியத்தில் காய்ச்சி பத்துமுறை தோய்த்தெடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொள்ளவும். கெந்தி, சூதம், லிங்கப்பூ, வெண்காரம் இவற்றைப் பத்திலொரு பாகம் எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும். பின் எலுமிச்சம்பழச்சாற்றாலும், கரிசாலைச் சாற்றாலும். செருப்படைச்சாற்றாலும், செம்பைச்சாற்றாலும் முறையே அரைத்து வகைக்குப் பத்துபுடமும், அரசுப் பட்டைச் சாற்றால் அரைத்து ஐந்து புடமும் போட செந்தூரமாகும். அதனைப் பரணில் அடைத்து வைக்கவும். திரிகடுகுச்

சூரணத்தையும், தேனையும் 976 மி.கி. செந்தூரத்துடன் சேர்த்து உட்கொள்ள விடப்பாண்டு, காமாலை, பாண்டு, பித்தம், தொண்ணூற்றாறு வகை சிலேட்டுமம், வெண்பாண்டு, கரும்பாண்டு, அரோசிகங்கள், அன்னதோடம், வாந்தி, விக்கல், வாயு, நீர்த்தோடம் ஆகிய நோய்கள் தீரும்.

அப்பிரகச் செந்தூரம்

சொல்லக்கேள் கிருஷ்ணஅப் பிரகம் வாங்கி
சுருக்காகக் காய்ச்சியே பாலில் போட்டு
வல்லக்கேள் கழுவியதை யெடுத்துக் கொண்டு
வாகான நெல்லோடு அப்பிரகங் கலந்து
நல்லக்கேள் காடியினால் பிசைந்தா யானால்
நலமான அப்பிரக மிறங்கும் பாரு
வில்லக்கேள் மறுநாள்தான் தெளிவி றுத்து
விருதான அப்பிரகம் ரவியில் போடே! 271

போட்டப்பா உலர்ந்தபின்பு யெடுத்துக் கொண்டு
புகழான கல்வத்தில் போட்டு நீயும்
ஆட்டப்பா பழச்சாற்றால் நாலு சாமம்
அப்பனே பத்திலொன்று கெந்தி கூட்டி
நாட்டப்பா வில்லைதட்டி ரவிகொண் டேதான்
நலமாக முப்பதெரு புடத்தில் போடு
நீட்டப்பா கெந்திவிட்டு பழச்சாற் றாலே
நேராக நால்சாம மரைத்து ருட்டே! 272

காட்டியே ரவிதனிலே காய்ந்த பின்பு
கனமாக வோட்டிலிட்டு புடத்தைப் போடு
ஆட்டியே கல்வத்தில் போட்டு நீயும்
அப்பனே கெந்தியிட்டு பழச்சாற் றாட்டி
வாட்டியே பத்துவிசை புடத்தில் போட்டு
பாங்காகப் பின்னெடுத்து கரிசாலைச் சாற்றில்
வாட்டியே புடம்பத்து போட்டெ டுத்து
வாகாகச் செருப்படிச்சார் விட்டு ஆட்டே! 273

ஆட்டியே யிருசாமம் உலர வைத்து
அப்பனே புடம்பத்து போட்டெ டுத்து
நீட்டியே பொடுதலைச்சார் புடந்தான் பத்து
நேரான பொற்றலையில் புடந்தா னஞ்சு
காட்டியே செருப்படியின் சாற்றால் ....
கசகாமல் புடமஞ்சு போட்டெ டுத்து
மாட்டியே முருக்கம்பூ சாற்றி லாட்டி
மைந்தனே புடமஞ்சு போட்டுக் கொள்ளே! 274

கொள்ளப்பா செந்தூரம் அருணன் போலாம்
கொடிதான அனுபான மறிந்து கொள்ளு
விள்ளப்பா சயமெட்டு மிரும லிளைப்பு
விருதான சேட்டுமனோய் தொண்ணூற் றாறும்
கண்ணப்பா பயந்தோடும் கடலே புக்கும்
கருமான சஞ்சீவி சூர ணத்தில்
அள்ளப்பா பணவிடைதான் தேனில் கொள்ள
அற்றுப்போம் மேகநீர் இசிவு போமே! 275

கிருஷ்ண அப்பிரகத்தைக் காய்ச்சிப் பாலில் போட்டுக் கழுவி எடுத்து நெல்லுடன் கலந்து காடியை விட்டுப் பிசைய அப்பிரகம் சுத்தியாகும். மறுநாள் தெளிவினை இறுத்து வெயிலில் உலர வைக்கவும். காய்ந்த பின்பு கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்து, பத்திலொரு பாகம் கெந்தகத்தைச் சேர்த்து மாத்திரைகளாகத் தட்டி வெயிலில் உலர்த்தி முப்பது எருவில் புடம் போட வேண்டும். கெந்தகத்தைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்துருட்டி வெயிலில் காய வைத்துக் கனமாகவுள்ள ஓட்டில் வைத்துப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளவும். எடுத்ததைக் கல்வத்தில் இட்டு கெந்தகத்தைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பத்துமுறை புடத்திலிடவும். மறுபடி அதை எடுத்துக் கரிசாலைச் சாற்றில் அரைத்துப் பத்துமுறை புடம் போடவும். அதை எடுத்து செருப்படிச் சாறூற்றி அரைத்துக் கொள்ளவும்.

ஆறுமணி நேரம் காயவைத்துப் பத்துமுறை புடம் போடவும். அதை மீண்டும் எடுத்துப் பொடுதலைச் சாற்றால் அரைத்துப் பத்துமுறை புடம் போடவும். இவ்வாறே பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் அரைத்து ஐந்து புடங்கள் போடவும். செருப்படிச்சாற்றால் அரைத்து ஐந்து புடமும் முருக்கம்பூச்சாற்றால் அரைத்து ஐந்து புடமும் போட செந்தூரமாகும். சஞ்சீவி சூரணத்தில் இச்செந்தூரத்தை 488 மி.கி. சேர்த்துத் தேனில் கலந்து உட்கொள்ள எட்டு வகைச் சயமும் ஈளை, இருமல், இளைப்பு, தொண்ணூற்றாறு வகை சிலேத்துமநோய், மேகம், இசிவு ஆகிய நோய்கள் குணமாகும்.

துருசுக்குரு

சொல்லக்கேள் புலத்தியனே பற்பத் துக்கு
சுருக்கான குருவொன்று சொல்லக் கேளு
வல்லக்கேள் துருசுசுத்தி பண்ணிக் கொண்டு
வகையான உப்புநீர் மூன்றா னாள்தான்
அல்லக்கேள் சாரநீர் மூன்று நாள்தான்
அழகாக ரவியுலர்த்தி பலமே தூக்கி
மல்லக்கேள் வங்கத்தைச் சுண்ண மூதி
வாகாக இடைக்கிடைதான் கவசம் போடே! 276

போட்டப்பா ரவியிலே ஏழு நாள்தான்
புகழாகக் காய்ந்தபின்பு சுண்ணச் சீலை
நாளப்பா மூன்றுசுத்தி காய வைத்து
நலமான காடையிலே குருவு மாகும்
பாடப்பா சிமிழுக்குள் பதனம் பண்ணு
பறக்கிறதோர் சூதத்தில் பத்தி லொன்று
நிட்டப்பா வாய்நீரா லரைத்து வில்லை
நிசமாக ரவியுலர்த்தி வோட்டில் வையே! 277

துருசினைச் சுத்தி செய்து உப்பு நீரில் மூன்று நாளும், சார நீரில் மூன்று நாளும் போட்டு வெயிலில் உலர்த்தி 35 கி. எடுத்துக் கொள்ளவும். அதே அளவு வங்கத்தை அதன் மீது

கவசமாகச் சுற்றி வைத்துக் கொள்ளவும். இதனை வெயிலில் ஏழு நாட்கள் வைத்துப் பின் சுண்ணச் சீலையை மூன்று முறை சுற்றி நன்கு காய வைத்துக் கொள்ளவும். பின் மூன்று எருவில் புடம்போட குருவாகும். இதனைச் சிமிழில் வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரச பற்பம்

வைய்யப்பா கிழேமேலும் கல்சுண் ணாம்பு
வகையான நடுவில்வில்லை வைத்து மூடு
செய்யப்பா சீலையது மூன்று செய்து
திறமான குக்குடத்திற் பற்ப மாகும்
மெய்யப்பா ரசபற்பம் பரணிதனி லடைத்து
விடுதாக நெய்தேனிற் பதனம் பண்ண
கைய்யப்பா காலோடு முடங்குஞ் சூலை
கண்காணா தோடுமடா யின்னங் கேளே! 278

கேளடா சர்வாங்க வாதந் தீரும்
கெடியான குன்மநோ யெட்டுந் தீரும்
பாழடா யிசிவுமுதல் பறந்து போகும்
பறக்குமே சன்னியென்ற பதிமூ னுந்தான்
தேளடா குத்தியதோர் கபாலச் சூலை
தெறிகெட்டு ஓடுமே சிரசுநோ யெல்லாம்
வாளடா திரேகமது வலுத்துப் போகும்
மகத்தான கெற்பநோய் மாறுந் தானே! 279

பத்தில் ஒரு பாகம் இரசத்தினை உமிழ்நீர் விட்டரைத்து வில்லைகளாகச் செய்து வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். ஓட்டின் மேலும், கீழும் கல் சுண்ணாம்பை வைத்து நடுவில் வில்லைகள் வைத்து மூடிக் கொள்ளவும். மூன்று சீலை செய்து பத்து வறட்டியிற் புடம் போட பற்பமாகும். இரச பற்பத்தைப் பரணில் அடைத்துக் கொள்ளவும். நெய், தேன் இவற்றில் ஏதேனுமொன்றில் கொடுக்க கால் முடக்கம்,

சர்வாங்கவாதம், எட்டு வகைக் குன்மம், சூலை, இசிவு, பதிமூன்று வகைச் சன்னி, கபாலச் சூலை, சிரசுநோய் ஆகியவை தீரும்.

தாளக பற்பம்

மாறுமே யின்னமொன்று மகிழ்ந்து கேளு
வகையான தாளகமும் சுத்தி செய்து
வீறுமே ரசபற்பம் துருசு நீறு
விருதாக வாய்நீரா லரைத்துக் கொண்டு
சாறுமே சமனதா ளகத்துக்கு அப்ப
சகுநாக ரவியுலர்த்தி சுண்ணச் சீலை
சீறுமே மூன்றுசெய்து சுண்ணத்தில் வைத்து
திறமான குக்குடத்திற் சீவன்போ லாமே! 280

ஆமப்பா மால்தேவி பற்பம் தன்னை
அளவாகத் தேனிலொரு பணமே வுண்ண
வேமப்பா சயமெட்டு மிளைப்பு மீளை
விருதான சேட்டுமநோய் தொண்ணூற் றாறும்
சாமப்பா பிரமியனோ யெல்லாந் தீரும்
சடத்திலே கபநோயி சாரா தோடும்
காமப்பா எலும்புருக்கி அத்தி ரோகம்
கண்காணா தோடுமடா இன்னங் கேளே! 281

தாளகத்தைச் சுத்தி செய்து எடுத்துக் கொள்க. இரசபற்பம், துருசுநீறு இவற்றை உமிழ்நீரால் அரைத்துத் தாளகத்திற்குக் கவசம் செய்து வெயிலில் உலர்த்தி சுண்ணச்சீலை மூன்று செய்து சுண்ணத்தில் வைத்து பத்து எருவில் புடம்போட தாளக பற்பமாகும். அதில் 488 மி.கி. எடுத்துத் தேனில் கலந்து உட்கொள்ள சயவகைகள் எட்டு, இளைப்பு, ஈளை, தொண்ணூற்றாறு வகை சிலேத்தும நோய்கள், பிரமிய நோய்கள், கபநோய்கள், எலும்புருக்கி, எலும்புநோய் ஆகியவை நீங்கும்.

வங்க பற்பம்

கேளடா வங்கத்தைச் சுத்தி பண்ணி
கெடியாக லேசாகத் தகடு போட்டு
தாளடா தாளகமும் ரசமுங் கூட்டி
சமனாக வாய்நீரா லரைத்துக் கொண்டு
வாளடா வங்கமென்ற தகட்டி லேதான்
வளமாகப் பூசுவாய் சமனாய் நீயும்
ஆளடா ரவியிலே உலரப் போட்டு
அப்பனே சுண்ணாம்பு சீலை சுற்றே! 282

சுத்தியே சுண்ணாம்பு சீலை செய்து
சுகமாக முழப்புடத்தில் நீறிப் போகும்
வித்தியே வங்கமென்ற பற்பந் தன்னை
வரிசையாய் திரிபலையின் சூர ணத்தில்
குத்தியே பணவிடைதான் குழப்பிக் கொண்டு
கொண்டுவர பத்துநாள் தீரும் னோய்கேள்
வத்தியே பிரமியமும் பிரமே கங்கள்
வளருகிற எலும்புருக்கி மாண்டு போமே! 283

மாண்டுபோம் கிரந்தியொரு னூற்றி பத்து
வறட்சியொடு சொறிசிரங்கு மாண்டு போகும்
மாண்டுபோம் மேலூறல் படர்ந்த வூறல்
வலிவான சில்விஷங்கள் மாண்டு போகும்
மாண்டுபோம் வாதமென்ற சூலை யெல்லாம்
வகையாக நாகத்தின் பற்பங் கேளே! 284

வங்கத்தைச் சுத்தி செய்து மெலிதாகத் தகடு தட்டிக் கொள்ளவும். தாளகம், இரசத்தைச் சேர்த்து உமிழ்நீரால் அரைத்து வங்கத்தின் மீது பூசிக்கொள்ளவும். வெயிலில் காயவைத்து சுண்ணாம்பு சீலையைச் சுற்றி முழ அளவு புடத்தில் வைக்க பற்பமாகும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் சேர்ந்த சூரணத்தில் வங்க பற்பத்தை 488 மி.கி.

அளவு கலந்து கொடுக்க பிரமியம், பிரமேகம், எலும்புருக்கி ஆகிய நோய்கள் பத்து நாட்களில் தீரும்.

கிரந்தி வகைகள் 110, வறட்சி, சொறிசிரங்கு, உடலூறல் சில்விடங்கள், வாதசூலை ஆகியவை தீரும்.

நாகபற்பம்

கேளப்பா நாகத்தைச் சுத்தி பண்ணி
கெடியாக லேசாக வில்லை செய்து
தாளப்பா தாளகமும் வங்க பற்பம்
சமனாகத் தூக்கி டையே தூக்கி
வாளப்பா வாய்நீரா லரைத்துக் கொண்டு
வளமாக வில்லைமேல் பூசிக் காய்ச்ச
ஆளப்பா சுண்ணாம்பு சீலை சுற்றி
சுத்தமாஞ் சுண்ணாம்புக் குள்ளே வையே! 285

வைத்தப்பா முழப்புடத்தில் நீறிப் போகும்
வாசுகிதா னிறிப்பின் சொல்லக் கேளு
கத்தப்பா திரிகடுகு தாளிச பத்திரி
கருவாக லவங்கமஞ்சுஞ் சரியாய்க் கூட்டி
பத்தப்பா ரவியிலே சூர ணித்து
பதறாதே வடிசெய்து வைத்து நீயும்
எத்தப்பா பணவிடைதான் தேனி லுண்ண
எழுந்ததொரு சேத்துமநோய் தொண்ணூற் றாறே! 286

ஆறான ரோகமெல்லாம் அற்றுப் போகும்
அப்பனே வாதமது வொன்ப தும்போம்
வீறான பித்தமது நாற்ப தும்போம்
வெகுசுருக்காய் மேகமொடு சூலை தீரும்
தாறான குட்டமது எட்டுந் தீரும்
தளமான கடிவிடங்கள் சாரா தோடும்
கூறான குறிளரிப்புங் குத்துந் தீரும்
குன்மமொடு சூலைமுதல் குடிபோம் பாரே! 287

நாகத்தைச் சுத்தி செய்து வில்லைகள் செய்து கொள்க. தாளகத்தையும் வங்க பற்பத்தையும் சமமாக எடுத்து உமிழ் நீரால் அரைத்து வில்லை மீது பூசிக் கொள்க. சுண்ணாம்பு சீலை சுற்றி சுண்ணாம்புக்குள் வைத்து முழப்புடத்தில் வைத்தெரிக்க பற்பமாகும். சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, இலவங்கம் இவற்றைச் சேர்த்து வெயிலில் வைத்துச் சூரணம் செய்து கொள்க. 488 மி.கி. எடுத்து தேனில் கலந்துண்ண தொண்ணூற்றாறு சேற்றும நோய்கள், வாதம் ஒன்பது, பித்தம் நாறபது, மேகம், சூலை, எட்டுவகைக் குட்டம், கடிவிடங்கள், பிறப்புறுப்பு எரிவு, குத்துவலி, குன்மம் ஆகிய நோய்கள் நீங்கும்.

தாமிர பற்பம்

பாரப்பா தாம்பூரம் பழச்சார் தன்னில்
பதறாதே பதினைந்து தரமே சாய்த்து
நேரப்பா லேசாகத் தகடு தட்டி
நினவாக நாகபற்பம் தாளகமும் கூட்டி
சாரப்பா வாய்நீரா லரைத்துக் கொண்டு
சமனாகத் தாம்பூரந் தன்றாப் பூசி
ஆரப்பா ரவியுலத்தி சுண்ணச் சிலை
அப்பனே ஏற்றிசுண் ணத்தில் வையே! 288

வைத்தப்பா கனபுடமாய்ப் போட்டெ டுக்க
வகையான தாம்பூரம் பற்ப மாகும்
கைத்தப்பா போகத்துக்கு வெகுசு ருக்காம்
காணப்பா அனுபான மறிந்து போடு
குத்தப்பா குன்மமெட்டு சூலைபதி னெட்டும்
குடிபோகும் திரிகடுகு தேனிற் கொள்ள
சித்தப்பா யிளையொடு யிரும லெல்லாம்
சிதறுமே வெள்ளியுட பற்பங் கேளே! 289

தாமிரத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் பதினைந்து முறை உருக்கிச் சாய்த்துத் தகடாகத் தட்டிக் கொள்க. நாகபற்பத்தையும்,

தாளகத்தையும் சேர்த்து உமிழ்நீரால் அரைத்துச் சமமாக தாமிரத்தின் மீது பூசி வெயிலில் உலர்த்தி சுண்ணச் சீலை சுற்றி சுண்ணத்தில் வைக்க வேண்டும். காற்றுப்புகாதவாறு 100 வறட்டியை வைத்து அடுக்கிப் புடம் போட தாமிரம் பற்பமாகும். அனுபானமறிந்து கொடுக்க எட்டு வகைக் குன்மம், பதினெட்டு வகைச் சூலை தீரும். திரிகடுகு சூரணத்தைப் பற்பத்துடன் கலந்து தேனில் கொள்ள ஈளை, இருமல் நீங்கும்.

வெங்கார பற்பம்

பாரப்பா வெங்காரம் சிலாசத்து தானும்
பாங்கான கலக்கொம்பு கல்னா றுந்தான்
சேரப்பா சமனாகப் பொடித்துக் கொண்டு
சிறப்பான பருத்திச மூல மெல்லாம்
சேரப்பா சுட்டதனைச் சாம்ப லாக்கி
நினவாகப் படியொன்று அளந்து கொண்டு
வாரப்பா நாலுபடி சலந்தான் விட்டு
வாகாகக் கலக்கியதை மூடி வையே! 290

வைத்தப்பா னாலாம்னாள் தெளிவி றுத்து
வாகாக முன்மருந்தில் விட்டு ஆட்டு
வைத்தப்பா னால்சாம மரைத்து பில்லை
கருவாக ரவியிலே உலரப் போடு
உத்தப்பா வோட்டிலிட்டு வோடு மூடி
உத்தமனே சிலைசுத்தி முழப்பு டத்தில்
நித்தப்பா நீறியே வெள்ளை யாகும்
நினவாக பின்னுமந்த நீரா லாட்டே! 291

ஆட்டயிலே சாரமது காசு போடு
அடங்காது சூடனது காசு போடு
நீட்டயிலே வீரமது காசு போடு
நினவாக பூனிறு காசு போடு

நாட்டயிலே நால்சாம மரைத்துக் கொண்டு
நலமாக ரவியுலர்த்தி வில்லை தட்டி
சூட்டயிலே சுண்ணாம்பு பொடியில் வைத்து
சுருக்காக முழப்புடம்நீ சூட்டி வாங்கே! 292

வாங்கியே கருத்தாக்கா லண்ட நீரால்
வளமாக அரைத்துவொரு புடமும் போட்டு
தாங்கியே வெண்மையது சங்கு போலாம்
தளமான லிங்கமது சுத்தி செய்து
பாங்கியே பற்பத்தில் பாதி லிங்கம்
பச்சையாய்ச் சேர்த்துநீ பொடியாய்ச் செய்து
தேங்கியே இளநீரில் பணந்தான் ரெண்டு
திறமாகக் கொடுத்துவரத் தீரும் நோய்கேள்! 293

கேளப்பா பெருவயிறு மகோத ரங்கள்
கிரிச்சனங்கள் சதையடைப்பு கல்ல டைப்பு
நாளப்பா நீர்க்குத்து நீரெரிவு.....
நாடாது கவிசையுட நீராம் பல்தான்
ஆரப்பா நீர்ச்சுரப்பு உப்பி சங்கள்
அணுகாது வயிற்றிலுள்ள நீர்க்கட் டும்போம்
தேரப்பா துள்ளிவிழல் நீற்றுக் கல்தான்
திருமே பவளத்தின் பற்பங் கேளே! 294

வெங்காரம், சிலாசத்து, மான் கலைக்கொம்பு, கல்நார் இவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்துக் கொள்க. பருத்தி சமூலத்தைச் சுட்டு சாம்பலாக்கி 1.3 லி. அளவு எடுத்து 5.2 லி. தண்ணீரை அதில் விட்டு கலக்கி மூடி வைத்துக் கொள்ளவும். பின் நான்காம் நாள் தெளிவினை இறுத்து மேற்கூறிய மருந்துடன் சேர்த்து பன்னிரெண்டு மணி நேரமரைத்து வில்லைகளாகச் செய்து வெயிலிலே காயவைத்துக் கொள்க. பின் ஓட்டிலிட்டு ஓட்டினை மூடி சீலை சுற்றி முழ அளவு புடத்தில் புடம் போட பற்பமாகும். அதனை முற்கூறிய நீரால் அரைக்கும் போது நவச்சாரம், சூடம், வீரம், பூநீறு

இவற்றை வகைக்கு 488 மி.கி. சேர்த்து பன்னிரெண்டு மணி நேரமரைத்து வில்லைகளாகச் செய்து வெயிலில் உலர்த்தி சுண்ணாம்புப் பொடியின் இடையில் வைத்து முழப்புடத்தில் புடம் போட வேண்டும். கருப்பாகவே இருந்ததென்றால் அண்ட நீரால் அரைத்து மறுபடியும் புடம் போட சங்கு போன்று வெண்மையாய் பற்பமாகும்.

லிங்கத்தைச் சுத்தி செய்து மேற்சொன்ன பற்பத்தில் பாதியளவு சேர்த்து 975 மி.கி. அளவு, இளநீரில் கலந்து கொடுக்க பெருவயிறு, மகோதரங்கள், கிரிச்சனங்கள், சதையடைப்பு, கல்லடைப்பு, நீர்க்குத்து, நீரெரிவு, கவிசை, நீராம்பல், நீர்ச் சுரப்பு, உப்பிசங்கள், நீர்க்கட்டு, நீரருகல் ஆகிய நோய்கள் தீரும்.

பவள பற்பம்

கேளப்பா பவளமது பலந்தா னொன்று
கெடியான பீங்கானில் நறுக்கிப் போட்டு
வேளப்பா பழச்சாறு விட்டு நீயும்
விருதான நாழிகைதா னறுப தானால்
நாளப்பா கழுவியதை எடுத்துக் கொண்டு
நலமான கற்பூர சிலாசித் துத்தான்
தாளப்பா சமனாகக் கல்வத் திட்டு
சார்வாக பிரண்டைச்சார் விட்டு ஆட்டே! 295

ஆட்டியே நால்சாமம் வில்லை தட்டி
அப்பனே ரவியுலர்த்தி வோட்டில் மூடி
நாட்டியே முழப்புடத்தில் நீறும் பாரு
நன்றாகப் பின்னுமந்த சாற்றா லாட்டி
காட்டியே ரவியுலர்த்தி புடத்தைப் போடு
கருவான புளியாரை, சாற்றா லாட்டி
நீட்டியே இருசாம மரைத்துக் கொண்டு
நினவாக புடம்போட பற்ப மாமே! 296

ஆமப்பா பணவிடை வெண்ணையிலே கொள்ள
அடங்காத மேகமெல்லா மகண்டு போகும்
வேமப்பா எலும்புருக்கி அத்தி மேகம்
வித்தான மதுமேகம் விட்டுப் போகும்
தாமப்பா தேனதிலே கொண்டா யானால்
சகலரண மேலூறல் தவறிப் போகும்
தாமப்பா வாய்வெல்லாம் கீழே னோக்கும்
தப்பாது மேகத்தின் தினவு போமே! 297

35 கி. பவளத்தைப் பீங்கானில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு இருபத்து நான்கு மணிநேரம் ஊறவைத் தெடுத்து, கற்பூர சிலாசத்தையும் அதே அளவு சேர்த்துக் கொள்ளவும். பின் கல்வத்தில் போட்டு பன்னிரெண்டு மணி நேரம் பிரண்டைச் சாற்றினால் அரைத்து மாத்திரை செய்து காயவைத்து ஓட்டில் வைத்து மூடி முழஅளவு விறகடுக்கிப் புடம்போட பற்பமாகும். அதனை மறுபடி பிரண்டைச் சாற்றினாலேயே அரைத்து வெயிலில் காயவைத்துப் புடம் போட வேண்டும். மீண்டும் அதனைப் புளியாரைச் சாற்றில் ஆறுமணிநேர மரைத்துப் புடம்போட பற்பமாகும். அதில் *488* மி.கி. அளவெடுத்து வெண்ணெயில் குழைத்துக் கொடுக்க மேகம், எலும்புருக்கி, எலும்புமேகம், மதுமேகம் தீரும். அதே அளவு தேனில் கலந்து கொடுக்க புண்களின் மேல்தோல் ஊறல், வாய்வு, மேகதினவு ஆகிய நோய்கள் போகும்.

சன்னித் தைலம்

போமப்பா சன்னியெல்லாம் கடலே புக்குங்
புகழான தயிலமொன்று சொல்லக் கேளு
நாமப்பா வேப்பெண்ணை புங்க எண்ணை
நலமான புண்ணையெண்ணை பசுவின் நெய்யும்
காமப்பா காட்டினா மணக்கு எண்ணை
கருவாகச் சமன்சுட்டி சட்டியிலே வாரு
ஆமப்பா முசுறுமுட்டை கால தாகும்
அப்பனே எண்ணைபடி கால தாமே! 298

காலான படிவிதம் சேர்த்துக் கொண்டு
காணப்பா குக்குடத்தின் முட்டை பத்து
மாலான மஞ்சளையுங் கூட விட்டு
மயங்காதே கடைச்சரக்கு சொல்லக் கேளு
சாலான சாதிலிங்க தீய முறுகல்
சமத்தான கெந்திரசம் பாசா ணந்தான்
ஆலான நாபியுடன் மிளகுதிப் பிலியும்
அழகான ஆனைத்திப் பிலியும் போடே! 299

போட்டப்பா லவங்கமொடு நேர்வா ளந்தான்
புகழான கழஞ்சினிரை சமனாய்க் கூட்டி
நாளப்பா கொடிவேலி கிஷாயத் தாலே
நலமாகச் சாமமொன்று அரைத்துக் கொண்டு
சாடப்பா எண்ணயிலே கரைத்து விட்டு
சதிராகக் கொதிக்கயிலே எருக்கம் பாலும்
கோடப்பா கொடிக்கள்ளி சதுரக் கள்ளி
குணமான யிலைக்கள்ளி பாலுங் கூட்டே! 300

கூட்டியே திருகுகள்ளி னானால் கள்ளி
கூசாதே படர்ந்திருந்த முள்ளு கள்ளி
சாடவே பால்வகைதா னுழக்கு மாகும்
சாதகமாய் எண்ணையிலே விட்டுக் கிண்டி
மூடவே கமலம்போல் தீயை மூட்டு
முதிராமல் கொதிக்கயிலே கஸ்தூரி கேளு
சாடவே அஞ்சுபணம் முலைப்பா லாலே
தானரைத்துக் கரைத்துஎண் ணையிலே வாரே! 301

வாரப்பா முலைப்பால்தான் படிகால் விதம்
வளமான தேசிப்பால் படிகால் விதம்
சேரப்பா காட்டெருமைப் பால்ப லந்தான்
திறமாக எண்ணையிலே விட்டுக் காய்ச்சி
ஆரப்பா ஆற்றலரி யிலைனால் போடு
அப்பனே வெள்ளுள்ளி அரைத்துப் போடு

முறியே மெழுகுபத மான வாறே
முன்னவனைப் பூசித்து வடித்தி டாயே! 302

வடித்திட்ட தயிலத்தைப் பரணிதனி லடைத்து
வாகாக கோரோசனை கழஞ்சிபொடித் திட்டு
பிடித்திட்ட சன்னிவகை பதிமூன் றுக்கும்
பேரான கரண்டிநிறை யுள்ளே கொள்ளு
துடித்திட்ட சன்னியெல்லாம் துலைந்து போகும்
துடியிசிவு குத்து வாலை போட
நடித்திட்ட நரம்புவெல்லாம் மிருது வாகும்
நலமில்லா யிசிவெல்லாம் நளின மாமே! 303

சன்னி அனைத்தும் நீங்குவதற்கான தயிலத்தைக் கூறுகிறேன். வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், புன்னையெண்ணெய், பசுநெய், காட்டாமணக் கெண்ணெய் இவற்றைச் சமமாக எடுத்துச் சட்டியிலே ஊற்றிக் கொள்ளவும். இதனுடன் முசுறு முட்டை 325 கி., நல்லெண்ணெய் 325 மி.லி., கோழி முட்டை 10, மஞ்சள் இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

இக்கலவையுடன் சாதிலிங்கம், தீமுறுகற்பாடாணம், கெந்திரசபாடாணம், நாபி, மிளகு, திப்பிலி, ஆனைத்திப்பிலி, இலவங்கம், நேர்வாளம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் கொடிவேலிக் குடிநீரில் மூன்றுமணி நேரமரைத்துக் கலந்து கொள்ளவும். அதனைக் கொதிக்க வைக்கும் போது எருக்கம்பால், கொடிக்கள்ளி, சதுரக்கள்ளி இலைக்கள்ளி இவற்றின் பால், திருகுகள்ளி, நானாற்கள்ளி, முள்ளுகள்ளி இவற்றின் பால் வகைக்கு 325 மி.லி. எடுத்துக் கலந்து கொள்ளவும். இரண்டு விறகினால் எரித்துக் கொதிக்கும் போது 2½ கி. கஸ்தூரியைத் தாய்ப்பால் விட்டு அரைத்து எண்ணெயில் கரைத்துக் கொள்ளவும், பின் தாய்ப்பால், கழுதைப் பால், வகைக்கு 325 மி.லி., காட்டெருமைப்பால் 35 கி. ஆகியவற்றை எண்ணெயில் விடவும். அதில் ஆற்றலரியின் நான்கு இலைகள், அரைத்த வெள்ளுள்ளியின் விழுது இவற்றைச்

சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்துப் பரணில் பத்திரப் படுத்திக் கொள்ளவும். அதனுடன் 5 கி. கோரோசனையைப் பொடித்துப் போடவும். பதிமூன்று வகை சன்னிகளுக்கு 16 மி.லி. அளவு எண்ணெயைக் கொடுக்க சன்னி அனைத்தும் நீங்கும். இசிவு, குத்து, நீங்கி நரம்புகளெல்லாம் மென்மையாகும்.

வாத சுரத்திற்குக் குடிநீர்

ஆமப்பா சுரமென்ற மறுபத்து னாலும்
அப்பனே வாதசுரம் முப்பத்தி ரண்டும்
போமப்பா பித்தசுரம் யிருபத் தொன்றும்
புகழான சேட்டுமசுரம் பதினொன் றப்பா
நாமப்பா வகைமூன்றும் அறுபத்தி னாலும்
நலமான வாதசுரம் கியாழம் கேளு
வேமப்பா சிறுதேக்கு சுக்கு திப்பிலி
நலமான கோஷ்டமொடு செவியம் தானே! 304

தானென்ற யெருக்கம்வேர் திப்பிலி மூலம்
தலமான சித்திரமூலம் சங்கு மூலம்
வேனென்ற வெள்ளருகு நிலவேம் போடு
விருதான முருங்கைவேர் கழற்சி வேரும்
கானென்ற கண்டங்கத்திரி பேரா முட்டி
கருவான சிற்றரத்தை மாவிலங்க வேரும்
தேனென்ற சிறுகாஞ்சோறி பேர ரத்தை
தெளிவான சதகுப்பை விஷ்ணுகிரந்தி பாரே! 305

பாரப்பா இந்தவகை இருபத் தொன்றும்
பலவிதந் தூக்கியே இடித்து நய்ய
சேரப்பா யிருபத்தோர் பங்கு பண்ணி
திறமாக வொருபங்கு சட்டியி லிட்டு
வாரப்பா மூன்றுசேர் சலந்தான் விட்டு
வளமாக நாழிகைதான் முப்ப தானால்

ஆரப்பா அடுப்பேற்றி கால்சே ரானால்
அப்பனே வடிகொண்டு பீங்கானில் வாரே! 306

வார்த்தப்பா ராட்சதன் குளிகை.....
வளமாகப் பணமொன்று பொடித்துப் போட்டு
தேத்தப்பா தேனதிலே காசு குத்தி
திறமாக யிருநேரங் கொடுத்தா யானால்
பார்த்தப்பா வாதசுரம் நடுக்கு வாதம்
பகருகின்ற னாலாமுறை பறந்து போகும்
காத்தப்பா கடுப்புவலி கடலே புக்கும்
கருவான பித்தசுரம் கியாழம் கேளே! 307

சுரவகைகள் அறுபத்து நான்கு, வாதசுர வகைகள் முப்பத்திரண்டு, பித்த வகைகள் இருபத்தொன்று, சிலேத்தும சுரம் பதினொன்று ஆக வாத, பித்த சிலேத்தும சுர வகைகள் அறுபத்துநான்கு ஆகும். அதில் வாத சுரத்திற்கான குடிநீர் செய்முறை வருமாறு.

சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, கோஷ்டம், செவியம், எருக்கு, திப்பிலிமூலம், சித்திரமூலம், சங்கு மூலம், வெள்ளறுகு, நிலவேம்பு, முருங்கை, கழற்சி, கண்டங்கத்திரி, பேராமுட்டி, சிற்றரத்தை, மாவிலிங்கம், சிறுகாஞ்சோறி, பேரரத்தை, சதகுப்பை, விஷ்ணுகிரந்தி ஆகிய இருபத்தொரு மூலிகை களின் வேர்களைச் சம அளவெடுத்து இடித்து இருபத்தொரு பங்குகளாகப் பிரித்துக் கொள்ளவும். அதில் ஒருபங்கைச் சட்டியில் போட்டு 840 மி.லி. தண்ணீர் விட்டு பன்னிரெண்டு மணிநேரம் 70 மி.லி. யாகச் சுண்ட வைத்து பீங்கானில் வடித்து வைக்கவும். ராட்சதன் குளிகையை 488 மி.கி. எடுத்துப் பொடித்து மேற்குறிப்பிட்ட குடிநீரில் போடவும். தேனைக் காசளவு ஊற்றி காலை, மாலை இரு நேரமும் அதனைக் கொடுக்க வாதசுரம், நான்காமுறைக்காய்ச்சல், நடுக்கு வாதம், கடுப்பு வலி ஆகிய நோய் தீரும்.

பித்த சுரத்துக்குக் குடிநீர்

கேளப்பா பித்தசுர மிருபத் தொன்றும்
கெடியாகத் தீருமடா கியாழம் கேளு
நாளப்பா விலாமிச்சை சிறுகாஞ் சோறி
நலமான வில்வவேர் பாதிரியின் வேர்
ஆளப்பா அதிமதுரம் செவ்வல்லி கோஷ்டம்
அப்பனே நன்னாரி நிலயா வாரை
சேரப்பா சிரகமும் கொத்த மல்லி
திறமான தும்பைவேர் பேரிச்சங் காயே! 308

காயோடு ஆனைத்திப் பிலியு மப்பா
கருவான நெல்லிமுள்ளி சுக்கோ டொக்க
பாயோடு பதினஞ்சு பலவிதந் தூக்கி
பக்குவமா யிடித்துநய்ய பங்கு பண்ணி
வாயோடு சட்டியிலே பதினாறி லொன்று
வளமாக முன்போலே சேர்த்த பின்பு
சேயோடு சிலமதிலே மூன்று சேர்தான்
திறமாக விட்டுமே அடுப்பி லேற்றே! 309

ஏத்தப்பா னாழிகைதான் முப்ப தானால்
இறக்கப்பா கால்சேர்தா னிறுத்துக் கொண்டு
சேத்தப்பா தேனதிலே கழஞ்சி கூட்டி
திறமான கோரோசனைக் குளிகை யொன்று
யிழைத்ததனை யிருநேரங் கொள்ள.....
பதறாமல் பித்தசுர மெல்லாம் போகும்
காத்தப்பா கண்காணா தோடிப் போகும்
கருவான னாவறட்சி பெனத்தல் போமே! 310

போமப்பா நாக்கிலுள்ள முட்க ளெல்லாம்
பொறுக்காத நீர்த்தாகம் போகும் சொன்னேன்
நாமப்பா உடம்பெரிவு காந்த லெல்லாம்
நடுநடுங்கி யோடுமடா வாயூற லெல்லாம்

சேமப்பா சிரசிலுள்ள பித்த மெல்லாம்
சிக்கிரத்தி லிறங்கிவிடும் சிரசிற் பாரம்போம்
ஆமப்பா சிலேட்டும சுரம் பதினொன் றுந்தான்
அப்பனே திருதற்கு கிஷாயங் கேளே! 311

பித்தசுரம் இருபத்தொன்றும் தீருவதற்குரிய குடிநீர் வருமாறு. விலாமிச்சை, சிறுகாஞ்சொறி, வில்வ வேர், பாதிரியின் வேர், அதிமதுரம், செவ்வல்லி, கோஷ்டம், நன்னாரி, நிலாவாரை, சீரகம், கொத்துமல்லி, தும்பைவேர், பேரீச்சங்காய், ஆனைத்திப்பிலி, நெல்லிமுள்ளி, சுக்கு ஆகிய சரக்குகளை வகைக்கு 525 கி. எடுத்திடித்து பதினாறு பகுதிகளாகப் பிரித்துக் கொள்க. ஒரு பகுதியைச் சட்டியிலிட்டு 840 மி.லி. தண்ணீர் விட்டு பன்னிரெண்டு மணிநேரம் எரித்து 70 மி.லி.யாகச் சுண்ட வைத்து இறுத்துக் கொள்க. அதில் 5 கி. தேன், சேர்த்து கோரோசினைக் குளிகை ஒன்றினை இழைத்து இரண்டு நேரமுங் கொடுக்க பித்த சுரம் அனைத்தும் தீரும். நாக்கு வறட்சி, பிதற்றல், நீர்த்தாகம், உடலெரிவு, காந்தல், வாயூறல், நாமுள் ஆகிய நோய்கள் தீரும். தலையேறிய பித்தம் நீங்கி தலைபாரம் போகும்.

சிலேட்டும சுரம் தீரக் குடிநீர்

கேளப்பா சுக்கு திப்பிலி கிராம்பு
*கெடியான *துலாலெப்பை அக்கிரா காரம்*
காளப்பா கருமுள்ளி கடுக்கா யோடு
கனமான ஆடாதோடை கற்பூர வள்ளி
நாளப்பா முந்திரிகை கண்டங் கத்திரி
நலமான பதினொன்று வகையாய்க் கேளு
ஆளப்பா சரிதம் நிறுத்துக் கொண்டு
அப்பனே யிடித்துநய்ய பங்கு கேளே! 312

பங்கென்ன பதினஞ்சு பங்க தாகப்
பக்குவமா யொருபங்கு சட்டியி லிட்டு

பங்கென்ன ரண்டுபடி சலந்தான் வாரு
பதறாதே முப்பதுனாழிகை யூறித் தானால்
பங்கென்ன அடுப்பேற்றி கமல மாக
பதறாமல் கால்சேர்தா னிறுத்துக் கொண்டு
பங்கென்ன தேனதிலே கழஞ்சி குத்தி
பக்குவமாஞ் சந்ரோதயந் பணந்தான் போடே! 313

போடப்பா கோரோசனை குளிகை யொன்று
புகழாகக் கலக்கியே யிருநேரங் கொள்ள
நாடப்பா கபமெல்லாம் கீழே சாடும்
நலமான சேட்டுமமும் நாடா தோடும்
சேடப்பா யிருமலெல்லாம் சணத்தில் தீரும்
செறுகடுப்பு குத்துவலி சேரா தோடும்
காட்டப்பா வலியிசிவு கலங்கி யோடும்
கருவான சேதியொன்று சொல்லக் கேளே! 314

சுக்கு, திப்பிலி, கிராம்பு, அக்கிராகாரம், துலாலெப்பை, கருமுள்ளி, கடுக்காய், ஆடாதோடை, கற்பூரவள்ளி, முந்திரிகை, கண்டங்கத்திரி இவற்றை வகைக்கு 35 கி. எடுத்திடித்துப் பதினைந்து பகுதிகளாகப் பிரித்துக் கொள்க. ஒரு பங்கைச் சட்டியிலிட்டு 2.6 லி. நீரைவிட்டுக் காய்ச்சி 70 மி.லி. யாகச் சுண்ட வைத்து 5 கி. தேனைச் சேர்த்து 488 மி.கி. சந்திரோ தயத்தையும் கலந்து கோரோசனைக் குளிகையை இழைத்து அக்குடிநீரை காலை, மாலை இருநேரமும் கொடுக்க கபம், சிலேத்துமம், இருமல், குத்துவலி, இசிவுவலி ஆகிய நோய்கள் தீரும்.

சன்னி, ஏழுதோடம்

கேளப்பா சன்னிபதி மூன்றுக் குந்தான்
கெடியான நாமமது சொல்லக் கேளு
நாளப்பா தாந்திரீகம் அந்திகரண மாகும்
நலமான சீதாங்க முறிக்கி தாகம்

வேளப்பா சித்திரவிப் பிரம மோடு
விதமான கண்டகுச்சம் கரணி யாசம்
ஆளப்பா விக்கினாதம் போக்க நேத்திரம்
அருளான பிரலாபம் மறத்தாட்டி யாமே! 315

ஆமப்பா சிவசத்தி சோதி யோடு
அப்பனே சன்னிவகை பதிமூன் றுக்கும்
வேமப்பா தோடவகை யேழுங் கேளு
விருதான கிஷ....ரெத்த தோஷம்
நாமப்பா நீர்த்தோடம் அத்தி தோடம்
நலமான கெடிலதோடம் வல்லி தோடம்
சாமப்பா சயரோக தோடத் தோடு
சதிரான தோடவகை யேழுந் தானே! 316

தானென்ற சன்னிவகை பதிமூன் றுக்கும்
தளமான தோடவகை யேழுந் தானும்
தானென்ற மருந்துவகை முன்னே சொன்னோம்
கருவான வயித்தியத்தில் மனதை யுன்னி
வானென்ற வயித்தியத்தைப் பார்த்தா யானால்
மைந்தனே தன்வந்திரிக் கொப்பாம் பாரே! 317

பதிமூன்று வகைச் சன்னிகளுக்குள்ள பெயர்களாவது அந்தகம், சீதாங்கம், தாந்திரிகம், சித்திரவிப்பிரமம், முறுக்கிதாபம், கண்டகுச்சம், கரணியாசம், விக்கினாதம், புக்னநேத்திரம், பிரலாபம், மறத்தாட்டி, சிவசத்தி, சோதி ஆகிய பதிமூன்று வகை சன்னிக்கும், இரத்ததோடம், நீர்த்தோடம், அத்திதோடம், கெடிலதோடம், வல்லிதோடம், சயரோக தோடம் ஆகிய ஏழு வகைகளுக்கும் மருந்துகள் முன்னரே கூறியுள்ளோம்.

செந்தூரம்

பாரப்பா செந்தூரஞ் சொல்லக் கேளு
பண்பான கெந்திஅரைப் பலந்தான் வாங்கி

நேரப்பா ஒட்டிலிட்டு உருகும் போது
நேரான ரசம்பலந்தான் னாலு விட்டு
சாரப்பா வருத்தக்கால் பற்பம் போலாம்
சாதகமாய்ப் புதுசெங்கல் பாக்குபோ லுடைத்து
வாரப்பா பாண்டத்திற் போட்டுப் பின்பு
வளமான கறியுப்பு சேர்தான் வாங்கே! 318

வாங்கியே முன்பற்பம் கல்லுப்பு கலந்து
வாகாக பாண்டத்தி லதுவிரியும்...
தாங்கியே மேல்பானை கவிழ்த்து மூடி
தப்பாமல் எழுசீலை மண்ணுஞ் செய்து
சாங்கியே காயவைத்து அடுப்பி லேற்றி
சாதமாய் கமலகாடாக் கினியி னாலே
தேங்கியே நால்சாமம் எரியிட் டாக்கால்
திறமாக மேல்தூரில் பற்ப மாகும்! 319

ஆமப்பா சூதபற்பம் பலந்தா னாலு
அப்பனே கெந்திபலம் அரையளவு கூட்டி
நாமப்பா அரிதாரம் பலந்தான் தூக்கி
நலமாகப் பொடிசெய்து குப்பியிலே பாதி
வேமப்பா போட்டதிலே எழுசீலை செய்து
விருதான ரவியிலே காயப் போட்டு
தாமப்பா தாழிக்குள் னாலுவிரல் மணல்தான்
தப்பாமல் பரப்பிமேலே குப்பி வையே! 320

வைத்தப்பா கழுத்தளவு மணலைக் கொட்டி
வாகாக முத்தியும் சாமம் னாலு
கைத்தப்பா எரியிட்டு ஆறப் பார்த்தால்
தப்பாது தேங்காய்போல் செந்தூர மாகும்
நய்த்தப்பா உடைத்தெடுத்துப் பதனம் பண்ணு
நலமான வியாதியெல்லாம் நாடா தோடும்

அய்த்தப்பா செந்தூ ரம் பலந்தா னொன்று
அப்பனே முன்பற்பம் பலந்தா னாலே! 321

நாலான கெந்திபலம் அரைதான் போட்டு
நலமான சாரங்கால் பலமு மாகும்
காலான கல்வத்தில் பொடித்து நீயும்
கசகாமல் குப்பிக்குள் அரையாய்ப் போட்டு
செயலான சீலை ஏழுஞ் செய்து
திறமான வாய்க்குள் செங்கல் தேய்த்துப்
வாலான சீலையும் செய்து போட்டு
மைந்தனே கையிலப்பி ஏற்றி டாயே! 322

ஏத்தியே நால்சாமம் முத்தீ யிட்டு
எடுத்தப்பா செந்தூர மருணன் போலாம்
பாத்தப்பா யிப்படிதான் பத்துமுறை செய்து
பாங்கான செந்தூர மெடுத்துக் கொண்டு
தேத்தியே செந்தூரம் பலந்தா னாலு
திறமான பதுமமது பலந்தா னாலு
ஆத்தியே கெந்தியது பலந்தான் ரெண்டு
அப்பனே சாரமது பலந்தா னாமே! 323

ஆமப்பா சிலைகால்தான் லிங்கம் கால்தான்
அப்பனே கல்வத்தில் பொடித்துக் கொண்டு
நாமப்பா செம்பரத்தம் பூச்சாற் றாலே
நலமாக நால்சாமம் அரைத்துக் கொண்டு
தாமப்பா பூவரசம்பூ சாமம் னாலு
தப்பாமல் தக்கினியும் பழச்சாற் றாலே
சாமப்பா யிருசாம மாட்டிக் கொண்டு
சமத்தாக பொற்கையான் சாறு கேளே! 324

கேளப்பா சாமம்ரெண்டு ஆட்டிக் கொண்டு
கெடியான ரேக்கதிலே பலமும் போட்டு

நாளப்பா அரைத்துலத்தி பொடியாய்ச் செய்து
நலமான் குப்பியிலே அரைதான் போடு
வேளப்பா சீலைமண் ணேழுஞ் செய்து
வெகுசுருக்காய் காலாக்கி செங்கல்லது தேய்த்துப்போடு
ஆளப்பா வாய்க்குமந்த சீலை செய்து
அப்பனே வாலுகையில் ஏத்தி ஆட்டே! 325

ஆட்டப்பா சாமம்னால் தீப மாக
அப்பனே சாமம் கமல வன்னி
மூட்டப்பா சாமம்னால் காடாக் கினிதான்
சாமமெட்டு முதண்திற வாணிபூசை செய்து
காட்டப்பா ஆறினபின் னெடுத்துப் பாரு
கதிர்போலே செந்தூரம் கண்டுகொள் ளாது
நீட்டப்பா லோகத்தில் நூற்றுக் கொன்று
நிலைக்குமடா வர்ணமது பத்து மாமே! 326

பத்தாகும் தேகத்தில் குன்றியிடை தேனில்
பக்குவமாய் வருஷமொன்று கொண்டா யானால்
வித்தாகும் விந்து கீழ்னோக் காது
விட்டுவிட்டு சரீரமது வாசி கட்டும்
அத்தான பெண்களுட னனுபோ கித்தால்
அப்பனே நூறுபெண்கள் தோற்றுப் போவார்
சித்தான தேகமது சிவந்து போகும்
தேகமது யிறுகிவயிரம் போலாகும் பாரே! 327

தன்வந்திரி வைத்தியத்திற்கொப்பான மருந்திலுள்ள செந்தூரத்தின் செய்முறை வருமாறு. கெந்தி 17½ கி. எடுத்து ஓட்டில் போட்டு உருகும் போது 140 கி. இரசத்தைப் போட்டு வறுக்க பற்பமாகும். புதியதான செங்கல்லைப் பாக்கு போலுடைத்து பாத்திரத்தினுள் போடுக. 280 கி. கறியுப்பையும் முன் கூறிய பற்பத்தையும் அதில் சேர்த்துப் போட்டு மற்றொரு

பானையை மேலே கவிழ்த்து ஏழுசீலை மண் செய்து காய வைத்து இரண்டு அல்லது மூன்று விறகினால் பன்னிரெண்டு மணிநேரமெரித்துக் கொள்ள மேல் பாத்திரத்தில் பற்பம் வந்து தங்கி நிற்கும்.

சூதபற்பம் 140 கி., கெந்தி 17½ கி., அரிதாரம் 35 கி. எடுத்துப் பொடி செய்து குப்பியில் பாதியளவு போட்டு ஏழுசீலை மண் செய்து வெயிலில் காய வைத்து, தாழிக்குள் நான்குவிரல் மணலைப் பரப்பி, அதனுள் குப்பியை வைக்கவும். கழுத்தளவு மணலைக் கொட்டி ஒரு விறகு, இருவிறகு, மூன்று விறகு கொண்டு பன்னிரெண்டு மணி நேரம் எரிக்க வேண்டும். ஆறியபின் எடுத்துப் பார்க்க தேங்காயின் ஓட்டைப் போல் செந்தூரமாகும். அதனை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். இதனை அளவறிந்து உட்கொள்ள பல வியாதிகள் தீரும்.

இச்செந்தூரத்தை 35 கி., சூதபற்பம் 140 கி., கெந்தகம் 17 கி., நவச்சாரம் 9 கி. எடுத்துப் பொடித்துக் கல்வத்தில் போட்டு ஏழுசீலை மண் செய்து அதில் செங்கல்லைத் தேய்த்து விடவும். ஒன்று, இரண்டு, மூன்று விறகுகளால் பன்னிரெண்டுமணிநேரம் எரியிட்டெடுக்கச் செந்தூரமாகும். இவ்வாறு பத்துமுறை எரிக்கச் செந்தூரமாகும்.

இச்செந்தூரத்தை 140 கி., தாமரை 140 கி., கெந்தி 70 கி. நவச்சாரம் 35 கி. எடுத்துக் கொள்க. மனோசிலை, லிங்கம் இவையிரண்டையும் வகைக்கு 9 கி. எடுத்துப் பொடித்து செம்பரத்தம் பூவின் சாற்றில் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்துக் கொள்ளவும். மீண்டும் பூவரசம்பூச் சாற்றில் 12 மணி நேரம் அரைத்துப் பின் எலுமிச்சம் பழச்சாற்றில் ஆறுமணி நேரமும், பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் ஆறுமணி நேரமும் அரைத்து, 35 கி. தங்கத் தகடைப் போட்டு அரைத்துக் காயவைத்துப் பொடிசெய்து குப்பியிலே பாதியைப்

போடவும். சீலை மண் ஏழு செய்து செங்கல்லைத் தேய்த்துப் போடுக. வாலுகையில் ஏற்றி வைத்துப் பின் ஒரு விறகால் பன்னிரெண்டு மணி நேரமும், இருவிறகால் மூன்று மணி நேரமும், மூன்றுவிறகால் பன்னிரெண்டு மணி நேரமும் எரித்து ஆற வைக்கச் செந்தூரமாகும்.

இதனை 130 மி.கி. அளவெடுத்து தேனில் ஒரு வருடம் கொள்ள விந்து வீணாகாது. வன்மையுறும், உடல் பலமாகும். நூறு பெண்கள் தோற்கும் அளவுக்குத் தாது பலம் கொள்வர். உடல் சிவந்து பலமாகி வைரம் பாய்ந்ததுக் கொப்பாவர்.

காளகண்ட மேக நாராயணன்

காரப்பா காளகண்ட மேக நாராயணன்
பரிவான செந்தூரஞ் சொல்லக் கேளு
சேரப்பா ரசபற்பம் பலந்தா னெட்டு
திறமான கெந்தகமோ பலந்தா னப்பா
பாரப்பா தாளிசமோ பலந்தா னொன்று
வளமான சிலமரை செந்தூர மரைதான்
ஆரப்பா லிங்கங் கால்தான் கொண்டு
அப்பனே காரியம் பலந்தா னொன்றே! 328

ஒன்றான நாகமரை வங்கங் கால்தான்
வுத்தமனே செம்பதுவுங் கழஞ்சி ரெண்டு
நன்றான தங்கமது கழஞ்சி யொன்று
நாட்டப்பா னாபியொன்று பலமு ந்தான்
குன்றாமல் பொடிசெய்து அரைப்புக் கேளு
கூறான் பொற்கையான் சாமம் நாலு
சென்றான குமரிப்பூச் சாறு நாலு
சிறுமுருக்கம் பூச்சாறு சாமம் ரெண்டே! 329

ரெண்டான பாதிரிப்பூச் சாறுசாமம் ரெண்டு
நேராகும் பழச்சாற்றில் செம்பரத்தம் பூப்போட்டு
வென்றான வெளுத்தபின்பு யெடுத்துப் போட்டு
விருதாக யிருசாமம் எடுத்து விட்டு
சென்றாக ரவியுலத்தி பொடிதான் செய்து
சிறப்பாகக் குப்பிக்குச் சீலை செய்து
விண்டப்பா...வுக்கு அரைதான் போட்டு
விருதாக வாய்மூடி சீலை செய்யே! 330

செய்தப்பா வாலுகையி லடுப்பி லேற்றி
திறமாக தீபாக்கினி யெட்டு சாமம்
செய்தப்பா கமலமது யெட்டு சாமம்
தீர்க்கமாய் காலாக்கினியாய் சாமம் எட்டு
செய்தப்பா தியாத்தி யீசா னத்தில்
சிறுகறியு மதுவோடு பூசை பண்ணி
செய்தப்பா குப்பிதனை வாங்கிப் பாரு
தீர்க்கமாய் கருஞ்சிவப்பாம் செந்தூர மாமே! 331

ஆமப்பா பணவிடைதான் தேனில் கொள்ள
அனுகாது குன்மமெட்டும் பிலிகைதா னாலும்
போமப்பா பெருவயிறு மகோத ரங்கள்
பொல்லாத சதைவிம்மல் நீர ருக்கல்
காமப்பா விரைத்ததொரு சோகை பாண்டு
கனமாக நீர்க்குத்தல் காணா தோடும்
சாமப்பா அக்கினியா மந்த மெல்லாம்
சண்ணுண்டு போகுமடா சேதி கேளே! 332

இரசபற்பம் 280 கி., கெந்தகம் *35 கி.,* தாளிசம் *35* கி. மனோசிலை *18* கி. லிங்கம் *9* கி., காரீயம் *35* கி., நாகம் *17* கி. வங்கம் *9* கி., செம்பு *10* கி., தங்கம் *5* கி., நாபி *35* கி. எடுத்து முறைப்படி சுத்தி செய்து பொடித்துக் கெள்ளவும். பொற்றலைக்

கையாந்தகரைச் சாற்றாலும் கற்றாழைப் பூச்சாற்றாலும் பன்னிரெண்டு மணி நேரமரைத்து முருக்கம் பூச்சாற்றாலும் பாதிரிப் பூச்சாற்றாலும் ஆறுமணி நேரமரைத்துக் கொள்ளவும். எலுமிச்சம் பழச்சாற்றில் செம்பரத்தம் பூவினைப் போட்டு அது வெண்மையாய் மாறின பிறகு எடுத்து அனைத்தையும் வெயிலில் வைத்துலர்த்திச் சூரணம் செய்து கொள்ளவும். அனைத்தையும் குப்பிக்குள் வைத்து சீலை மண் செய்து வாலுகா இயந்திரத்தில் அடுப்பிலேற்றி ஒரு விறகால் இரு விறகால், மூவிறகால் முறையே தனித்தனியே இருபத்து நான்கு மணி நேரம் எரித்துப் பூசை செய்து எடுத்துப் பார்க்க செந்தூரமாகியிருக்கும். அதில் 488 மி.கி. எடுத்துத் தேனில் கலந்து உட்கொள்ள எட்டு வகைக் குன்மம், நான்கு வகைப் பீலிகை, பெருவயிறு, மகோதரங்கள், நீர்ச்சுருக்கு, சோகை, பாண்டு, நீர்க்குத்தல், மந்தம் ஆகிய நோய்கள் தீரும்.

இரசலோக செந்தூரம்

சேதியொன்று சொல்லுகிறேன் புலத்தியரே அய்யா
திறமான ரசலோக செந்தூ ரந்தான்
ஆதியென்ற சூதபற்பம் பலந்தான் ரெண்டு
அப்பனே லோகமொன்று காந்தமது அரைதான்கூட்டி
வாதியென்ற லிங்கமரை வெண்கார மரைதான்
வளமான சாரங்கால் னாவிக் கால்தான்
காதியென்ற கெந்தினால் செந்தூரங் கால்தான்
கனமாகப் பொடிசெய்து அரைப்புக் கேளே! 333

கேளப்பா பழச்சாற்றில் சாமம் னாலு
கெடியான பொற்கையான் சாமம் ரெண்டு
நாளப்பா சிறுபுடலக்கால் சாமம் ரெண்டு
நலமான குமரிப்பூ சாமம் ரெண்டு

நாளப்பா செம்முள்ளி சாமம் ரெண்டு
தளமாக அரைத்துவில்லை ரவியில் போட்டு
வாளப்பா பொடிசெய்து புடத்துக் கேத்தி
விதமான வாய்மூடி வாலுகையில் வையே! 334

வைத்தப்பா அடுப்பேற்றி எட்டு சாமம்
வாகாக தீபாக்கினி கமலங் கேளு
சத்தப்பா சாமமட்டும் எரித்துக் கொண்டு
தளமான காடாக்கினி சாம மெட்டு
....ஆறவிட்டு அடைத்து வாங்கு
விருதாகச் செங்கதி ராயிக் காணும்
பத்தப்பா செய்துபணந் தேனி லுண்ண
பறக்குமடா காமாலை பாண்டு தானே! 335

தானென்ற பித்தநோய் தலைகெட் டோடும்
தப்பாது வாதமென்ற தெண்ப தும்போம்
தானென்ற...யெல்லாம் நாடா தோடும்
நலமான வாயுவென்ற தெல்லாந் திரும்
கானென்ற தலைவியாதி யெல்லாம் திரும்
கடல்புக்கும் சூலைபதி னெட்டுந் திரும்
மானென்ற தேனதிலே பத்துநாள் கொள்ள
மதுமேகம் திருமடா யின்னங் கேளே! 336

சூதம் 70 கி., இரும்பு 35 கி., காந்தம், லிங்கம், வெண்காரம், வகைக்கு 18 கி., நவச்சாரம், நாவி வகைக்கு 9 கி., கெந்தகம் 140 கி., செந்தூரம் 9 கி. எடுத்து முறைப்படி சுத்தி செய்து பொடித்துக் கொள்க. எலுமிச்சம் பழச்சாற்றால் பன்னிரெண்டு மணிநேரமும் பொற்றலைக் கையாந்தகரைச்சாற்றாலும் சிறுபுள்ளடியின் சாற்றாலும், கற்றாழைப் பூவின் சாற்றாலும், செம்முள்ளியின் சாற்றாலும், ஆறுமணி நேரம் அரைத்து வில்லைகளாகத் தட்டி வெயிலில் உலரவைத்துக் கொள்க.

பின் அதனைப் பொடித்து சீலை மண்ணால் வாயினை மூடி வாலுகையில் வைத்து அடுப்பேற்றி ஒன்று, இரண்டு, மூன்று விறகுகளால் முறையே இருபத்து நான்கு மணிநேரம் எரித்து ஆறவைத்து எடுத்துக்கொள்ள செந்தூரமாய் இருக்கும். அதனை 488 மி.கி. எடுத்துத் தேனில் கொள்ள காமாலை, பாண்டு, பித்த நோய்கள், வாதம் எண்பது வகை, பலவகை வாயுக்கள், தலை நோய்கள், பதினெட்டு வகைச் சூலை தீரும். மதுமேகத்திற்கு இச்செந்தூரத்தைத் தேனில் பத்து நாட்கள் கொள்ள குணமாகும்.

இரச கற்பூரம்

கேளப்பா இரசகற்பூரஞ் சொல்லக் கேளு
கிருபையாய்ச் சுத்தரசம் சுத்தி செய்து
நாளடா கல்லுப்பைக் குகைபோல் பண்ணி
நலமான ரவியிலே காயப் போட்டு
தேளடா சட்டிக்கு ளுப்பைப் போட்டு
திறமாக மேல்சட்டி கொண்டு மூடி
தாளப்பா ஏழுசீலை மண்ணுஞ் செய்து
தளமாக ரவியிலே காயப் போடே! 337

போட்டப்பா அடுப்பேற்றி கமல மாக
புகழான நால்சாமம் எரித்தா யானால்
நீட்டப்பா தேங்காய்போல் இறுகி நிற்கும்
நிசமாக அதையெடுத்து தூக்கிக் கொண்டு
காட்டப்பா பால்நாலு பீங்கா னாறுக்குள்
கருவான வெற்றிலையின் சாற்றில் விட்டு
ஆட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு
அப்பனே அஞ்சுதிரம் மணிச்சார் விட்டே! 338

விட்டப்பா ரவியிலே உலர்ந்த பின்பு
விதமாகப் பொடிபண்ணி குப்பிக் கிட்டு

விட்டப்பா அரைவாசி மட்டும் போட
விளங்கியே ஏழுசீலை மண்ணுஞ் செய்து
விட்டப்பா வாலுகையில் வைத்துக் கொண்டு
எண்சாமம் முத்தியிட்டு எரித்துப் பாரு
விட்டப்பா ஆறினபின் னெடுத்துப்பாரு
விருதான பூரமது கொள்ளே கொள்ளே! 339

கொள்ளப்பா நாலுபல மெடுத்துக் கொண்டு
குறிப்பான.....னாலு தூக்கி
நாளப்பா பொடிசெய்து வெற்றிலையின் சாற்றில்
நலமாக விட்டதிலே ரவியு லர்த்தி
விள்ளப்பா மெருவிலே அரைவாசி போட்டு
விருதான வாலுகையி லடுப்பி லேற்றி
கள்ளப்பா ததியும் சாம மெட்டு
கசகாமல் எரித்தாறியபின் உடைத்துப் பாரே! 340

பாரப்பா முன்போலே பத்து தோத்தம்
பரிவாக எரித்தெடுத்துப் பதனம் பண்ணி
சாரப்பா பணவிடைதான் நெய்தேனிற் கொள்ள
சார்வாக மண்டலங்கால் கொண்டா யானால்
சேரப்பா சூலைபதி னெட்டுந் தீரும்
தினவான புண்புரைகள் கிரந்தி தீரும்
வேழப்பா மேலூறல் அத்திரண மெல்லாம்
வெவ்வேறே தீருமடா இன்னங் கேளே! 341

இரசத்தைச் சுத்தி செய்து, குகை போல் செய்த கல்லுப்புக்குள் அதனை வைத்து வெயிலில் உலர்த்திக் கொள்க. பின் அதனை உப்பிட்ட சட்டிக்குள் வைத்து மேல் சட்டியினால் மூடி ஏழு சீலை மண் செய்து வெயிலில் உலர்த்திக் கொள்க. பின் அடுப்பேற்றி இரண்டு விறகினால் பன்னிரெண்டு மணி நேரம் எரிக்க தேங்காய் போன்று கெட்டியாய் இருக்கும். அதைப் பீங்கானில் போட்டு வெற்றிலைச் சாற்றாலாட்டி

வெயிலில் உலர்த்திக் கொள்க. பின் ஐந்து முறை உத்தாமணிச் சாறு விட்டு வெயிலில் வைத்தெடுத்து பொடித்துக் கொள்க.

அதில் பாதியை மட்டும் குப்பியிலிட்டு ஏழுசீலை மண் செய்து வாலுகையில் வைத்து ஒருவிறகு, இருவிறகு, மூவிறகு, கொண்டு 24 மணிநேரம் எரித்து ஆறினபின் எடுத்துப் பயன் படுத்தலாம்.

பூரத்தை 140 கி. எடுத்துப் பொடிசெய்து வெற்றிலைச் சாற்றில் விட்டு வெயிலில் காயவைத்து, அதில் பாதியைப் போட்டு, வாலுகையில் அடுப்பேற்றி 24 மணி நேரம் எரித்து ஆறியபின் உடைத்துப் பார்க்கவும்.

இவ்வாறே பத்துமுறை முன்சொன்னவாறே எரித்தெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்க. அதனை 488 மி.கி. எடுத்து நெய் அல்லது தேனில் நாற்பது நாட்கள் உட்கொள்ள பதினெட்டு வகை சூலை, புண்புரைகள், கிரந்தி, உடலூறல், எலும்புப் புண் ஆகியவை தீரும்.

காரீயச் செந்தூரம்

கேளப்பா காரீயச் செந்தூரங் கேளு
கெடியான காரீயம் பலந்தா னாலு
நாளப்பா பழச்சாற்றி லுருக்கிச் சாய்த்து
நலமான நல்லெண்ணை கோமியத்தில் ஏழு
தாளப்பா கோசலத்தில் ஏழுதிரம் தோய்த்து
தளமான காடியிலே உருக்கிச் சாய்த்து
ஆளப்பா ஒன்றுக் கேழுதிரம் சாய்த்து
அப்பனே பலம்நாலு சட்டியிலே வையே! 342

வைத்தப்பா ரசமதுதான் கால்தான் கூட்டி
வளமாக உறிக்கயிலே ஆவரைப் பஞ்சாங்கம்

....திதியிலே நறுக்கியே இடித்துக் கொண்டு
தளமாகப் போட்டதிலே வறுப்பா.....
....யத்திலே னாலுசாமம் வறுத்தா யானால்
நலமான செந்தூரம் அருணன் போலாம்! 343

ஆமப்பா னால்சாமம் வறுத்துப் போட்டு
அப்பனே நால்சாமம் வறுத்துக் கொண்டு
சாமப்பா செந்தூர மெடுத்துக் கொண்டு
தளமான தேன்நெய்யில் பணந்தா னுண்ண
போமப்பா பிரமியநோய் பெரும்பா டெல்லாம்
பொல்லாத கிருஷ்ணங்கள் போகும் சொன்னேன்
காமப்பா நீரிழிவு கடலே புக்குங்
கல்லாத கல்லடைப்பு தெறிக்கும் பாரே! 344

காரீயம் 140 கி. எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் உருக்கிச் சாய்த்துக் கொள்க. பின் நல்லெண்ணெய், கோமியம் இவற்றில் ஏழுநாள் ஏழுமுறை தோய்த்து காடியிலே உருக்கிச் சாய்த்துக் கொள்க. இரசம் 9 கி. சேர்த்து இடித்து ஆவாரைப் *பஞ்சாங்கத்தை உடன் சேர்த்து பன்னிரெண்டு மணிநேரம் வறுத்தால் சிவந்த அருணனின் நிறத்தை யொத்த செந்தூரமாகும்.

அத்தகு செந்தூரத்தை 488 மி.கி. எடுத்து தேன் அல்லது நெய்யில் உட்கொள்ள பிரமியம், பெரும்பாடு, நீரிழிவு, கல்லடைப்பு ஆகிய நோய்கள் தீரும்.

சந்திரோதயம்

பாரப்பா சந்திரோ தயமென்றால்
பறக்குமடா வியாதியெல்லாம் சொல்லக் கேளு
சாரப்பா பலம்ரெண்டு சீலை அரைக்கால்
தவறாமல் மால்தேவி அரையுங் கூட்டி

* இலை, பூ, காய், பட்டை, வேர்.

வேரப்பா லிங்கமரை செந்தூர மரைதான்
வெகுசுருக்காய் ரேக்கதுவு பலந்தா னொன்றே! 345

வொன்றப்பா அரைப்புக்குள் சாறு கேளு
உத்தமனே பழச்சாற்றில் செம்பரத்தப் பூபோட்டு
கன்றப்பா வெளுத்ததிலே நாள்தான் சென்றால்
கலங்காதே தெரிந்துநீ மருந்தில் விட்டு
வென்றப்பா சாமமது இருபதுமே யரைத்து
பொற்கையான் இருபத் தொன்று
சென்றப்பா அரைக்கயிலே துருசுக்குரு கேளு
பணவிடைதான் கூடப் போடே! 346

போட்டப்பா ரவியுலர்த்தி தானஞ் செய்து
......மருவிலே அரைவாசி போட்டு
காட்டப்பா சிலையது ஏழுஞ் செய்து
கனமாக வாலுகையி லடுப்பி லேற்றி
நீட்டப்பா தீபமது எட்டு சாமம்
நிலையான கமலவன்னி எட்டு சாமம்
ஆட்டப்பா காடாக்கினி ஆறு சாமம்
அப்பனே சிலாகையிட்டு கிண்டி பாரே! 347

பாரப்பா சிலாகைமுனை கரகரப்பு கண்டால்
பக்குவமென்றே தீயைநீ ஆற்றிப் போட்டு
சேரப்பா பூரண சந்திரனைப் போலே
திறமாகக் காந்தியதா யிருக்கும் பாரு
வாரப்பா உடைத்தெடுத்து பலமே தூக்கு
வகையாகப் பொடிசெய்து கஸ்தூரி கேளு
ஆளப்பா கழஞ்சியொன்று கூடப் போட்டு
அப்பனே கோரோசினைதான் கழஞ்சி யாமே! 348

ஆமப்பா கூடயிட்டு பொடிதான் செய்து
அப்பனே பரணிதனி லடைத்துக் கொண்டு
சாமப்பா பணவிடைதான் தேனில் கொள்ள
தப்பாது சன்னியென்ற மூலந் திரும்
வேமப்பா தோஷமது ஏழுந் திரும்
வெருளாதே சேட்டுமனோய் தொண்ணூற் றாறும்
வாமப்பா...வலியுந் திரும்
வளமான குப்பிவைத்து தியானஞ் செய்யே! 349

செய்யவே பூரணச்சந்தி ரோதய மென்றால்
திடுக்கிடுமே சுரமென்ற தறுபத்தி னாலு
கய்யவே காசமெட்டுங் கடலே புக்குங்
கனமான மேகநோ யிருபத் தொன்றும்
பய்யவே பிரமியங்க ளகண்டு போகும்
பாரப்பா திரேகமது சிவந்து மின்னும்
வைய்யவே வருஷமொன்று பணவீதங் கொள்ள
மகத்தான திரேகமது சந்திரன்போ லாமே! 350

நவச்சாரம் 70 கி., மனோசிலை 4 கி., அரிதாரம் 18 கி. செந்தூரம் 18 கி., தங்கரேக்கு 35 கி. இவற்றை எடுத்துக் கொள்க. எலுமிச்சம் பழச்சாற்றில் செம்பரத்தைப் பூவைப் போட்டு வெளுத்த பின் எடுத்துவிட்டு, அச்சாற்றினால் அறுபது மணிநேரம் அரைத்துக் கொள்க. பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் அறுபத்து மூன்று மணிநேரமும் அரைத்துக் கொள்க. 488 மி.கி. துருசுக் குருவை அதனுடன் போடுக. பின் வெயிலில் உலர்த்தி அதில் பாதியை எடுத்துக் கல்வத்திலிட்டு ஏழு சீலைமண் செய்து வாலுகா இயந்திரத்தில் வைத்துக் கொள்க. ஒரு விறகால் இருபத்து நான்கு மணிநேரமும் இரண்டு விறகால் இருபத்து நான்கு மணிநேரமும், மூன்று விறகால் பதினெட்டு மணி நேரமும் எரித்துக் கொள்க. பின் சிலாகை

யினால் மருந்தைக் கிண்டி பார்க்கும்போது கரகரப்பாய் இருந்ததென்றால் பக்குவமாயுள்ளது என்றெண்ணி தீயை நிறுத்திக் கொள்ள வேண்டும். சந்திரனைப் போல் இருக்கும் அம்மருந்தினை 35 கி. அளவு எடுத்து அதனுடன் கஸ்தூரி, கோரோசினை இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்துச் சேர்த்து பரணில் அடைத்துக் கொள்ள வேண்டும். அதில் 488 மி.கி. எடுத்துத் தேனில் உட்கொள்ள சன்னி வகைகள், ஏழு வகைத் தோடம், தொண்ணூற்றாறு வகை சிலேத்தும நோய் தீரும். பூரண சந்திரோதயத்தை உட்கொள்ள அறுபத்து நான்கு வகைச் சுரம், எண்வகைக் காசம், இருபத்தொரு வகை மேக நோய்கள், பிரமியம் ஆகியவை தீரும் 488 மி.கி. அளவு ஒரு வருடம் சாப்பிட உடல் சந்திரன் போல் ஒளி மிகுந்து காணப்படும்.

பின்னிணைப்பு

பாடல் முதற்குறிப்பு அகர முதலி

எண் - பாடல் எண்

அ

அரைத்திடுவாய் - 35

அளவாக - 105

அற்றுப்போம் - 206, 236

அறையுறேன் - 230

ஆ

ஆக்குவா - 150

ஆகிய - 2

ஆச்சப்பா - 70

ஆட்டப்பா - 60, 326

ஆட்டயிலே - 292

ஆட்டியே - 160, 193, 204 , 216, 266, 274, 296

ஆட்டுவாய் - 164

ஆதித்தன் - 16

ஆமப்பா - 43, 48, 68, 77, 87, 88, 95, 98, 104, 109, 114, 171, 180, 189, 197, 212, 224, 228, 234, 238, 242, 270, 281, 297, 304, 316, 320, 324, 332, 344, 349

ஆறான - 287

ஆறுமே - 202

இ

இடைதுடை - 21

இரங்கியே - 154

உ

உண்டைசெய்து - 55

உறிப்போம் - 231

ஊ

ஊசிபோல் - 23

ஊட்டியே - 129, 207

ஊத்தியே - 211

ஊறுமே - 165

எ

எட்டப்பா - 33

எடுக்கும் - 22

எண்ணவே - 149, 156, 159, 166

ஏ

ஏத்தப்பா - 310

ஏத்தியே - 323

ஏலமொடு - 208

ஏற்றிய - 19

ஒ

ஒன்றப்பா - 65, 173, 185

ஒன்றான - 82, 148, 329

ஓ

ஓடுமாம் - 178

ஓமமொடு - 79

க

கடிந்ததோர் - 17

கண்ணும் - 20

கரிமுக - 1

கருதியே - 158

கஷாயத்தி - 49

கா

காட்டப்பா - 347

காட்டிலே - 273

காணப்பா - 62, 64

காணாது - 141, 209

காயமொடு - 132

காயோடு - 199, 309

காரப்பா - 113, 328

காலமே - 13

காலான - 299

கி

கிண்டப்பா - 69

கிண்டியப்பா - 117

கு

குறித்திடும் - 15

குன்மவகை - 232

கூ

கூட்டடா - 110

கூட்டப்பா - 115, 190

கூட்டியே - 57, 144, 268, 301

கூட்டுவாய் - 67, 100, 124, 151, 168

கூறிப்போம் - 231

கெ

கெர்ப்பத்தில் - 229

கே

கேளடா - 56, 161, 195, 210, 217, 264, 267, 279, 282

கேளப்பா - 32, 36, 81, 97, 101, 106, 125, 137, 163, 174, 176, 182, 191, 192, 198, 237, 247, 250, 258, 260, 262, 285, 294, 295, 308, 312, 315, 325, 334, 337, 342

கொ

கொள்ளடா - 40

கொள்ளப்பா - 116, 226, 275, 340

கொள்ளவே - 92, 118, 123, 126, 142, 146, 191, 192, 254, 256, 269

சா

சாத்தக்கேள் - 138

சாத்தாலே - 42

சார்வாக - 78

சாரவே - 128, 170

சு

சுகம்பெற - 25

சுத்தியே - 283

சூ

சூட்டுடனே - 194

சூலைபோம் - 186

செ

செப்புறேன் - 135

செய்தப்பா - 331

செய்யப்பா - 45, 76, 84, 127, 140

செய்யவே - 350

சே

சேட்டும - 3, 18

சேட்டுமத்தில் - 11, 12

சேதியென்ன - 218

சேதியொன்று - 333

சேர்க்கயின்னங் - 66

சேர்த்தப்பா - 94

சேரப்பா - 120

சொ

சொல்லக்கேள் - 86, 271, 276

சொல்லிய - 27

த

தவறிப்போம் - 263

தள்ளவே - 39, 119, 134, 187

தா

தாளப்பா - 122

தான்மிகக் - 28

தானென்ற - 52, 93, 96, 221, 239, 243, 249, 251, 305, 317, 336

தானென - 30

தூ

தூக்கியே - 107, 225, 252

தூளிலே - 38

தெ

தெளிந்து - 179

தே

தேக்கான - 89

தேளப்பா - 223

ந

நலமாக - 136

நா

நாட்டியால் - 24

நாட்டியே - 131

நால்சாம - 265

நாலப்பா - 196

நாலாக - 257

நாலான - 322

ப

பங்கென்ன - 313

படியாக - 143

படியான - 167

பண்ணப்பா - 61, 112

பண்ணவே - 147

பண்ணியே - 46, 169

பத்தாக - 83

பத்தாகும் - 327

பா

பாகிலே - 103

பார்மனக் - 26

பாரப்பா - 31, 47, 53, 75, 102, 108, 184, 213, 227, 245, 255, 288, 290, 306, 318, 341, 345, 348

பி

பித்தத்தில் - 7, 8, 9

பொ

பொடித்ததனை - 54

போ

போச்சப்பா - 201

போட்டப்பா - 181, 222, 253, 272, 277, 300, 338, 347

போடப்பா - 261, 314

போடவே - 41

போமடா - 133

போமப்பா - 34, 37, 44, 58, 74, 91, 130, 139, 145, 205, 214, 240, 246, 248, 259, 298, 311

போற்றிய - 14

ம

மகிழவே - 162

மந்தமொடு - 85, 153

மா

மாண்டுபோம் - 284

மாறுமே - 280

மூ

மூடியே - 177

மூழ்கவே - 71

மூன்றப்பா - 235

ரெ

ரெண்டப்பா - 188

ரெண்டான - 72, 99, 155, 175, 203, 330

வ

வடித்ததனை - 200

வடித்திட்ட - 152, 157, 303

வா

வாங்கியே - 50, 111, 121, 183, 241, 293, 319

வாட்டிடும் - 10

வாத்தப்பா - 73

வாதத்தி - 29

வாதத்தில் - 4, 5, 6

வார்த்ததிலே - 80

வார்த்தப்பா - 90, 215, 233, 244, 307

வாரப்பா - 172, 302

வி

விட்டப்பா - 220, 339

வை

வைத்ததனை - 51

வைத்ததிலே - 59

வைத்தப்பா - 63, 286, 289, 291, 321, 335, 343

வைய்யப்பா - 278

வொ

வொன்றப்பா - 219, 346

இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை நூலகங்களில் விற்பனையாகும் நூல்களின் விலை விவரப்பட்டியல்

தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை			
வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
	ஓலைச்சுவடிப் பதிப்புகள்		
1.	கைமுறை வைத்தியம்	...	...
2.	அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி	400	80.00
3.	பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 1	500	78.25
4.	சித்த மருத்துவ அகராதி - பாகம் 1	...	...
5.	பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 2	800	250.00
6.	வர்மத் தொகுப்பு	700	150.00
7.	பதார்த்த குண சிந்தாமணி	700	150.00
8.	சரக்கு - சுத்தி செய்முறைகள்	300	60.00
9.	மருந்து செய்முறைகள்		90.00
10.	புலிப்பாணி வைத்தியம்	200	30.00
11.	நோயும் மருந்தும்	250	35.00
12.	சித்த மருத்துவ சிந்தாமணி		70.00
13.	அரிய சித்த மருத்துவ முறைகள்	300	60.00
14.	மூலிகை விளக்கம்	300	60.00
15.	அகத்தியர் மருத்துவம்	...	அச்சில்
16.	அகத்தீசர் வைத்திய சிந்தாமணி	...	80.00
17.	சித்த மருத்துவ அகராதி - பாகம் 2	400	65.00
18.	சித்த மருத்துவ அகராதி - பாகம் 3	350	55.00
19.	வைத்திய மூலிகை விரிவகராதி	...	50.00
20.	அகத்தியர் இரணநூல்	...	20.00
	பாட நூல்களும் பார்வை நூல்களும்		
21.	குணபாடம் - மூலிகை	800	300.00
22.	குணபாடம் - தாது சீவ வகுப்பு	800	250.00
23.	நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 1	700	200.00
24.	நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 2	200	25.00

வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
25.	நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 1	500	200.00
26.	நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 2	800	250.00
27.	சிறப்பு மருத்துவம்	500	220.00
28.	மகளிர் மருத்துவம்	450	160.00
29.	நோயில்லா நெறி	500	67.20
30.	சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும்	800	250.00
31.	சித்த வைத்தியத் திரட்டு	500	150.00
32.	சூல் மருத்துவம்	450	150.00
33.	அறுவை மருத்துவம்	500	150.00
34.	குழந்தை மருத்துவம் (பால வாகடம்)	800	210.00
35.	உடற்கூறு	1000	400.00
36.	நஞ்சு முறிவு நூல்	300	100.00
37.	உடல் தத்துவம்	450	75.15
38.	சித்த மருத்துவம் - பொது	800	250.00
39.	யூகி வைத்திய சிந்தாமணி	500	150.00
40.	தேரையர் யமக வெண்பா - பாகம் 1	300	80.00
41.	கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு	500	29.00
42.	நல்வாழ்விற்கு ஓர் நல் மருத்துவம்	50	3.00
43.	பிணி உடல் தேர்வக ஆய்வு முறைகள்	50	30.30
44.	தோற்றக் கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்	500	225.00
45.	சித்த மருத்துவாங்கச் சுருக்கம்	800	300.00
46.	சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும்		25.00
	SIDDHA MEDICAL BOOKS IN ENGLISH		
1.	A Compendium of Siddha Doctrine	500	200.00
2.	Introduction to Siddha Medicine	50	11.35
3.	Simple Home Remedies	50	2.70

வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
4.	Hospital Siddha Pharmacopoeia in Indian Medicine	250	39.00
5.	History of Siddha Medicine	800	159.00
6.	Siddha Science of Longevity and Kalpa Medicine	250	25.00
7.	Siddha Toxicology	500	44.00
8.	Siddha Principles of Social & Preventive Medicine	500	66.00
9.	Siddha Materia Medica (Mineral & Animal Division)	...	250.00
10.	Siddha Medicine - General - Part - I	...	அச்சில்
11.	Special Medicines in Siddha		
12.	Therayar Maha Karisal		70.00
13.	Diseases of Treatment in Siddha Part - I	...	அச்சில்
14.	Anuboga Vaidya Navaneetham Part - I		70.00
15.	Anuboga Vaidya Navaneetham Part - II		90.00
16.	Principles of Diagnosis in Siddha Part - I	...	அச்சில்
17.	Theraiyar's Formulary of Medicated Oils	...	அச்சில்
	SIDDHA MEDICAL DICTIONARY		
18.	T.V. Sambasivam Pillai - Vol. I	2500	623.00
19.	T.V. Sambasivam Pillai - Vol. II - Part I	500	300.00
20.	T.V. Sambasivam Pillai - Vol. II - Part II	450	200.00
21.	T.V. Sambasivam Pillai - Vol. III	650	81.00
22.	T.V. Sambasivam Pillai - Vol. IV - Part I	800	156.00
23.	T.V. Sambasivam Pillai - Vol. IV - Part II	800	151.50
24.	T.V. Sambasivam Pillai - Vol. V	1200	480.00
	ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)		
1.	சரக சம்ஹிதை பாகம் - 1	...	அச்சில்
2.	சரக சம்ஹிதை பாகம் - 2	1400	253.65
3.	சரக சம்ஹிதை பாகம் - 3	1700	15% Discount 390.00
4.	சுசுருத சம்ஹிதை - பாகம் - 1	1500	390.00
5.	சுசுருத சம்ஹிதை - பாகம் - 2	1400	272.00

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ பெற்றுக் கொள்ளலாம். பதிவுத் தபாலில் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகங்களின் விலையோடு தபால் கட்டணத்தையும் சேர்த்து பண விடை (எம்.ஓ.) அல்லது டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். வி.பி.பி.யில் அனுப்ப இயலாது. 2 கிலோவுக்கு மேல் எடையுள்ள புத்தகங்கள் தபாலில் அனுப்ப இயலாது. தபால் கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

தபால் கட்டணம்

முதல் 500 கிராமுக்குள் - ரூ. 36.00

500 கிராமுக்கு மேல் ஒவ்வொரு 50 கிராமுக்கும் - ரூ. 16.00

பணம் அனுப்ப வேண்டிய முகவரி

1. இயக்குநர்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
அரும்பாக்கம், சென்னை - 600 106.
தொலைபேசி : 044 - 2614 3500 / 2621 6244 / 2628 1563

2. முதல்வர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை
திருநெல்வேலி - 627 002.
தொலைபேசி : 0462 - 2572736 / 2572737 / 2572738